# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028 ஐப்பசி 08 சனிக்கிழமை(25-10-1997) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:21

# பெரும் அமளி துமளிக்கு மத்தியில்

# தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது!

## சபைக்கூட்டம் நவ.5க்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 25

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் அரசு சமர்ப்பித்த திட்டங்கள் அரசதரப்பு யோசனையாக நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, நாடாளுமன்றத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் நிலவின.

அரை மணித்தியாலம் மட்டும் கூட்டம் நடைபெற்ற நிலையில் சபை ஒத்திவைக்கப்பட்டது.

சபை நேற்று பெரும் பரபரப்பின் மத்தியில் காலை 9.30 மணிக்குக் கூடியது.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அரசின் யோசனைகள் அடங்கிய திட்டத்தின் நகலை சபையில் சமர்ப்பித்தார்.

அப்போது ஐ. தே. கட்சி உறுப்பினர்களிடமிருந்து எதிர்பாராத விதமாக எதிர்ப்புக் குரல்கள் கேட்க ஆரம்பித்தன.

எந்த நிலைக்கட்டளையின் அடிப்படையில் இந்த யோசனைகள் சபையில் சமர்ப்பிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. நிலைப்பாட்டில் மாற்றம்

## பீரிஸ் ஆச்சரியம் தெரிவிப்பு!

அரசின் தீர்வுத் திட்டம் குறித்து ஐ. தே. கவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், இது தமக்குப்பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் நீதி, அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கேள்வி கேட்டு குழப்பம் விளைவித்தபோதே அமைச்சர் பீரிஸ் இப்படிக் கூறினார்.

இந்த யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதன் கடைசிக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்திருந்தது என்றும் —

றொனி டி மெல், ஏ. ஸி. எஸ். ஹமீத், யரான் பெர்னாண்டோ, கே. எம். சொக்ஸி போன்றோர் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர் என்றும் — அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பதால் உடனடியாகத் தன்னால் அறிக்கை எதனையும் விடுக்க முடியாதுள்ளதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (இ-5-3-21)

## அரசின் யோசனைகள் மும்மொழிகளிலும்!

கொழும்பு, ஒக். 25

தீர்வுத் திட்டம் தொடர்பான அரசின் யோசனைகளை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மும்மொழிகளிலும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அமைச்சர் பீரிஸ் தமது யோசனைகளுடன் இணைப்பாக ஐ. தே. கவின் மூன்று பக்க யோசனை அறிக்கையையும்—

ஈ. பி. டி. பி. அமைப்பின் 19 பக்க யோசனை அறிக்கையையும்—

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கால்ப்பக்கயோசனை அறிக்கையையும்—

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒருபக்க யோசனை அறிக்கையையும்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் பிரிவின் மூன்றுபக்க யோசனை அறிக்கையையும்—

ஜே. வி. பியின் ஒருபக்க யோசனை அறிக்கையையும் — நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். (இ-3)

## அமைச்சர் பீரிஸ் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் ஈ. பி. டி. பி. பங்குபற்றவில்லை

கொழும்பு, ஒக். 25

அரசின் யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் ஈ. பி. டி. பி. அமைப்பு பங்குபற்றவில்லை.

நாடாளுமன்றத்தில் அரசின் யோசனைகளைச் சமர்ப்பிக்க கடந்த செவ்வாய்க் கிழமை சகல கட்சிகளும் அங்கீகாரம் வழங்கியிருந்த போதும் —

நேற்று நாடாளுமன்றத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு வாக்கெடுப்பு நடத்தி தீர்மானம் எடுத்திருக்கவேண்டும்

### ரவி கருணநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

தீர்வுத் திட்டம் தொடர்பான யோசனைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருக்க வேண்டும். இவற்றை அரசு சமர்ப்பிக்கும் யோசனைகள் என்று அமைச்சர் பீரிஸ் கூறுவதும் நியாயமானது அல்ல.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கிடையில் நேற்று தீர்வு யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமயம் கூச்சலிட்டு குழப்பம் விளைவித்தோரில் ஐ.தே.கவின் பின்வரிசை உறுப்பினர்களே முக்கிய பங்கு வகித்தனர் என்று கூறப்படுகிறது.

இவர்களுடன் ரவி கருணநாயக்காவும் சேர்ந்து கொண்டார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ-3-21)

## ஆறு மாதங்கள் அவகாசம் தந்தால் ஐ. தே. கவும் யோசனை சமர்ப்பிக்கும்

### பத்திரிகையாளர் மாநாட்டில் றொனி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளில் 10 சதவீதமே இனப்பிரச்சினை விவகாரம் அடங்கி உள்ளது. ஏனையவை ஜனநாயகம் பற்றியே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு மேலும் ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கினால் ஐ. தே. கவும் தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கும்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரும் தெரிவுக்குழு உறுப்பினருமான றொனி டி மெல் மேற்கண்டவாறு கூறினார்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசின் யோசனைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் றொனி டி மெல் பேசினார்.

அரசின் யோசனைகள் நிரந்தரமானதொன்றாக இருக்க வேண்டுமேயன்றி ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டும் நடைமுறையில் இருக்கும் ஒன்றாக இருக்கக் கூடாது.

அரசாங்கம் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கக் கூடாது. தீர ஆலோசித்ததன் பின்பே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கனகராயன்குளம் அருகே வியாழன் மூன்று முனைகளில் கடும் சண்டை!

கொழும்பு, ஒக். 25

கனகராயன் குளத்தில் நேற்று முன்தினம் காலை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மூன்று முனைகளிலும் கடும் சண்டை நடைபெற்றது.

இச் சண்டையில் மோட்டார் குண்டுகளும், சிறு ஆயுதங்களும் படையினரால் பயன்படுத்தப்பட்டன.

கனகராயன் குளத்துக்கு அப்பால் கரப்புக்குத்தி என்னும் இடத்தில் இடம்பெற்ற மோதலில் 3 படையினர் உயிரிழந்தனர். 11 படையினர் காயமடைந்தனர். இதில் 50 புலிகள் உயிரிழந்ததாக அரசுத்தரப்பு தெரிவித்தது.

ஒலுமடுச் சந்தியில் இடம்பெற்ற மற்றுமொரு சண்டையில் விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருவர் உட்பட 3 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு மோதலில் ஓர் அதிகாரி உயிரிழந்தார். 5 படையினர் காயமடைந்தனர்.

காலை முதல் இரவு வரை இந்த மோதல்கள் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி இளைஞன் கைது!

கொழும்பு, ஒக். 25

கொழும்பு வெள்ளவத்தை விடுதி ஒன்றில் தங்கியிருந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து விடுதலைப் புலிகளின் கடிதத் தலைப்புகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி வாசியான இராசலிங்கம் மோகன் என்ற இந்த இளைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என வெள்ளவத்தைப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய YAMAHA ஓர்கன் [PSS 26] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், வீணா கானம், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [50724]

இரண்டு வயது நிரம்பிய இரண்டு ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. கணேசலிங்கம், கோண்டாவில் வடக்கு, மத்திய கிராம முன்னேற்றச்சங்க விளையாட்டு மைதான ஒழுங்கை, கோண்டாவில். [50729]

நல்ல நிலையில் பாவனையில் உள்ள 20 அங்குல SONY கலர் T. V கள் 2032, 2072 இரண்டு உடன்விற்பனைக்கு உண்டு. 27, (B - 238) முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குப்பின்னால்). [50727]

இல. 9, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் 5 அறைகள் கொண்ட ஒரு கல்வீடு மற்றும் உசன் மிருசுவிலில் தென்னங்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இராஜகுலேந்திரம், NO: 9,3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (50740)

விறாத்துக் குஞ்சுகளும் புறோயிலர் கோழிகளும் தொகையாகவோ சில்லறையாகவோ பெற்றுக் கொள்ள: அண்ணாபாம், இணுவில். (50747)

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் EN 9832 (1000 ENGINE) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. சடாட்சரநாதன், 49, அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (50750)

## சமாதானம் வேண்டி

சித்திரைப் புத்தாண்டுவரை வெள்ளிக்கிழமை தோறும் விசேட பிரார்த்தனைகளையும், அறநெறிப் பயிற்சிகளையும் கோயில்கள் தோறும் நடத்துக. இந்து இளைஞர் பேரவை, நல்லூர், யாழ்ப்பாணம். (50714)

## சிங்கள வகுப்பு

புதிய வகுப்புகள் 25-10-97 அன்று ஆரம்பம். ஆசிரியர்:- சகாதேவன் 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [50678]

## தேவை

கணக்கியலைப் பாடமாகக் கொண்ட உயர்தரப் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்தவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நேரில் சமுகம் தரவும். இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (50748)

## தவறிவிட்டது

அந்தோனிப்பிள்ளை மரியை ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 3 ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (50745)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. விலை ரூபா 160. இடம்: இல. 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் அருகில்) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (50739)

## கனவும் நிஜமும்

இன்றிரவு ஏழு மணிக்கு வானொலியில் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கனவும் நிஜமும் நாடகத்தை கேட்டு மகிழுங்கள். அவரது நாடகம் எழுதுவது எப்படி? நூல் ரூபா 50/- (50751)

## TRANSLATIONS

German Language English, Tamil Translations, Sabanayagam 'Rudi Cot' 33, Kandy Road, Jaffna. (50756)

# பிறந்தநாள் வாழ்த்து

**M. பிரியங்கா ♥♥♥ M. தனுக்ஷன்**

**[13-09-1997]** 5 ஆவது

**[25-10-1997]** 2 ஆவது

K. மச்சேந்திரகுமார் விமலாதேவி தம்பதிகளின்
செல்லப்பிள்ளைகள் பிரியங்கா, தனுக்ஷன்

தங்கள் பிறந்தநாளை இன்று 25-10-97 சனிக்கிழமை தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை அப்பா, அம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று, சீரும் சிறப்புடனும் வாழ இத்தியடி விநாயகர் அருள் வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

K. மச்சேந்திரகுமார்,
[ யாழ். பல்கலைக்கழகம் ]
M. விமலாதேவி.

''ஜெயவதனி வாசா''
பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[ 50718 ]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 - 03 - 1952

மறைவு: 25 - 10 - 1994

## அமரர் பொன்னையா பாலச்சந்திரன்

திதி: 25 - 10 - 1997

எமது நெஞ்சில் நிறைந்தவனே! உண்மை அன்பில் உயர்ந்தவனே! நீ நிழல் தருவாய் என்று நாம் இருக்க நீ தனி நிழல் நாடிச் சென்று விட்டாய் ஐயா! கண்ணில் சிந்தும் நீர்த்துளியால் கலங்கி எம துள்ளம் தடுமாறுதையா! உன் நினைவால் கழிந்த ஆண்டுகள் மூன்று போக அழுது துயர் ஆடி வாழும் நாள் எத்தனையோ?

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரிகள், உறவினர்கள்.

3 ஆம் கட்டையடி,
கல்வியன்காடு.

(50735)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 19 — 03 — 1944

உதிர்வு: 25 — 09 — 1997

## அமரர் கு.வி. அமிர்தலிங்கதுரை (ஞானசுரபி)

உரிமையாளர்,
கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம், கொழும்பு.

இன்று 25 - 10 - 97 அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த தியாகராஜா
(மைத்துனர்)

386, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

(50743)

# தீபாவளி விசேட மலிவு விற்பனை!

## சீமாட்டி (புடைவைக் கடல்)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சீமாட்டி புடைவைக்கடலின் அனைத்துப் புடைவைகளும் என்றும் எங்கும் கிடைக்காத விசேட மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

சீத்தை 61 00 பப்பிளின் 57.50

1. புத்தம் புதிய டிசைன்களில் சாறி வகைகள்
   ரூபா 300 இலிருந்து 70) வரை
   காதல் தேசம், மின்சாரக் கனவு, வன்ஸ்மோர், இருவர், ராஜ்குமாரி, கீத்மாலா, றசியன் பியூட்டி, சில்க்பியூட்டி, தேவத்தாய், றோமன் லேடி, பவுடர் ரச், லண்டன் பாஷன், சன்சில்க், பட்டர்பிளை சாறி வகைகள் இன்னும் பலப்பல சாறித்தினுசுகள்!
2. ஒறிஜினல் கிப்ஸ் சாரங்கள், பெனியன்கள், லேஞ்சிகள்!
3. பாபறா, ஜோஜோ, இன்ரகூலர். பட்டர்சில்க், செத்துணிவகைகள்
4. சேட்டிங், சூட்டிங் வகைகள்
5. றெடிமேட் அயிட்டங்கள்

**இன்னும் பலப்பல தினுசுகள்!**

இன்றே நாடுங்கள்;

## சீமாட்டி

புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 11 — 1937

மறைவு: 30 — 05 — 1997

## அமரர் நாகலிங்கம் ஆறுமுகம்

(பணியாளர், நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்)

கடமைகளை நன்றே செய்தீர்கள்
சுமைகளை நன்றே சுமந்தீர்கள்
இன்பம் அடைகின்ற வேளையில்
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீர்களே...!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்.
நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்.

(50741)

# தற்கொலைத் தாக்குதல்கள் நடத்த மேலும் இரு அணிகள் கொழும்பில்?




**பாசுபதன்**

**1996** ஜனவரி 31 ஆம் திகதி கொழும்புக் கோட்டையில் உள்ள மத்திய வங்கிக் கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஏற்படுத்திய பரபரப்பு — அதிர்ச்சி—பதற்றம் போன்றவற்றை, கடந்த பூரணை தினத்தன்று கொழும்பு கோட்டை உலக வர்த்தக மையத்துக்குப் பக்கத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் ஏற்படுத்தவில்லை என்பது உண்மைதான்.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட உயிரிழப்பு, படுகாயங்கள் போன்றவை உலக வர்த்தக மையம் மீதான தாக்குதலின் போது ஏற்படவில்லை என்பதும் சரியானதுதான்.

ஆனால் தாக்குதலின் தீவிரம், லாவகமான திட்டம், அதனால் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பு, எதிர்த்தரப்புக்குக் கிடைத்த வெற்றி அல்லது லாபம் ஆகியவற்றைப் பொறுத்தவரை மத்திய வங்கிக் குண்டுத்தாக்குதலிலும் விட பின்னையது மிகக் கூடுதலானதாகும்.

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றினால் சுமார் ஆயிரத்து அறுநூறு கோடி ரூபா (பன்னிரண்டு கோடி அமெரிக்க டொலர்) செலவில் சோடியாக 39மாடிகளைக்கொண்ட இரட்டைக் கோபுர கட்டடத் தொகுதியாக (TwinTowers) உலக வர்த்தகமையம் கட்டப்பட்டு கடந்த 12 ஆம் திகதிதான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

முன்னைய தாக்குதலில் சேதமடைந்த மத்திய வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, முதலீட்டுச் சபை, தொலைத் தொடர்பு அமைச்சு, பொது நிறுவனங்கள் சீரமைப்பு ஆணைக்குழு ஆகியவை உட்பட நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான அமைப்புகள் அனைத்தும் இந்தக் கட்டடத் தொகுதிக்குள்தான் இயங்கத் தொடங்கின.

இதனால் இந்தக் கட்டடத் தொகுதிக்கு அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

மத்திய வங்கி மீது நடத்தப்பட்டது போன்ற பெரும் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய தயார் நிலையில் ஆயுதங்கள், வெடிகுண்டுகள் மற்றும் ஆளணிகளுடன் புலிகளின் நான்கு தாக்குதல் அணிகள் — தனித்தனியாக இயங்கும் செயல் திறமையுடன் — தலைநகருக்குள் ஊடுருவியிருப்பதாக ஏற்கனவே பாதுகாப்புப் பிரிவினருக்கு உளவுத் தகவல்கள் கிடைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

அத்தகைய அணி ஒன்று மறைத்து வைத்திருந்ததாகக் கருதப்படும் ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளே சில மாதங்களுக்கு முன்னர் இரத்மலானையில் கண்டு பிடிக்கப்பட்டதாக அரசுத்தரப்பில் கூறப்பட்டது.

இரத்மலானை விமானத் தளத்தின் மீது பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இந்தத் தாக்குதல் அணி அனுப்பப்பட்டிருந்ததாகவும் —

அதற்காக இரத்மலானையில் உளவு பார்க்கச் சென்ற இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து, அந்தத் திட்டம் அம்பலமானதுடன், அத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தயாராக — வீடொன்றில் மறைத்து — வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்கள், வெடி குண்டுகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டதாகவும்—

பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

கொழும்புக்குள் ஊடுருவிய புலிகளின் எஞ்சிய மூன்று தாக்குதல் அணிகளில் ஒன்றே தனக்குரிய இலக்கின் மீது—உலக வர்த்தக மைய கட்டடத் தொகுதி மீது—கடந்த 15 ஆம் திகதி— பௌர்ணமி தினத்தன்று — அக்கட்டடம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டு சரியாக 3 நாள்களின் பின் — வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

தலைநகருக்குள் ஊடுருவிய மற்றைய இரு தாக்குதல் அணிகளும் எங்கே மறைந்துள்ளன? எப்போது அவை தாக்குதல் நடத்தப் போகின்றன? அவற்றின் இலக்கு என்னென்ன? — தலை நகரப் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டு கேட்கும் கேள்வி இதுதான். இதைக் கண்டுபிடிக்க ஒரு துப்புக் கிடைக்காதா என்பதுதான் அவர்களின் நப்பாசை.

மத்திய வங்கிக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது சுமார் இருநூறு கிலோ வெடிமருந்து பயன்படுத்தப்பட்டதாகக் கணிப்பிடப்பட்டது. ஆனால் கடந்த பௌர்ணமியன்று உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது 300 முதல் 350 கிலோ வெடிமருந்து பயன்படுத்தப்பட்டிருப்பது பூர்வாங்க ஆய்வுகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது. அதாவது இரட்டிப்பு மடங்கு வெடிபொருள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

என்றாலும் மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட உயிரிழப்பு, காயங்கள் இத்தாக்குதலினால் ஏற்படவில்லை.

முன்னைய தாக்குதலில் இருநூறு பேர்வரை உயிரிழந்தனர்; ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்; பல டசின் கணக்கானோர் பார்வையிழந்தனர்.

தற்போதைய தாக்குதல் தீவிரம் கூடியதாக இருந்தாலும் மனித இழப்புகளைத் தவிர்க்கும் வகையில் இடம், நேரம், முறை ஆகியவை திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பதால் முன்னைய அளவு உயிரிழப்புகளோ, ஆள்சேதமோ ஏற்படவில்லை.

என்றாலும் உலக வர்த்தக மையத்துக்கும் பக்கத்திலிருந்த கலதாரி மெரிடியன் ஹோட்டல் போன்றவற்றுக்கும் ஏற்பட்ட சேதம் மிக அதிகமாகும்.

உலக வர்த்தக மையத்தின் மூன்றாவது மாடியும் அதற்கு மேல் உள்ள மாடிகளுமே அதிகம் சேதமடைந்துள்ளன. 18 ஆவது மாடிக்கு மேல் உள்ளவற்றில் அதிகளவு சேதம் ஏற்படவில்லை.

உலக வர்த்தக மையத்தின் உள் கட்டமைப்பு தகர்ந்து விடாவிட்டாலும் அதற்கு ஏற்பட்ட சேதம் அளவிட முடியாததாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்கள் சேதங்களை நேரில் பார்வையிட்ட கட்டட நிபுணர்கள்.

மத்திய வங்கிக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதலின் போது மத்திய வங்கிக்கு 80 லட்சம் அமெரிக்க டொலர் வரை சேதம் ஏற்பட்டது. ஆனால் இப்போது உலக வர்த்தக மையத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அதனைப் போன்றுபல மடங்காக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

பிந்திய தாக்குதலினால் ஏற்பட்ட சேதம் அளப்பரியது என்பதை ஜனாதிபதியே ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

நாட்டின் மிக முக்கிய பொருளாதார இலக்கைத் தாக்குவதில் தீவிரவாதிகள் வெற்றி கொண்டிருப்பதாகவும் —

எனவே தலைநகரைப் பாதுகாப்பதற்கு மிக வலுவான பாதுகாப்புத் திட்டம் ஒன்றுநடைமுறைப்படுத் தப்பட வேண்டும் என்றும் —

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கூறியதாகத் தெரிகின்றது.

இத்தாக்குதலினால் உல்லாசப் பயணத்துறை, வெளிநாட்டு முதலீடு ஆகியவற்றுக்கு ஏற்படப் போகும் இழப்பு நாட்டின் பொருளாதாரத் துறையைப் பொறுத்த வரை அளவிட முடியாததாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

மேற்படி கட்டடத்தொகுதியில் — மத்திய வங்கியில் இருந்த — கம்பியூட்டர்கள் பல அதிர்ச்சியால் செயல் இழந்து போய்விட்டன.

இதே நிலைதான் திறைசேரிக்கும்.

இதனால் அடுத்த மாதம் முற்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய வரவு— செலவுத்திட்டம் சம்பந்தமான இறுதி முடிவுகளை எடுக்க முடியாத இக்கட்டு நிலை அரசுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

உலக வர்த்தக மையத்தின் எல்லையில் அமைந்திருந்த கலதாரி மெரிடியன் ஹோட்டலின் வாகனத் தரிப்பிடத்துக்குள் நுழைந்தே குண்டுத் தாக்குதலை தீவிரவாதிகள் நடத்தியிருக்கின்றார்கள்.

உலக வர்த்தக மையத்தில் பாதுகாப்பு மிகத் தீவிரமாக இருந்ததாகவும் —

அருகிலிருந்த கலதாரி மெரிடியன் ஹோட்டலின் பாதுகாப்பில் தளர்வு நிலை காணப்பட்டதால் அதனைச் சீர்செய்யும்படி உலக வர்த்தக மைய அதிகாரிகள் ஹோட்டல் நிர்வாகத்திடம் கோரியிருந்தனர் எனவும் —

தற்போது தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

தளர்வைப் பயன்படுத்தி ஊடுருவி தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

அண்மையில் கலதாரி மெரிடியன் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்கு பங்குபற்றச் சென்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஹோட்டல் அதிகாரிகளைச் சந்தித்து ஹோட்டலின் வாகனத் தரிப்பிடத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும்படி ஆலோசனை கூறியிருந்தார் என்றும் ஒரு பத்திரிகைத் தகவல் தெரிவிக்கின்றது.

அதன் பின்னர் ஹோட்டலின் வாகனத் தரிப்பிடத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதோ, இல்லையோ, வாகனத் தரிப்பிடப் பகுதியில் கடமையில் இருந்த மூன்று காவலர்களையும் (ஒருவர் முன்னாள் கடற்படைச் சிப்பாய், மற்றொருவர் முன்னாள் இராணுவச் சிப்பாய், மூன்றாம்நபர் முன்னாள் பொலீஸார்) சுட்டுக் கொன்றுவிட்டு ஊடுருவியிருக்கின்றார்கள் தாக்குதற்காரர்கள்.

★ ★ ★

வன்னி களநிலையைத் தொடர்ந்து அரசுப் படைகளுக்கு திருப்திதராத நிலையிலேயே உள்ளது.

பருவ மழை பெய்யத் தொடங்கி விட்டது. இனித்தான் அரசுப் படைகளுக்கு உண்மையான சோதனைக் காலம் ஆரம்பமாகுகின்றது.



வன்னிச் சமரில் கைப்பற்றிய டாங்கியுடன் புலிகள்

கண்டி வீதி வழியே முன்னேறிய படைகள் புளியங்குளம் சந்தியைக் கைப்பற்ற முடியாமல்— சந்திக்கு சில கிலோ மீற்றர் தொலைவில் —கடந்த இரு மாதகாலமாக நகர்வின்றி முடங்கிய நிலையில்— தரித்து நிற்கின்றன.

பெரும் ஆளணி, ஆயுத தளபாடங்களுடன் புளியங்குளத்தைக் கைப்பற்ற பல முனைகளில்—பல தடவைகள் —அரசுத்துருப்புகளால் எடுக்கப்பட்ட முயற்சிகள் ஆளணி, ஆயுத இழப்புக்களை வாங்கித்தந்தனவே தவிர கிஞ்சித்தும் வெற்றியைத் தேடித் தரவில்லை.

புளியங்குளத்தை நேரடியாக கண்டி வீதி வழியாகச் சென்றடைய முடியாத துருப்புக்கள் அதற்கு மேற்குப் பக்கத்திலும் சுற்றி வளைத்து கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டதும்—

தீயைத் தீண்டிய செயலாகக்கையைச் சுட்டுக் கொண்டு பின்வாங்கியதே அந்த முயற்சிகளின் பலன் என்பதும்—

சமர்க்களம் வாசகர்களுக்குத் தெரிந்ததே.

இந்த சுற்றி வளைப்புத் தாக்குதலுக்கு முயற்சித்த அரசுத் துருப்புக்கள் புலிகளின் படையணிகளால் சுற்றி வளைக்கப்பட்டது பற்றிய மேலதிக தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன.

புளியங்குளத்துக்கு மேற்கே நயினாமடுவிலிருந்து முன்னேற முயற்சித்த படையணிகளை அதிகம் எதிர்ப்புக் காட்டாமல் கரப்புக்குத்தி வரை முன்னேறுவதற்கு புலிகள் அனுமதித்தனர் என்றும் —

அது புலிகள் அரசுப் படைகளுக்கு விரித்த தந்திரோபாய வலை என்றும் தற்போது கூறப்படுகின்றது.

கரப்புக்குத்தி வரை முன்

(4 ஆம் பக்கம் பார்க்க)



குண்டுவெடிப்பில் சேதமுற்ற கலதாரி மெரிடியன் ஹோட்டலின் முன்புறம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தற்கொலைத் தாக்குதல்...

(மூன்றாம் பக்கத்தொடர்)

னேறிய படைகள் அங்கு ஒரு விநியோக மையத்தை நிறுவிக் கொண்டு, அங்கிருந்து கனகராயன்குளத்தை நோக்கி ஒரு பிரிவும், கரிப்பட்ட முறிப்பை நோக்கி ஒரு பிரிவும் நகரத் தொடங்கின.

இவ்வாறு கரப்புக்குத்தி வரை ஓரணியாக — பலம் மிக்க சேனையாக — முன்னேறிய படைகள் பின்னர் அங்கு பிரிந்து இரண்டு அணிகளாக மேலும் சில கிலோ மீற்றர் முன்னேறுவதற்கு அனுமதித்தால் மூன்று இடங்களிலும் (கரப்புக்குத்தி, கரிப்பட்ட முறிப்பு, கனகராயன் ஆறை அண்டிய விஞ்ஞான குளம் பகுதி) படைகளின் பலம் நலிவுறும் என எதிர்பார்த்து புலிகள் காத்திருந்தார்கள்.

மூன்று பகுதிகளிலும் படை நிலை கொண்ட பின்னர் ஒரேசமயத்தில் மூன்று பிரதேசம் மீதும் புலிகள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்திருக்கின்றார்கள்.

விஞ்ஞானகுளம் சந்தி, கரப்புக்குத்தி ஆகிய பகுதிகளில் இருந்த படையினர் தமது நிலைகளை விட்டுப் பின்வாங்கி நயினாமடு பெரிய மடுப் பகுதிக்கு ஒதுங்கினர்.

கரிப்பட்ட முறிப்பு பகுதியில் தனியாக துண்டிக்கப்பட்ட படைகள் அடர்ந்த காட்டுக்குள் விநியோகம் இன்றி சிக்கியிருப்பதாகவும் —

அவர்களைப் புலிகள் சுற்றிவளைத்திருப்பதாகவும்—

கடந்த வாரம் வன்னிக் களத்திலிருந்து கிடைத்த. தகவல்கள் தெரிவித்தன ஆனால் அரசுத் தரப்புச் செய்திகள் இந்த விவகாரத்தை அமுக்கி வாசிக்கின்றன.

கரப்புக்குத்தியிலிருந்த படையினரின் ஆயுத விநியோக மையம் புலிகளிடம் வீழ்ந்தது குறித்து முன்னைய சமர்க்களம் கட்டுரைகளிலும் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விநியோக மையத்தைக் கைப்பற்றியதன் மூலம் மரபுப் போரில் தமது பலத்தை பன்மடங்கு பெருக்கும் வாய்ப்பு புலிகளுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தத்தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுதத் தளபாடங்களில் முக்கியமான சில வருமாறு :-

★ 81 எம். எம். மோட்டார் ஷெல் — 3,284

★ 60 எம். எம். மோட்டார் ஷெல் — 2,851

★ ஆர். பி. ஜி. ஷெல் — 966

★ நேட்டோரவைகள் — 35 ஆயிரத்து 715

★ 50 கலிபர் ரவைகள் — 1,120

★ பி. கே. ரவைகள் (லிங்குடன்) — 5,273

★ 50 கலிபர் லிங்குகள் — 7,330

★ ரவைகள் — 4லட்சத்துக்கு அதிகம்.

★ 50 கலிபர் துப்பாக்கிகள் — ஏழு

★ இரவுப் பார்வைக் கண்ணாடிகள் — ஏழு

★ மோட்டார் லோஞ்சுகள் — 1,781

★ ரீ56 ரைபிள்கள் — 28

★ பாகிஸ்தானின் தயாரிப்பு பி. கே. மோட்டார் லோஞ்சுகள் மற்றும் அதற்கான 13 ஆயிரத்து நூறு மோட்டார் ஷெல்கள்.

இது தவிர, 12.7 எம். எம். இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட — குளிரூட்டப்பட்ட — நவீன துருப்புக் காவி கவசவாகனம் — 1, பவள் கவசவாகனம் — 1, லாண்ட்றோவ — 1, மூன்று டிரைக்டர்கள், எட்டு புத்தம் புதிய (D 4) ரக புல்டோஸர்கள், ஒரு பிக்கப், ஒருடிறக், ஒரு பஸ், ஒரு பாரம் தூக்கி ஆகியவை உட்பட பல வானங்களையும் புலிகள் அள்ளிக் கொண்டிருக்கின்றனர்.

வன்னி நடவடிக்கையின் போது டாங்கிகள், கவச வாகனங்கள் போன்றவற்றை ஏற்கனவே புலிகள் கைப்பற்றியிருக்கின்றார்கள். ஆனால் புல்டோஸர்கள் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவை.

மிதிவெடிகள், பொறிவெடிகள் பொருத்தப்பட்ட அரண்களையும், நிலப்பிரதேசத்தையும் இழப்பின்றி துப்புரவு செய்வதற்கு இந்த புல்டோஸர்கள் உதவக் கூடியவை. அத்தகைய புல்டோஸர்களில் எட்டே புலிகளின் கைகளில் சிக்கியிருக்கின்றன.

கரப்புக்குத்தியில் அமைக்கப்பட்ட படையினரின் விநியோக மையம் தாக்கப்பட்டதால் புலிகளின் மரபு வழி சமருக்கான பலம் விரிவடைந்திருக்கின்றது. வன்னி சமரின் ஆயுதபல சமநிலையை இது தலைகீழாக மாற்றக்கூடும்.

★ ★ ★

## மூதூரில் படை முகாம்களுக்கு மூடு விழா

மக்களதும் பத்திரிகை மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களினதும் பார்வை கொழும்புக் குண்டு வெடிப்பிலும் வன்னிச் சமரிலும், அதிகாரப் பகிர்வுத் திட்டத்திலும் இருக்க —

கிழக்கில் மூதூர்ப் பிரதேசத்தில் இருந்த இராணுவத்தின் எட்டு முகாம்கள் 'நைஸாக' — சத்தம் சந்தடியின்றி — கடந்த வாரம் மூடப்பட்டிருப்பதாக கிழக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன,

இதனால் திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதியில் அதன் கரையோரப் பகுதியை அண்டிய பெரும் பிரதேசம், மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரைப் பிரதேசத்துடன் சேர்ந்து புலிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசம் மேலும் விரிவுபடுத்தப்பட வலு ஏற்பட்டிருக்கின்றது.

'ரிவிரச' நடவடிக்கையில் வெற்றிபெறுவதற்காக கிழக்கு மட்டக்களப்புமாவட்டத்தில் 44 இராணுவமுகாம்களை மூடி அங்கிருந்த துருப்புக்களை வடக்கே அனுப்பி வைத்தது அரசு. இவ்வாறு முகாம்களை மூடியதால் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் இரண்டாயிரத்து 300 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதேசமயம், படையினரால் வடக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலதிகமாக 800 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தையே கைப்பற்ற முடிந்தது.

அதாவது யாழ்ப்பாணத்தில் எண்ணூறு சதுரக் கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக கிழக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 300 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் மீதான தமது ஆதிக்கத்தை ஸ்ரீ லங்காப் படைகள் இழந்தன.

இப்போது மூதூர்ப் பகுதியில் சில பொலீஸ் நிலையங்களே எஞ்சி விடப்பட்டுள்ளன. அவற்றை அழித்து மேலதிகமாக சுமார் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது புலிகளுக்கு என்றும் அவ்வளவு சிரமமான காரியமாக இருக்க மாட்டாது.

இந்தப் பிரதேசத்தை இழப்பதால் வெருகல் — மூதூர் வீதி மீதான கட்டுப்பாட்டையும் படைத்தரப்பு இழக்க வேண்டி நேரிடும். ஏற்கனவே இந்த வீதிக்கு தெற்கே வாழைச்சேனைக்கும் வெருகலுக்கும் இடையேயுள்ள பிரதேசம் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★

யா/ சண்டிலிப்பாய்
இந்து மகா வித்தியாலயம்
ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா
1993 - 1996

காலம்: 1997-10-25 சனிக்கிழமை
முற்பகல் 9 00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்:
திருமதி றெ. இருதயநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)

சிறப்பு விருந்தினர்கள்:
திருமதி பொ. ஜெயசிங்கம்
(முதன்மை ஆசிரியர், ஆரம்பக்கல்வி)
திரு. எஸ். மாதவகுமார்
(முதன்மை ஆசிரியர், ஆரம்பக்கல்வி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

[50749]

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் நீண்ட காலமாக கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உழைத்து இளைப்பாறிய ஆசிரியை

திருமதி சிவக்கொழுந்து இராமலிங்கம்

அவர்களின் இழப்பினால் துயருறும் நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கட்டைவேலி யார்க்கரு
விநாயகர் வித்தியாலயம்
கரவெட்டி.

[50752]

## அதிரடி அரங்கு

□ குடாநாட்டில் பாடசாலைக் கல்விக்கு துணையாக நிற்கும் அமைப்புக்களில் முக்கியமானது பழைய மாணவர் சங்கங்களாகும். முன்னணிப் பாடசாலைகளில் அவற்றின் செயற்பாடு, பங்களிப்பு, சேவை என்பன நீண்ட, பல தசாப்த கால சரித்திரத்தையும் போற்றுதற்குரிய சிறப்பையும் கொண்டது.

உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான அ. பஞ்சலிங்கம் சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். இந்துக் கல்லூரி அதிபராக இருந்த காலத்தைக் குறிப்பிடலாம். சில ஆண்டுகளுக்கு முன்னர் அக்கல்லூரியிலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 200 மாணவர்களில் 128 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். அவர்களில் 16 பேருக்கு நான்கு பாடங்களிலும் 'A' சித்தி. பாடசாலை கல்விக்குப் புறம்பாக — வேறு தகைமை சார்ந்தோரின் — போதனையையும் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் மாணவருக்குக் கிட்டச் செய்ததால் இந்தச் சாதனையை அதிபர் பஞ்சலிங்கத்தால் நிலைநாட்ட முடிந்தது என்பது ஊரறிந்த உண்மை.

இவ்வாறு பழைய மாணவர் சங்கங்களுக்கும் கல்லூரிகளுக்கும் இடையில் நிலவி வந்த — கல்லூரி நலன் சார்ந்த—பிணைப்புக்கு வேட்டு வைக்க முனைந்தார் ஓர் அதிகாரத் தோரணைக்காரர். அவரால் பல பாடசாலைகளில் — கல்லூரிகளில் — அவற்றைச் சார்ந்த சமூகம் இரண்டு பட்டுக் கிடக்கின்றது. வழக்கு நீதிமன்றம் என்று விவகாரங்கள் இழுபடுகின்றன.

பழைமையும், நீண்ட சரிதமும் கொண்ட ஒரு கல்லூரிக்கு என தனிச் சமூகம் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளாத இந்தக் கல்வி நிர்வாகிகள், கல்லூரிகளை — அதன் நிர்வாகிகளை — தமது காலடியில் போட்டு வைத்திருப்பது போல பழைய மாணவர் சங்கங்களையும் தமது காலடிக்குக் கொண்டு வருவதற்காக, முப்பது வருடத்துக்கு முந்திய சுற்று நிருபம் ஒன்றை தூசு தட்டி எடுத்துக் கொண்டு வந்ததும் —

அதனால் கல்லூரிகள் பலவற்றில் குழப்பம் ஏற்பட்டதும் —

அப்படிச் செய்ய வேண்டாம் என ஆலோசனை தெரிவித்து வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கடந்த மே மாதம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி வைத்ததும் —

அக்கடிதம் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று உண்மை(?) கூறி ஒதுக்கிவிட்டு தங்களது குளறுபடிகளை அவர்கள் தொடர்ந்ததும்—குறிப்பிடத்தக்கவை.

இப்போது செயலாளரின் கடிதத்தின் பிரதி ஒன்று நேரடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம்.

''வடக்கு, கிழக்கின் கல்வி அபிவிருத்தியினைப் பொறுத்தவரையில் கல்விசார் சமூகங்களின் பூரண ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக அவசியமானதாகும். பழைய மாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் உரிய முறையில் ஈடுபடுவதற்கு வேண்டிய ஈர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். அவர்கள் தமது தனித்துவத்தை இழக்க விரும்பமாட்டார்கள்.''—என்று அக்கடிதத்தில் செயலாளர் திட்டவட்டமாக சிலஆலோசனைகளை கூறியிருக்கின்றார்.

இந்த ஆலோசனை வழமை போல 'செவிடன் காதில் ஊதிய சங்கு' ஆகுமோ? அல்லது இன்னும் கடிதம் கிடைக்கவில்லை என்று உண்மை கூறுவார்களா? 'ஈர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பதிலாக தனது குழப்பு'. நடவடிக்கைகளை அவர் தொடர்வாரா?

மத்திய அரசின் கல்வி அமைச்சு விடுத்த சுற்று நிருபத்தை மாற்றும் விதத்தில் கடிதம் எழுதும் — அல்லது உத்தரவிடும் — அதிகாரம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்குஉண்டா என்ற தோரணையில் புதிய சர்ச்சை சம்பந்தப்பட்ட அதிகாரியின் சுற்று வட்டத்தில் இப்போது கிளப்பப்படுவதாகக் கேள்வி.

எல்லாம் செயலாளருக்குச் சமர்ப்பணம்!

சர்ச்சைக்குரியவர்கள் இருக்கும் இடங்களில் சர்ச்சைகள்தான் மிஞ்சும். சாதனைகள் அல்ல.

★ ★ ★

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்ந்த யாழ். மாணவன் ஒருவனுக்கு 'றாகிங்' கொடுமைக்காரர் செய்த ஈனச் செயலை அறிந்து யாழ்ப்பாணக் கல்விச் சமூகமே தலைகுனிந்து நிற்கின்றது. சம்பந்தப்பட்ட மாணவனின் உயிர் ஊசலாடத் தொடங்கிய பின்னர்தான் விவகாரம் பெரிதாகியிருக்கின்றது.

இது தனி மாணவனுக்கு தனி மாணவன் அல்லது மாணவர்கள் இழைக்கும் கொடூரம் மட்டும் அல்ல. ஒரு நற் சமூகத்துக்கு மாணவர் என்ற பெயரில் சில 'களங்கங்கள்' புரியும் அதர்மம் — அநாகரிகம் — நரகாசுரன் வேலை— இது.

இந்த நரகாசுரர்களை ஒடுக்குவதற்கு ஒரு பரமாத்மாபோதாது. சமூகமே திரண்டெழ வேண்டும்; சந்தியில்நிறுத்தி சவுக்கடிகொடுத்தாலும் தகும் மத்திய கிழக்கு நாடுகளில் கல்லால் எறிந்து கொல்லுவது போன்ற அநாகரிக தண்டனைகள் தான் இத்தகைய ஈனச் செயல் புரிவோருக்கு பொருத்தமானதோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

சமூகத்தில் இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படத் தொடங்குகின்றது. சமூகம் கிருஷ்ண பரமாத்மா போன்று ஒருதடவை விஸ்வரூபம் எடுத்துக்காட்டினால் தான் ஈனத்தனம் புரிவோர் அடங்குவார்கள்.

-மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிக்கு முந்துங்கள்
தென் இந்திய வார, மாத சஞ்சிகைகள்
(7, 8, 9, 10 மாதங்கள்)
தீபாவளி வாழ்த்து மடல்கள்
விற்பனையாகின்றன
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
[50759]

தீபாவளி வாழ்த்து

வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் கண் சிமிட்ட!
தமிழ் மாநிலத்தில் தலைசிறந்த நட்சத்திரங்கள் வாழ்த்த!
இன்பப் பெருநாளில் தேசமெல்லாம் நலம் ஓங்க!
வரும் நாளில் நன்றே வாழ்க வளரவென வாழ்த்துகிறோம்

யாழ். நகரிலோ
தலைநகர் கொழும்பிலோ
உங்கள் நகைத் தேவைகளைத்
தெரிவு செய்திட நீங்கள்
நாடவேண்டிய ஸ்தாபனம்

நியூ லலிதா ஜுவலர்ஸ்
170, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 24846

165, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
போன்: 332948

(தற்போது எமது ஸ்தாபனத்துக்கு யாழ். நகரில் வேறு கிளைகளோ சகோதர நிறுவனங்களோ இல்லை)
(50757)

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



## அமரர் அரியகுட்டி நாகரத்தினம் (குகன்)

(உரிமையாளர், குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை)

தோற்றம்: **15-02-1915** மறைவு: **26-09-1997**

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தி வேண்டி செல்வசந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசையும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானமும்

26 - 10 - 1997 — ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு இடம்பெறும்.

உறவினர்கள், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவையொட்டி நேரிலும், தந்தி கடிதமூலமும், பத்திரிகைகள் மூலமாகவும் அஞ்சலி செலுத்தியோர்க்கும், சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

மகன் நா. குகனும் (கிளி)
குடும்பத்தினரும்.

குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.
(சி - 1871)

# கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியை மீண்டும் இங்கு ஆரம்பிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக இயங்காது மூடப்பட்டிருந்த மாவட்ட கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகத் தெரியவருகிறது.

யாழ். மாவட்ட கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி 10 ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்டதைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்களுக்கான பயிற்சிகள் 1991 ஆம்ஆண்டு வரை திருமலையிலேயே வழங்கப்பட்டன. பின்பு அக் கல்லூரியும் செயற்பாடற்றதாக மாறியது.

இதேவேளை —

மீண்டும் இப் பயிற்சிக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதனால் விரிவுரையாளர்களுக்குப் பற்றாக் குறையேற்படுமென்றும், இதனை நிவர்த்திசெய்யும் முகமாக ஓய்வுபெற்ற விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடற்றொழில் அமைச்சின் ஆலோசகரும் ஈ. பி. ஆர். எல். எப். அமைப்பின் செயலாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகவும் தெரியவந்தது. (ஐ-ரீ)

## திருக்குறள் மனனப் போட்டி

யாழ்ப்பாணம். ஒக். 25

யாழ். மாவட்டத்திலுள்ள சைவச்சிறுவர் இல்லங்கள், அறநெறிப்பாடசாலைகள் ஆகியவற்றுக்கிடையிலான திருக்குறள் மனனப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

போட்டியாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் ஏற்கனவே உரிய இல்லங்களுக்கும், அறநெறிப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன் தெரிவித்துள்ளார். (ஐ)

## தீக் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25

குடும்பப் பிரச்சினை காரணமாகத் தனக்குத்தானே தீ மூட்டியதாகத் தெரிவித்து படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடிப் பகுதியில் கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் த. பிரபாகரன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஐ-15)

## மாணவ முதல்வர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். இந்துக் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவ முதல்வர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த மிருசுவிலைச் சேர்ந்த சி. கந்தையா (வயது 37) என்பவரே காயமடைந்தவராவர். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## கிணற்றில் வயோதிப மாதுவின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் அரசடிப் பகுதியில் உள்ள வீட்டுவளவு ஒன்றின் கிணற்றில் இருந்து வயோதிபப் பெண் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சீனி மாணிக்கம் (வயது70) என்ற பெண்ணின் சடலமே மீட்கப்பட்டது.

இரவு படுக்கைக்குச் சென்ற இவர் காலையில் கிணற்றினுள் இறந்துகிடக்கக் காணப் பட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)

### யாழ். மீனவர் பிரச்சினை:

## கடற்படைத் தளபதியையும் புளொட் பிரமுகர் சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக புளொட் அமைப்பின் பிரமுகர்கள் விரைவில் கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

''புளொட்'' அமைப்பின் உபதலைவரும் இராணுவத் தளபதியுமான என். மாணிக்கதாஸன் இவ்விவகாரம் தொடர்பாக அண்மையில் இராணுவத் தளபதியைச் சந்திதது்ப் பேசியிருந்தார். அதனைத் தொடர்ந்து கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேசவும் முயற்சி மேற் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனுக்குடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து பல வழிகளிலும் உதவிவரும் புளொட் அமைப்பினருக்கு குருநகர் கடற்றொழிலாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

குருநகர் கடற்றொழில் அமைப்புக்களை உள்ளடக்கிய குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் புளொட் அமைப்பின் யாழ். பணிமனைக்குச் சென்று மீனவர்கள் சார்பில் நன்றி தெரிவிக்கும் கடிதம் ஒன்றை மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜாவிடம் கையளித்தனர்.

## வெள்ளி விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 25

வல்வை மகளிர் வித்தியாலய வெள்ளி விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகளில் முதலாம் நாள் நிகழ்வாக இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பொருட்காட்சி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி. கு. நகுலாம்பிகை தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி, மருதங்கேணி பிரதிக் கல்விப்பணிப்பாளர் வயிரமுத்து செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்வான வெள்ளிவிழாவும் பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். யாழ். வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் சின்னையா சிவராஜா இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-5)

# எமது நெஞ்சம் மறவாத நன்றிகள்!

## அமரர் கனகசபை நடேசன்

மலர்வு: **20-04-1956** உதிர்வு: **17-10-1997**

எமது அருமை மகனும், எனது கணவரும், எமது தந்தையாரும், எமது சகோதரனும், எமது மருமகனும், எமது மைத்துனரும் ஆகிய அமரர் திரு. கனகசபை நடேசன் அவர்களின் பிரிவுத் துயரிலும் இறுதிக் கிரியைகளிலும் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அவர் சுகவீனமடைந்த நேரத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சையளித்த வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள், உதவியாளர்கள் அவர்களுக்குத்தேவைஏற்பட்டுதாமாக முன்வந்து இரத்த தானம் செய்தவர்களுக்கும், கொழும்பில் இருந்து உறவினர்களை உடனடியாக யாழ்ப்பாணம் வருவதற்கு உதவி செய்த நண்பனுக்கும், தொலைபேசி வசதிகளைச் செய்து உதவிய தொலைத் தொடர்பு அதிகாரிகளுக்கும், தொலைபேசி நிறுவனத்தினருக்கும், அஞ்சலி பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர் வளையம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி, கடிதம், தந்திமூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதி அஞ்சலியில் இரங்கல் உரைஆற்றியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் மறவாத நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகப்பன், தாய்,
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மாமியார், மாமனார்,
மைத்துனர்,

23, கோபால் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(50760)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் கிளைமோர் கண்ணி

யாழ்ப்பாணம், ஒக். 25

நல்லூர்ப் பகுதியில் கடந்த வெவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் படையினர் கிளைமோர் கண்ணி ஒன்றை கைப்பற்றிப் பின்னர் செயல் இழக்கச் செய்தனர் என்று 51 ஆவது படையணி அலுவலக செய்தி குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. (இ-3)

## கொக்குவிலில் ஆயுதங்கள் மீட்பு என தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

கொக்குவில் பகுதியில் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் 2 இயந்திர துப்பாக்கிகள், ஒரு கைத்துப்பாக்கி உட்பட பல ஆயுத தளபாடங்களை கிடங்கு ஒன்றில் இருந்து படையினர் கைப்பற்றினர் என்று படையினர் தரப்பில் அறிவிக்கப் பட்டுள்ளது, (இ-3)

# புலிகளின் ஒத்துழைப்பு இன்றி தீர்வை நடைமுறைப்படுத்த முடியாது

## பி.பி.ஸிக்கு சித்தார்த்தன் தெரிவிப்பு

லண்டன், ஒக். 25

''இன்றுள்ள யதார்த்த சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இன்றி அரசின் யோசனைகளை நடைமுறைப்படுத்த முடியாது.''

இப்படி புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வு வருகின்ற பட்சத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும்.

தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதில் அவர்களின் முழுமையான பங்களிப்பையும் பெற்றாலேயே அமைதியை ஏற்படுத்தமுடியும்.

விடுதலைப் புலிகள் இல்லாமல் தீர்வு காணக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தாலும் அமைதி ஒன்றைக் கொண்டு வரமுடியாது.

நிச்சயமாக விடுதலைப்புலிகளும் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்று கருதுகின்றோம்—

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## 4 தமிழ் மீனவர்கள் நீர்கொழும்பில் கைது

இழுவைப் படகு ஒன்றில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு தமிழ் மீனவர்களை நீர்கொழும்புப் பொலீஸார் கைது செய்தனர்.

இவர்களிடம் இருந்து நீரில் சுழியோடும் உடுப்புக்கள், புகைப்படக் கருவிகள், படச்சுருள்கள் மற்றும் பல பொருள்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## கடற்றொழிலாளருக்கு தனியான குடும்ப அட்டை

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடற்றொழிலாளர்களின் குடும்ப விவரங்கள், உபகரண விவரங்கள் அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்ட உபகரண இழப்புக்கள் உட்பட இன்னும் பல்வேறு விடயங்கள் கொண்டதாக குடும்பப்பதிவு அட்டை ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது.

எதிர் காலத்தில் கடற்றொழில் விருத்தி தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவற்றிற்கும் இக்குடும்பப் பதிவு அட்டையே பிரதானமான ஆவணமாகக் கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் யாவரும் இச்சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறும் பதிவுகள் மேற்கொள்ளப்படும் காலம், இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படுமென்றும் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-ரீ)

## கடற்படையினரின் மேலும் 2 சடலங்கள் நேற்று மீட்பு

### அழுகிய நிலையில் அலம்பில் கடலில்

திருகோணமலை, ஒக். 25

திருகோணமலை, புல்மோட்டைக் கடலில் கடற்புலிகளின் தாக்குதலின் போது காணாமற்போன கடற்படையினரில் மேலும் இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

அலம்பில் கடலில் மீட்கப்பட்ட இந்த இரு சடலங்களும் கடற்படையினருடையவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சடலங்கள் அழுகிய நிலையில் திருகோணமலை கடற்படை தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. காணாமல்போன 7 பேரில் 5 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன என கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## 94-ம் ஆண்டு சிறந்த நூல்களுக்கு இலக்கியப் பேரவையின் விருது

நெடுந்தீவு, ஒக். 25

இலங்கை இலக்கியப்பேரவையினால் 1994 ஆம் ஆண்டின் சிறந்த இலக்கியப் படைப்புக்களாகத் தெரிவு செய்யப்பட்ட நூல்களுக்கு பணப்பரிசும் விருதும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1994 இல் இலக்கியப் பேரவைக்குக் கிடைக்கப் பெற்ற நூல்களில் இருந்து சிறந்த படைப்புக்களை பேரவை தெரிவு செய்தது.

நூல்களினதும் படைப்பாளிகளினதும் விவரம் வருமாறு:

★ நாவல்:''மரக்கொக்கு'' —தெணியான்.

★ சிறுகதைத் தொகுதி: ''நந்தியின் சிறுகதை''— பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி).

★ கவிதை:- ''அம்பியின் கவிதைகள்'' — அம்பிகைபாகன்.

★ காவியம்:- படைப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

★ சிறுவர் இலக்கியம்:- ''பாரதக் கதை'' — வரதர்.

★ சமய இலக்கியம்:- படைப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

★ பல்துறை:-படைப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

★ அறிவியல்:- படைப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

★ நாடகம்:- ''இம்மானுவேல் நாட்டுக் கூத்து''.

பாராட்டுப்பெறும் நூல்கள் வருமாறு:-

★ ''மண்ணின் கனவு''— து. வைத்திலிங்கம்.

★ ''வீடு'' சிறுகதைத் தொகுதி —இளையவன்.

★ ''ஜனனத்தின் அஸ்தமனம்''—நீர்கொழும்பு முத்துலிங்கம்.

★ ''அக்கரைச் சீமையில்'' அராலியூர் நா. சுந்தரம் பிள்ளை.

★ ''லயத்துச் சிறையில்'' —கி. ஞானசேகரன்.

★ சமயம்:-'' கணபதியே வருக'' நவாலியூர் நா. சச்சிதானந்தன். (ஐ-111)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

லங்கா சீமெந்து ஊழியர்களின் ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகள் எதிர்வரும் செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் காலை 9-30 மணிமுதல் 12-30 மணிவரை யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## கனகராயன்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றதாகவும் —

நேற்றும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — போர் முனைக்கு தினமும் ஏராளமான படையினர் அழைத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது. (இ-3)

## செய்தியாளர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் ஐ. தே. க. எம். பிக்கள் நடந்து கொண்ட விதம் குறித்து விளக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்றை அமைச்சர் பீரிஸ் நாடாளுமன்ற கட்டடத்திற் கூட்டினார்.

இந்த மாநாட்டில் அரசுக்கு ஆதரவான கட்சிகள் பங்குபற்ற அழைக்கப்பட்டன.

ஈ. பி. டி. பி. அமைப்பு மட்டும் இதில் கலந்து கொள்ளவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், இ. தொ. கா. உட்பட அரசில் அங்கம் வகிக்கும் கட்சிப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். (இ-3)

## பெரும் அமளி...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்படுகின்றன என்பது பற்றித் தாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஐ.தே.க. உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சபைக்குத் தலைமை வகித்த குழுக்களின் பிரதித் தலைவர் றவுக் ஹக்கீம் இந்த ஆட்சேபனையை நிராகரித்தார்.

94ஆம் இலக்க நிலைக் கட்டளையின்படி இத்தகைய யோசனைகளைச் சமர்ப்பிக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

கூச்சல் அதிகரிக்கவே றவுக் ஹக்கீம் சபையை 15 நிமிடத்துக்கு ஒத்திவைத்தார்

சபை மீண்டும் 10.00 மணிக்கு கூடியபோது மீண்டும் கூச்சல் எழுந்தது.

இதனை அடுத்து நவம்பர் 5ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது. (இ-3-21)

## ஆறு மாதங்...

(முதலாம் பக்கத் தொடர்)

முடிவு எடுக்கப்பட வேண்டும்.

அமெரிக்கா அதன் அரசமைப்பைத் தயாரிப்பதற்கு சுமார் 20 ஆண்டுகள் எடுத்தது. இதன் காரணமாகவே இந்த அரசமைப்பு 200 ஆண்டுகளுக்கு மேலாக நிலை பெற்றுள்ளது.

இந்தியா தனது அரசமைப்பை வகுப்பதற்கு ஐந்து ஆண்டுகளை எடுத்தது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-21)

## சென்றல் முகாம் சம்பவம்:

## அம்பாறை பிரதேச சபைகளில் கண்டனத் தீர்மானங்கள்

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய முகாம் 4 ஆம் காலனியில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பொலீஸ் அடாவடித்தனத்தைக் கண்டித்து அம்பாறையில் உள்ள பிரதேச சபைகளின் மாதாந்த செயலமர்வுகளில் கண்டனத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நிந்தாவூர், கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேச சபைகள் இக்கண்டனத்தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதுடன் இச்சபைகளிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் பலரும் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர். (ஐ-14)

## தெற்கில் ஆதரவுப் போராட்டம்

கொழும்பு, ஒக். 25

அரசின் யோசனைகளை ஆதரிக்கக் கோரி நேற்று கொழும்பு ரயில் நிலையம் முன்பாக மறியல் போர் இடம்பெற்றது.

பல தொழிற்சங்கங்களின் பிரமுகர்கள் மற்றும் தொழிலாளர்கள் சுலோக அட்டைகளை தாங்கி மறியல் போரில் கலந்து கொண்டனர்.

யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் ஆயிரக்கணக்கான மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி ஆதரவு தெரிவித்து கோஷம் எழுப்பினர்.

தெற்கில் முக்கிய நகரங்களிலும் இதே போன்று ஆதரவுப் போராட்டங்கள் இடம்பெற்றன.

கொழும்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (இ-3)

## கரிப்பட்ட முறிப்பில் மூவர் களப்பலி என தெரிவிப்பு

வவுனியா, ஒக். 25

கனகராயன்குளத்துக்கு அப்பால் கரிப்பட்டமுறிப்புப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் 3 பேர் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இத்தாக்குதலின் போது தமது காவலரணை நோக்கி வந்த சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும்—

அவரின் சடலம் நேற்று முன்தினம் மடுவில் வைத்து இலங்கை செஞ்சிலுவை சங்க வவுனியா கிளைச் செயலாளர் சிவநாதன் கிஷோரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மேலும் ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

அதே நேரம் — நேற்று முன்தினம் பறையனாளங்குளத்துக்கும், செட்டிகுளத்துக்கும் இடையில் நடந்த சண்டையில் உயிரிழந்த இரு விடுதலைப் புலிகளின் சடலங்களை செஞ்சிலுவைச் சங்க மூலம் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் நடந்தன. (இ-3)

சிற்றியின் வாடிக்கையாளர்கள், மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
யாழ். நகரில் நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகம் செய்து தைத்துத் தருவதில் முன்னணியாளர்கள்
சிற்றி ரெயிலர்ஸ் (ரவுசர் தினுசுகளின் சங்கமம்)
இறக்குமதி செய்யப்பட்ட சேட்டிங், சூட்டிங், றெடிமேட் ஜீன்ஸ், சோட்ஸ், சேட், புத்தம்புதிய டிசைன் சாரிகள், நாகரிகமான ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் அனைத்து ரக புடைவைத் தினுசுகளையும் தீபாவளியை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடியில் விற்பனை செய்கின்றோம்.
CITY TAILORS (Specialist in Wedding Cauts & Suitts)
73, Bazaar Street, Jaffna.
(சி/1872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 25-10-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி சஞ்சிகை

25 - 10 - 1997 சனிக்கிழமை

உங்களுக்குத் தேவையான சகலவித
சாறி வகைகள், பிளவுஸ் துணி வகைகள்
சிறுவர்களுக்குரிய
ஆடைகள், சூட்வகைகள்
அழகுசாதனப் பொருள்கள்
மலிவு விலையில் பெற்றுக் கொள்ள
சிறந்த ஸ்தாபனம்.
கல்யாணப் பட்டுப் புடைவைகளின்
கைராசி நிறுவனம்.
சோபனா ஆடை அகம்
16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1750)

## கருத்துக் கலசம்

மயூரா

### சமய விழிப்புணர்வு

மாணவரிடையே சமய அறிவுகுன்றியிருப்பதுஇன்றைய பெருங்குறையாகும். பரீட்சையில் சித்தி அடைவதற்காக மட்டும் அன்றி, சமய சீலங்களை மாணவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த — அவற்றில் பயிற்சி பெற — சமய அறிவு அவசியமாகிறது.

சமய அறிவும் பயிற்சியும் இல்லாததாலேயே இன்றைய இளம் சந்ததியினர் நல்லொழுக்கம் குன்றியவர்களாகவும், சமூகப் பண்புகளையும் மரபுகளையும் மீறுபவர்களாகவும் மாறியுள்ளனர். சமூகவிழுமியங்களை உதாசீனம் செய்வதும், வன்முறைப் பாங்குடையோராக ஒழுங்குக் கட்டுப்பாடு இன்றி வாழ முற்படுவதும் சமய அறிவும் பயிற்சியும் இல்லாமையின் விளைவே ஆகும்.

தமிழ் இளைஞர்களின் வன்முறைப் பாங்கு எமது பிரதேசத்தில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் வெளிநாடுகளிலும் எமது இனத்துக்குப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்துகின்றது.

அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணத்து மாணவர் ஒருவரை யாழ்ப்பாண மாணவர்கள் எழுவர் சேர்ந்து 'றாகிங்' செய்து, அவரின் சிறுநீரகம் பாதிக்கும் அளவுக்குச் சித்திரவதை செய்திருப்பது தமிழ் இளைஞர் சந்ததியின் ஒழுக்கம் எந்தளவு கேவல நிலைக்குக் கீழிறங்கி இருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம்.

வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள தமிழ் இளைஞர்களும் தாம் அன்னிய மண்ணில், அந்நாட்டு மக்களின் தயவில் தங்கியுள்ளார்கள் என்பதனைக் கூட மறந்து அங்கெல்லாம் சண்டித்தனம் புரிகிறார்கள்.

வருங்காலத்திலாவது இந்த அவமானத்தைத் தடுக்க, அபகீர்த்தியைத் தவிர்க்கஇன்றைய மாணவர்களுக்குச் சமய அறிவு முழு அளவில் உரிய முறையில் புகட்டப்பட வேண்டும். சமய நெறிகளில் நிறைவான பயிற்சியும் தேவை.

சமய நெறிகள் வாழ்க்கை முறைகளே. வாழ்க்கை பெருமைப்படக் கூடிய விதத்தில் அமைய, பயனுள்ளதாக அமைய, சமய நெறிகளை முழுமையாகக் கைக்கொள்ள வேண்டும்.

இதற்கான விழிப்புணர்வை உண்டாக்க சமய அறிவுப் போட்டிகள், சமய விழாக்கள் பெருமளவில் உதவும். பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியன சமயப் போதனை, பயிற்சி, போட்டி என்பனவற்றைநடத்துவதற்கு மிக உகந்த இடங்கள்.

இந்த வகையில் சங்கானைக் கல்விக் கோட்டத்தினர், பாடசாலைகளில் தாம் நடத்திய சைவ சமய அறிவுப் போட்டிகளில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பினைப் பெரும் சைவத் திருமுறை விழாவாக எடுப்பது மாணவர் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்கும். அது ஏனையோருக்கு நல்ல முன்மாதிரியாக, முன்னோடியாக அமையட்டும்.

# ஆணவம் அழிந்து கண்ணனின் திருவடியில் மாலையான அர்ஜுனன்

குருஷேத்திரப்போர் முடிந்து விட்டது.

தர்மம் அதர்மத்தை வென்று விட்டது.

கௌரவர்களை அழித்துப் பாண்டவர்கள் யுதிஷ்டிரர் தலைமையில் தர்மராஜ்யம் ஸ்தாபிக்கும் நன்னாள் பிறந்து விட்டது.

பதினெட்டாம் நாள் போர் முடிந்து சூரியன் அஸ்தமிக்கும் வேளை.

அந்தக்கால முறைப்படி வெற்றி பெற்ற மன்னர்கள், மகாரதர்கள் தங்கள் வீரத்திற்கு மரியாதை பெறும் சடங்கு நிகழவேண்டியிருந்தது.

அவரவர்களின் தேரோட்டிகள் கீழிறங்கி, ரதத்தை வலம்வந்து தரையில் மண்டியிட்டு நிற்க, மகாரதர்களும் மன்னர்களும் தேரில் இருந்து இறங்கி வந்து தேரோட்டிகளின் மலர் மாலைகளை ஏற்று, மக்கள் ஆரவாரத்தைக் கேட்டு, மகிழ்ச்சி அடையும் நேரம் அது.

பாண்டவர்களின் ரதங்கள் வரிசையாக வந்து நிற்கின்றன.

யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன், நகுல, சகாதேவர்கள் ரதங்களில் வீற்றிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

தர்மத்தின் வெற்றியைக் கொண்டாட அஸ்தினாபுரத்து மக்களில் எஞ்சியோரும் இந்திரப்பிரஸ்தப் பிரசைகளும் கூடி நிற்கின்றனர்.

தலைவர்கள் [illegible] மரியாதையைக் கண்டு களிக்க வீரர் கூட்டம் காத்து நிற்கிறது.

யுதிஷ்டிரரின் தேர்ப்பாகன் தேரிலிருந்தும் இறங்கித் தேரை வலம் வந்து மண்டியிட்டு மன்னன் யுதிஷ்டிரன் பாதம் பணிந்து நிற்கிறான். யுதிஷ்டிரன் கீழே இறங்கியதும் அவனுக்கு மாலை அணிவித்து 'யுதிஷ்டிரர் வாழ்க' என்று குரல் எழுப்புகிறான். 'வாழ்க வாழ்க' என்ற மக்கள் ஒலி வானைப் பிளக்கிறது.

அடுத்து பீமனின் ரதம். பாண்டவர்களின் வெற்றிக்குக் காரணமான வீரன் அல்லவா! துரியோதனனின் தொடையைப் பிளந்தவன் அல்லவா! மரியாதை சற்று அதிகமாகவே கிடைக்கிறது.

அடுத்து அர்ஜுனன் ரதம், தேர்ப்பாகன் சாதாரணமானவனா? துவாரகாதிபதி ஸ்ரீ கிருஷ்ணன்.

பாண்டவர்களும் பகவானின் அவதாரம் என்று போற்றிப் புகழ்ந்த புண்ணிய புருஷனல்லவா அவனுக்குத் தேரோட்டி!

பின் பெருமை இருக்காதா அர்ஜுனனுக்கு? யாருக்கும் கிடைக்காத பெரும் புகழும் பாக்கியமும் தனக்குக்கிடைக்கப் போவதை எண்ணிப் பூரித்தான்.

அர்ஜுனனுக்குத் தலைக்கனம் ஏறியது. அஸ்திரம் எல்லாம் கீழே விழ அஞ்சி நடுங்கி நின்ற நிலையில், ஆசானாக கீதோபதேசம் செய்த அண்ணலை அப்போது தேர்ப்பாகனாக மட்டுமே அவன் எண்ணினான். [illegible] ஆணவம் மேலிட நின்றான்.

ஆனால் தேர்ப்பாகன் கண்ணன் கீழே இறங்கவில்லை.

எங்கும் ஒரே அமைதி. அனைவர் மனதிலும் ஒரு விதப் பரபரப்பு.

அர்ஜுனன் ஒரு கணம் பொறுத்தான். அவன் அறியாமை அவனுள்ளே பேசியது.:-

''கர்மத்தைச் செய்; பயனை எதிர்பாராதே என்று எனக்கு உபதேசித்தானே கண்ணன்! இப்போது தான் மட்டும் தேர்ப்பாகனுக்கு உரிய கர்மத்தைச் செய்யாமல் விதிவிலக்குப் பெற நினைக்கிறானே கண்ணன்?'' என்று சிந்தித்தான்.

ஒரு கணம் திகைப்பு. ''அர்ஜுனா! நீ முதலில் இறங்கு. இந்தத் தேர் ஓர் விதிவிலக்கு'' என்ற ஆணை கண்ணனிடமிருந்து பிறந்தது.

கண்ணனின் ஆணையை மீறி அறியாதவன் அர்ஜுனன். தேரில் இருந்து இறங்கவில்லை; குதித்தே விட்டான்.

கண்ணன் ஏதுமறியாதவன் போல தேரில் இருந்து இறங்கினான். அவ்வளவு தான். அர்ஜுனன் தேர் திடீரெனத் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

அனைவர் முகத்திலும் அதிர்ச்சி.

''அர்ஜுனா எதிரிகள் உன் ரதத்தின் மீது ஏவிய மந்திர சக்தி எல்லாம் நான் அமர்ந்திருந்த காரணத்தினால் பலனற்று இருந்தது''.

''உன் தேரின் முடிவு காலத்தைத் தெரிந்து கொண்டுதான் உன்னை முதலில் இறங்கச் சொன்னேன்.

''நான் முதலில் இறங்கியிருந்தால், இந்தத் தீயினின்றும் உன்னைக் காப்பாற்ற வேண்டிய நிலை வந்திருக்கும்.

''இப்போதும் உன்னைக் காக்கவே நான் சம்பிரதாயச் சடங்குகளை மீறினேனே தவிர, தேரோட்டியின் கடமையைச் செய்யத் தயங்கியதால் அல்ல. சற்று நில். உன்னை வலம் வந்து மாலையிடுகின்றேன்—'' என்று சொன்னான்.

ஆணவம் அனைத்தும் அழிந்த அர்ஜுனன் தன்னையே ஒரு மாலையாக்கி, கண்ணனின் திருவடிகளில் தன்னைச் சமர்ப்பித்துக் கொண்டான்.

- சைதன்யா -

★



## தீபாவளித் திருநாள்!

வரும் வியாழக்கிழமை தீபாவளி.

நரகாசுரன் இறந்த தினம் தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது.

உலகத்துக்குத் துன்பமளித்த இராவணன், கம்ஸன், சிசுபாலன், துரியோதனன் போன்றவர்கள் பிறந்த தினத்தையோ இறந்த தினத்தையோ யாரும் நினைவு கொள்வதில்லை; கொண்டாடுவதில்லை. பூமாதேவியின் மகன் நரகாசுரன் 'தன்மகனின் மூலமாக மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டது; அந்தத்துன்பம் மனித சமுதாயத்திற்கு இனி வரவேண்டாம் என்ற எண்ணத்துடன் ஸ்ரீ கண்ணபிரானிடம் பூமாதேவி வரம்கேட்டு அதன் மூலம் தீபாவளி நன்னாள் தோன்றியதாக' எமது சாத்திரங்கள் கூறுகின்றன.

தாயின் அன்புள்ளத்தின் பிரார்த்தனையால் மகனின் நினைவுதினம் மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மங்கையருள் மாணிக்கமாக அகல்யா, அனசூயா, திரௌபதி, சீதா, தாரா, தமயந்தி, மண்டோதரி, சாவித்திரி, நளாயினி போன்ற பலர் இருந்தும் பூமாதேவியின் பிரார்த்தனையே — மகனின் பாசமே—மக்கள் மீதான அன்பே — ஒருவரும் துன்பப் படக்கூடாது என்ற இரக்கமே — பூமாதேவியின் மகனின் பெயரில் தீபாவளித் திருநாளாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் நழுவல் போக்குக் குறித்து அரசுத் தரப்பினருக்குக் கடும் சீற்றம்

கடைசியாக 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த' கதையாகி விட்டது - நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் சரித்திரம்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமரசத் திட்டம் ஒன்றை இணக்கமாகக் காண்பதற்கு வழி செய்யும் நோக்கத்துடனேயே தெரிவுக்குழு அமைக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான சமரசத் தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பு சீர்திருத்தம் ஒன்றை நாடாளுமன்றத்துக்கு சிபாரிசு செய்வதே இத் தெரிவுக்குழுவின் பணியாகக் குறிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பணியில் தெரிவுக்குழு முழுத் தோல்வி அடைந்து விட்டது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அடிப்படை விவகாரங்களில் இணக்கம் காணாத நிலையில் தெரிவுக்குழு அதன் செயற்பாட்டின் இறுதிக்கு வந்திருக்கின்றது.

1996 மார்ச் மாதம் ஏழாம் திகதி தனது முதலாவது அமர்வை ஆரம்பித்த தெரிவுக்குழு இந்த 20 மாத காலத்தில் சாதித்தது என்ன?

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு சில விடயங்களை முன்மொழிந்தது. 1996 ஒகஸ்டில் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்வு யோசனைகளில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை அல்லது எதிர்பார்ப்புகளைத் தீர்க்கும் ஒரு சில அம்சங்கள் இருந்தன என்பது உண்மையே. ஆனால் சிங்கள அமைப்புகள், கட்சிகள் மற்றும் மகாசங்கத்தின் சீற்றம் காரணமாக அந்த யோசனைகளில் — மிக முக்கியமான சில அம்சங்களில் — இருந்து அரசு பின்வாங்கியது.

அரசுத் தரப்பைப் பொறுத்தவரை தான் சமர்ப்பித்த இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தில் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சாதகமான சில அம்சங்களை அந்தத் திட்டத்திலிருந்து நீக்குவதற்கு தெரிவுக்குழு உதவியிருக்கின்றது. அவ்வளவே!

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்கும், தெரிவுக்குழுவின் இதுவரை காலமான நடவடிக்கையும் போக்கும் ஓரளவு திருப்தியைக் கொடுத்திருக்கும் என்பது கண்கூடு.

இனப்பிரச்சினை தொடர்பாகவும் தமிழ்ப் பேசும் மக்களுடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாகவும் ஐக்கிய தேசியக்கட்சியின் கருத்தை — நிலைப்பாட்டை — பகிரங்கமாக அம்பலப்படுத்த வைப்பதற்கான ஒரு வலையாகவே தெரிவுக்குழு ஏற்பாட்டை அரசு விரித்தது.

ஆனால் நழுவும் மீனாகத் தப்பிக் கொண்டு விட்டது ஐ.தே.க.

அரசின் தீர்வுத் திட்டம் தொடர்பாகவும், அதிகாரப் பகிர்வு குறித்தும் தெரிவுக்குழு கூடி இருபது மாதங்கள் கழிந்தும் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்னவென்பதை அரசுத்தரப்பால் அம்பலப்படுத்த முடியவில்லை.

இந்த விடயத்தில் ஐ.தே.கவும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கடைப்பிடிக்கும் நழுவல் போக்கு ஜனாதிபதியை விசனப்பட வைத்திருக்கின்றது. ரணிலின் போக்குக் குறித்த சீற்றத்துடன் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியவை நோக்கற்பாலது. ஜனாதிபதியின் வார்த்தைகள் இவை தான்:-

''அவரின் (ரணிலின்) பேச்சு முட்டாள்தனமானது. இது (அதிகாரப் பகிர்வு) குறித்து ஒவ்வொரு தடவையும் அவருடன் பேசுவதற்கு நான் முயலும் போதெல்லாம் அவர் புதுப் புதுக் கதைகளுடன் நழுவுகின்றார். கடந்த இருபதாண்டு காலத்தில் இந்த நாட்டில் மிகவும் ஜனநாயகபூர்வமான அரசாகச் செயற்படுவது இந்த அரசாங்கம்தான். இந்த அரசாங்கத்துடன் ஜனநாயக ரீதியிலான பேச்சை அவர் நடத்துவதற்கு அவரை தடை செய்வது என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள



சந்திரிகா

முடியவில்லை.

''அவர்களுடன் (ஐ.தே.க.வுடன்) ஓர் உடன்பாட்டுக்கு நாம் (அரசு) வருவதற்கு முன்னர் நாம் புலிகளுடன் பேச வேண்டும் என்ற கதையை அவர்கள் (எதிர்க்கட்சியினர்) இப்போது அவிழ்த்து விட்டிருக்கின்றார்கள்,

''தீர்வுத் திட்டம் குறித்து அவர்கள் (ஐ.தே.கவினர்) என்ன கருதுகின்றார்கள என்பதை முதலில் எம்மிடம் கூறட்டும். தீர்வுத் திட்டம் குறித்து அவர்கள் என்ன நினைக்கின்றார்கள், கருதுகின்றார்கள் என்பது தெரியாமல் நாங்களும், அவர்களும் மற்றொருவருடன் (புலிகளுடன்) எப்படிப் பேச முடியும்? இதைத்தான் கடந்த இரண்டு ஆண்டுகளாக விடாது ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் கேட்டு வருகின்றேன். தீர்வுத்திட்டம் குறித்து ரணிலுடன் நான் ஐந்து தடவைகள் பேசியுள்ளேன்.

''மூன்று தடவைகள் அவர் 'ஓ! இளம் சட்டத்தரணிகளைக் கொண்ட சிறிய குழு ஒன்றை நான் நியமித்துள்ளேன். அவர்கள் அதனைப் படிக்கின்றார்கள். நாம் சில வாரங்களில் எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம்' —என்று என்னிடம் கூறினார். இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் அந்த சில வாரங்கள் இன்னும் கடக்கவில்லை.

''அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்னரும் மீண்டும் ரணிலைச் சந்தித்தேன். இது நடந்து ஆறேழு மாதங்களாகி விட்டன. 'ஓ! தெரிவுக்குழுவில் எமது கருத்தை நாங்கள் உங்களுக்குக் கூறுவோம்' — என்று அப்போது சொன்னார்.

''இப்போது தெரிவுக்குழு அமர்வுகள், நடவடிக்கைகள் ஒன்றரை வருட காலமாக நடந்து விட்டன. தீர்வுத் திட்டத்தில் உள்ள அற்ப விடயங்கள் குறித்து மட்டும் தமது கருத்துக்களை அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

''நாட்டின் ஒற்றையாட்சி அமைப்பு முறை நீக்கப்படுவதை தாங்கள் எதிர்ப்பதாக மட்டும் அவர்கள் கூறியுள்ளார்கள். நாடு ஒற்றையாட்சியின் கீழ் இருந்தால் நீங்கள் அதிகாரத்தைப் பரவலாக்க முடியாது. இதற்கிடையில் தெரிவுக்குழு நடவடிக்கைகள் இந்த வாரத்தில் முடிவடையவுள்ளன.

''கடந்த ஏப்ரலில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு கடிதத்தில் ஒப்பமிடுமாறு கேட்டுக்கொண்டதால்தான் அந்தக் கைய கடிதத்தில் தான் ஒப்பமிட்டதாக அவர் இப்போது கூறத் தொடங்கியுள்ளார்.

''இந்த விவகாரம் தொடர்பாக மேல் நடவடிக்கைக்காக பொது இடம் ஒன்றில் நான் அவரைச் சந்தித்தேன். இந்த விடயம் குறித்து ஒன்றில் ஏனையோரையும் வைத்துக் கொண்டு அல்லது தனித்து நாங்கள் இருவரும் பேச வேண்டும் என்றும் நான் அவரிடம் கூறினேன். அல்லது நானும் அவரும் எங்களது பிரதிநிதிகள் தலா மூவரை நியமித்து, அவர்கள் மூலம் முதலில் பேச்சு நடத்துவது; பின்னர் தலைவர்களாகிய நாங்கள் நேரடியாகப் பேசலாம். இது மூன்றாவது வழி'' என்றேன்.

''இந்த நிலையில் அவர் புது விடயம் ஒன்றைக் கொண்டு வருகின்றார். அதைத்தான் அண்மைக்காலத்தில் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். 'இரு கட்சிகளுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டைத் தீர்க்கவும் சில விடயங்கள் குறித்து தீர்மானிக்கவும் பேச வேண்டியிருப்பதாக' அவர் கூறுகின்றார். 'நல்லது இதற்காக எனது பிரதிநிதிகளை நான் நியமிக்கின்றேன். உங்கள் பிரதிநிதிகளை நீங்கள் நியமியுங்கள். நாங்கள் கலந்து பேசுவோம்' என்று நான் கூறினேன். ஆனால் இப்போது மூன்றரை மாதங்களாகி விட்டன. இதுவரை தனது பிரதிநிதிகளை அவர் நியமிக்கவில்லை.''

''எது எப்படியென்றாலும் புலிகளுடனோ அல்லது வெளியில் உள்ள பிறசக்திகளுடனோ நாங்கள் பேசுவதற்கு முன்னர், நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஏதேனும் உடன்பாட்டிற்கு வந்திருப்பது அவசியம் என்பதை நாம் அவர்களுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் அவர் அதற்குத் தயார் இல்லை.''

''இதனால் தான், எதிர்க்கட்சியின் ஆதரவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தனது நடவடிக்கைகளை தனித்து முன்னெடுக்க அரசு [illegible] ''[illegible] நாங்கள் தீர்வு காண முற்படுவது எங்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினைக்கு அல்ல. அது அவர்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினை. தமிழர்களுக்கு எதிராக 1983 ஜூலையில் ஐ.தே. கட்சி மேற்கொண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவாகவே வடக்கு, கிழக்கு யுத்தம் தீவிரமடைந்தது.''

''ஆனால் அதனால் ஏற்பட்ட பொறுப்புகளை — எமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையிலும் — நாமே எமது தோளில் ஏற்றுள்ளோம்.''

''அதைச் செய்வதற்கான உறுதி என்னிடம் உள்ளது. இது விடயத்தில் எனக்கு முழு ஆதரவு தருவதில் எனது அரசும் உறுதியாக உள்ளது''

''ஐ. தே. கட்சி செய்த குழப்பத்துக்கு தீர்வு காணும்



ரணில்

முயற்சியில் நாம் இருப்பதால் அதற்கு ஆதரவு தரும் தார்மீகக் கடப்பாடு ஐ. தே. கவுக்கு இருப்பதாக நான் கருதுகின்றேன்.''

— இவ்வாறு ஜனாதிபதி வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கின்றார்.

ஐ. தே. கட்சியின் நழுவல் போக்கினால் ஜனாதிபதி எவ்வளவு சீற்றமாக இருக்கின்றார் என்பதை அவரது கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.



அரசின் தீர்வுத் திட்டம் தொடர்பாக தெரிவுக்குழுவில் இணக்கம் ஏற்படாததால், இதுவரை இணக்கம் காணப்பட்ட விடயங்களுடன் இணக்கம் காணப்படாத விடயங்களையும் சேர்த்து அப்படியே அரசுத் தரப்பு யோசனையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என தெரிவுக் குழுவின் கடைசிக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது தெரிந்ததே.

அதனடிப்படையில் அரசின் யோசனைகள் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அந்த யோசனைகளுடன் பின்னிணைப்பாகச் சேர்ப்பதற்கு மூன்று பக்க அறிக்கை ஒன்றை ஐ. தே. க. சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் கூட அதிகாரப் பகிர்வின் அடிப்படை விவகாரங்கள் குறித்து தெளிவான கருத்து எதனையும் ஐ. தே. க. தெரிவிக்காமல், நழுவல் போக்கை கடைப்பிடித்திருக்கின்றது.

அதாவது அரசின் அதிகாரப் பகிர்வுத்திட்டம் தொடர்பாக ஐ. தே க. என்ன நிலைப்பாடு எடுக்கப்போகின்றது என்பது அரசின் தீர்வுத் திட்டம் வெளியாகி, ஒரு வருடத்துக்கு மேலாகியும் மூடுமந்திரமாகவே இருக்கின்றது.

என்றாலும், எந்த அரசமைப்பு சீர்திருத்தமும் தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ. தே. கட்சி திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருவது, நாடாளுமன்றத்தில் அத்தகைய திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றாக வேண்டும் என்பதை அரசுக்கு வலியுறுத்தவும், அதற்காக ஐ.தே.கட்சியின் காலில் அரசு விழுந்தாக வேண்டும் என்பதை அரசுக்கு உணர்த்தவுமே ஆகும்.

அதாவது, எந்தத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தனது உதவி, ஒத்துழைப்பு பெற்றே ஆக வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டும் ஐ.தே.க, தீர்வுத் திட்டம் பற்றிய தனது நிலைப்பாட்டை மாத்திரம் தெளிவுபடுத்த பின் நிற்கின்றது.

இது ஒருபுறமிருக்க —

அரசுத் தரப்புத் தீர்வுத் திட்டம் குறித்து திட்டவட்டமான முடிவு எதையும் எட்டாமலேயே தெரிவுக்குழு நடவடிக்கை முடிவுறுவதும்—

அந்தப் பொறுப்பு நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதும் —

மறுபுறத்தில் தமிழ்க் கட்சிகளை 'அப்பாடா!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை தெரிவுக்குழு விவகாரம் 'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்!' என்ற நிலை மாதிரித்தான்.

அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட வேண்டிய வடக்கு — கிழக்கு நிர்வாக அலகு குறித்தே தமிழ்க் கட்சிக்குள் லடாய்.

இப்போதுள்ள வடக்கு — கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் அப்படியே பேணப்பட வேண்டும்; பிரிக்கப்படக் கூடாது என்பதில் விடாப்பிடியாக நிற்கின்றது ஈ.பி.டி.பி.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகைப் பிரித்துக் கொடுக்கவும், அம்பாறையை ஊவா மாகாணத்துடன் இணைக்கவும் ஒப்பும் கொண்டுள்ளது கூட்டணி.

இவை இரண்டுக்கும் இடையில் புளொட். முஸ்லிம், சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் அவற்றைப் பிரித்துக் கொடுப்பது குறித்து ஆலோசிக்கலாம் என்கின்றது அக்கட்சி.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழ்க் கட்சிகளும் இப்படி கருத்து வேற்றுமைப்பட —

கிழக்கில் முக்கிய பிரதேசங்களைப் பிரித்து விட்டு, மட்டக்களப்பு — திருகோணமலை மாவட்டங்களை மட்டும் வடக்குடன் இணைப்பதா என்பது குறித்து அந்த மாவட்டங்களில் சர்வஜன

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கவிதை வடிவம் குறித்து போராட்டம் தேவைதானா?

''வாழும் கவிதையது வடிவத்தில் இல்லை''— இது கவிதை வடிவங்கள் இரண்டையுமே கல்யாணம் செய்துகொண்ட வைரவரிக் கவிஞனின் முடிவு. மேலும் முன்னுரைக்கு முகம் கழுவாது நேரடியாகப் பிரச்சினைக்கு வருகிறேன்.

பிரித்துப் பார்ப்பது தமிழனுக்குரிய தனிச்சொத்து. சாதிச்சண்டையில் தொடங்கி வீதிச்சண்டை வரைக்கும் அனைத்து முரண்பாடுகளுக்கும் காரணம் இந்தப் பிரித்து நோக்கும் பண்பேயாம். மரபுக் கவிதை என்றால் என்ன? புதுக் கவிதையென்றால் என்ன? ஏன் இவற்றுக்கிடையில் சச்சரவுகள்?

உண்மையில் 'மரபுக் கவிதையெனப்படுவது யாதெனின்' என்று தொல்காப்பியர் பாணியில் ஏதாவது விளக்கம் புதுக்கவிதைக்காரர்களிடம் உள்ளதா? அன்றி புதுக்கவிதை வடிவத்திற்கு விளக்கம் மரபுக்காரரிடம் உண்டா? இல்லையே! இரண்டும் விம்பமாறுபாடே தவிர பொருள்வடிவ மாறுபாடு உடைத்தன அன்று; ஒரேமுகந்தான் குழிவாடியில் பார்க்கும் போது ஒரு விதமாயும் தளவாடியில் பார்க்கும் போது ஒருவிதமாயும் தெரிகிறதல்லவா? அதுபோலத்தான் இவைஇரண்டும். தமிழ்மொழி மரபின் வழிவந்த கவிதை என்ற இலக்கிய வகையின் விம்பப் பிரதிபலிப்புகள். நான்கூட இவ்விரு வடிவங்களையும் மரபுக் கவிதை, புதுக்கவிதை எனப் பாகுபடுத்துவது கட்டுரை விளக்கத்திற்காகவும் உலகியல் வழக்கையும் கருத்திலேகொண்டுதான்.

மரபுக் கவிதையென்று புதுக்கவிதைக்காரர்கள் வேறுபடுத்தி உரைப்பது எதனை? எதுகை, மோனை, சீர், தளை போன்ற யாப்புறுப்புக்களையா? அப்படியாயின் அது யாப்புக்கவிதை என்றல்லவா அழைக்கப்பட்டிருக்க வேண்டும்? அல்லது சந்தக் கவிதையெனப் பட்டிருக்க வேண்டும், தமிழ்ப் பண்பாட்டின் வாழையடி வாழையாக வந்த சிந்தனையோட்டத்தைக் கொண்ட கவிதைகள் யாவற்றுக்கும் மரபுக்கவிதையெனப் பெயரிட்டனரா? சரி அப்படியாயின் புதுக்கவிதை என்பது தமிழ்ப்பண்பாட்டு மரபியற் சிந்தனைகளை புறக்கணித்ததா? டயானாவைக் கற்புத் தெய்வமென்று போற்றும் மேற்குலக பண்பாட்டை ஆமோதித்து எழுத்ததா? அதுவும் இல்லையே! புதுக்கவிதையும் எமது மரபியலைத்தானே அத்திவாரமாகக் கொண்டிருக்கிறது! இன்றைய புதுக்கவிதைக்காரரின் படிம அடுக்கு உத்தி ஜப்பானிய ஹைக்கூவிலிருந்தும் இங்கிலாந்தின் லெமினரிக்கிலிருந்தும் பெறப்பட்டதா? இல்லையே! எந்த யாப்பிலக்கணத்தை இகழ்ந்து ஒதுக்கினரோ அதே யாப்பருங்கலத்தின் இரணைச் சகோதரனான அணியலங்காரத்தின் அச்சுநகல்களல்லவா இந்தப் படிமங்கள்!

கவியரசு வைரமுத்துவின் ''திருத்தி எழுதிய தீர்ப்புகள்'' தொகுப்பிலுள்ள 'அந்திப் பொழுது' ஓர் அற்புதமான புதுக்கவிதைக்கு இலக்கணம் என்று தற்கால புதுக்கவிதைப் பரிமேலழகர் விக்கிரமாதித்தன் கூறியுள்ளார்.

''சூரியன் பூமிக்கு போய் வருகிறேன் என டாடா காட்டியபோது விரல்களில் மின்னிய வைரமோதிரங்கள்'' என்றார் கவிஞர் — அந்தி வானத்தை. இது போல பலவித படிம அடுக்குகள். இது புகழேந்தியின் 'கூவினவே கோழிக் குரிய ஸ்ரையிவில்' இல்லை!?' அதேதான் இது. தற்குறிப்பேற்ற அணியின் தத்துப்பிள்ளை தான். இத்தகைய படிமங்களை கூட எளிய சொற்களால் ஆசிரியப்பாவில் அதேகவிஞரே ''தனது வைகறை மேகங்களில்'' பாடியுள்ளார். விண்மீன்களைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தார். ஆக ஒன்று புரிகிறது எத்தகைய படிமஅடுக்கையும் கூட இலகுவாக யாப்புக்குள் பாடிவிட முடியும்.

பழசு என்ற காரணத்திற்காக கேலி செய்வதும் புதிது என்ற காரணத்திற்காக பூட்டிக் கொள்வதும் தற்கால சமுதாயத்தின் சாபக்கேடாகும்.

ஒன்றை நீங்கள் வெறுக்கின்றீர்கள், தூற்றுகின்றீர்கள் என்றால் அதற்கு இரு காரணங்கள் இருக்கலாம். ஒன்றில் அந்த விடயம் உங்களுக்கு எட்டாப்பழமாக இருக்கும். இல்லாவிடில் அதனோடு எதிரான இன்னொன்று உங்களுக்கு வேர்ப்பலாவாக இனிதாக எளிதாக இருக்கும். இது மனித இயல்பு. ஆனால் மனித சமுதாயத்திற்கே மூக்கணாங்கயிறு போடும் கவிஞர்கள் இவ்வாறு இருந்துவிடக் கூடாது. மரபியல் விடயங்களையும் எழுத்தெண்ணித் தெரிந்துகொண்டு, அவற்றை ஆளவேண்டும்; அதே நேரத்தில் புதுமையையும் உள்வாங்கி அன்னத்தியல்பு போல் பாலும் நீரும் பாற்படப் பிரித்து நல்லவையகத்திவிட்டு நவைபுறத்திட வேண்டும். இது சமுதாயச் சிற்பிகளான கவிஞரின் கடமை. அதைவிடுத்து ஆளுக்காள் கட்சிபிரித்து மாறி மாறிச் சேறு பூசுவது விசனத்திற்குரியதாகும்.

புதுக்கவிதை என்பது அவசர யுகத்தின் 'உடனடித் தோசைமா'; சோதனைக்குழாய் மழலை; உண்மைகளின் நிர்வாண தரிசனத்தால் வாசகனை நிலைகுலைத்து புல்லரிக்கச் செய்யும் அற்புத படைப்பு; நிஜங்களின் நெத்தியடி; காதலியின் எதிர்பாராத உதட்டு ஸ்பரிசம்; நீண்ட நாள் பிரிந்த மகனைக் காண வாசலில் விழி வைத்திருக்கும் அன்னையின் ஏக்கத்திற்கு திடீரெனப் பின்புறத்தே வந்து கட்டியணைக்கும் மகனின் அன்புத் தழுவல்: உசைப்பு மழை — இது என்னுடைய விளக்கம்.

மாங்கனியும் இனிப்புத்தான், பலாச்சுளையும் இனிப்புத்தான். ஆனால் ஒரே சுவையே இரண்டு கனிகளுக்கும் வேறுபட்டதல்லவா? அதேபோலத்தான் மரபுக் கவிதை ரசனையும் புதுக்கவிதை ரசனையும் சந்தர்ப்பங்களுக்கேற்ப வேறுபடும். திடீரெனத் தழுவிய மகன் தந்த இன்பம் ஒருவகை; மங்களவாத்தியம் ஒலிக்க ஊர்வலமாய் மாலைசூடி நடைபயின்று வரும் மகனைக் காணும் இன்பம் ஒருவகை. இதில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்ற பேதம் இல்லை. முதல்வகை புதுக் கவிதையெனில் இரண்டாம் வகை மரபுக்கவிதை.

நவநாகரிகப் பெண்களுக்கு குடும்ப உறவுகள் என்பதெல்லாம் எப்படி விலங்காகத் தெரிகிறதோ அதுபோல இளைய சமுதாயத்திற்கும் 'யாப்பு' என்பது விலங்காகத் தெரிகிறது. ''தளை என்பது கவிதைக்குக் கயிறாகவே படுகின்றது. உண்மையில் சீர்களுக்கிடையில் ஓசை முறிவடையாமல் இணைக்கின்ற ஓர் இசைப்பாலம்'' ஒரு Joint தான் தளையாகும். எதுகை, மோனையெல்லாம் முன்னோர்களின் மூடநம்பிக்கை என்று கருதும் இவர்கள் யாப்பியலைப் புறக்கணிக்கும் போது அதனை உணர்ந்துவிட்டுப் புறக்கணிக்கட்டும். கனவென்றாலும் கற்று மறக்கட்டும். பின் முடிவு எடுக்கட்டும். அனுபவ அறிவே மெய்யறிவு. இது ஆதிசங்கரர் முடிவு. அதனால் சில மதில் மேற் பூனைகள் (தென்னிந்தியக் கவிஞர்கள்) நோச்சிக்கனமும் பணவரவும் கருதி வார்த்தைச் சுச்சாதனர்களாக இருந்துகொண்டு அதற்குக் காட்டும் சாக்குப் போக்குகளை நாம் ஒதுக்கித் தள்ளலாம். ஓர் இந்தியப் புதுக் கவிதை விமர்சகர் கூறினார்:- ''சூரியன் கூட கிழக்கு 'மேற்கு எனும் வரைமுறைகள் கொடுத்திருத்தான் தன் ஒளிக் கிரணங்களைத் தருகிறது; நாங்களோ எங்கெல்லாம் இருள்மயமாய் இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று ஒளிதரும் தீப்பந்தங்கள்'' — என்றார். உலகில் பல நல்ல விஷயங்களுக்காகத்தான் அந்த இருட்டு விதிக்கப்பட்டது என்பதையும், சில இடங்களில் இருட்டுத்தான் நாளைய விடிவுக்கு நம்பிக்கைக் கருவறை என்பதையும் அவர் அறிந்திருக்க நியாயமில்லை.

> புதுக் கவிதையின் தன்மை, வடிவம் ஆகியவை குறித்தும் அதன் தற்காலப் போக்குக் குறித்தும் மரபுக் கவிதை பற்றியும் ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாறல் சஞ்சீவியில் தொடராக வெளிவருவது தெரிந்ததே.
>
> அந்த வகையில், இளம் கவிஞர் ச. முகுந்தன் முன் வைக்கும் — சிந்தனையைத் தூண்டும் — கருத்தாழம் மிக்க கட்டுரை இந்த வாரம் பிரசுரமாகின்றது.
>
> (ஆ — ர்)

நான் கூறுவது மரபுக் கவிதைதான் உயர்ந்தது என்பதனை அல்ல. நாகரிகமோகம் போல், ஒரு பண்பாட்டு வடிவத்தைத் தெரிந்து கொள்ளாமலே இளைய சமுதாயம் புறக்கணிக்கிறதே என்பதைத்தான்.

மொழிக்கு அத்திவாரமே ஒலிதான். ', மொழி முதல் காரணமாமணுத்திரளொலி'' — நன்னூல். ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'' இது ஒலிதான் இறைவனின் நிதர்சன விம்பம். ''நாத விந்து காலாதி நமோ நமோ''.

இந்த ஓசை ஒத்திசைவுகளின் அடிப்படையில் தான் செய்யுள், யாப்பு உருவாக்கப்பட்டன.

எவ்வாறு சப்த ஸ்வரங்களுக்குள் உலகத்தில் எழும் அனைத்து ஒலிகளையும் அடக்கிவிட முடிகிறதோ அதேபோன்று இந்த மாச்சீர், விளச்சீர், கனிச்சீர், காய்ச்சீர்கள் ஓசையனைத்தையும் அடக்கி விடலாம். ஆங்கிலப் பதங்களென்ன, நாயின் ஊளையைக் கூட அசைபிரித்துக் கொள்ள முடியும். எப்படி புதுக்கவிதை என்பது ஒரு பாவடிவமோ அதே போன்ற வேறுபட்ட வடிவங்கள்தான் இந்த நாற்பாவகையும். அவற்றின் இனங்களும் ஆகும்; சகித்த ராகங்கள் எப்படி உணர்வுப் பிரதிகளாக இருக்கின்றனவோ அவ்வாறே பாவகைகளும் உணர்வுகளிற்கேற்ப ஓசை வேற்றுமை ஒத்திசைவுகளைக் கொண்டுள்ளன.

துள்ளலுக்கு கலியும், தூங்கலுக்கு வஞ்சியும், செப்பலுக்கு வெண்பாவும் அகவலுக்கு ஆசிரியமும் எவ்வளவு நுணுக்கமாக அமைக்கப்பட்டுள்ளன என்பதனை அனுபவித்து மாத்திரமே அறியமுடியும். அதைவிடுத்து குருடர்கள் யானை பார்த்த கதையாகக் கூறிவிடமுடியாது. ''மரபுக் கவிதை செத்த பிணம்; அது 'போஸ் மோட்டம்' செய்த உடல்'' என்று—வள்ளுவனுக்கு, கம்பனுக்கு, பாரதிக்கு தெரியாத ஒரு விடயத்தை இங்கே பரப்பிக் கொண்டிருக்கும் விக்கிரமாதித்தன் போன்ற நவகவிதைக் கர்த்தர்களைத்தான் [illegible]

யாப்பின் வரையறைக்கு உட்பட்ட வெறும் எதுகையும் மோனையும் எப்படி உயிர்த் துடிப்புள்ள கவிதையாகாதோ; அதே போல வெற்றுச் சொற்றுண்டங்களுக்கு இடையில் குற்றப்பட்ட புள்ளிகளும் காற் புள்ளிகளும் அரைப் புள்ளிகளும் முக்காற் புள்ளிகளும் கவிதையாகிவிட முடியாது. இதை இரு தரப்பாரும் ஒத்துக்கொள்ள வேண்டும். வெறும் அணிகலன்களைப் பூட்டிய சிலை அம்பாளாகிவிட முடியாது; அது அருள் சொரியவேண்டும், இதே போலத்தான் கவிதையின் கரு அதன்பாரிவை. அழகுணர்ச்சி என்பன உயிர்த்துடிப்புள்ளதாக இருக்க வேண்டும்.

முதற் புதுக்கவிதை/வசனகவிதை எனப்பட்டது பாரதியின் ''குச்சிகளின் உரையாடல்தான்.'' இது ஒரு மெய்ஞ்ஞானப் படிமம். இதே கருவைத்தான் அவன் கலிப்பா மெட்டில் குயிற் பாட்டிலும் வேதாந்தமாக விரித்து வைத்துள்ளான். இந்தச் சமநோக்கு எல்லாக் கவிஞனிடத்திலும் எழவேண்டும். இந்தப் புதுக் கவிதை திடீரென தமிழில் குதித்ததொன்றல்ல. யாப்பருங்கலத்தை அறிந்தவர்களுக்கு இது தெரியும். ''இணைக் குறளாசிரியப் பா'' எனப்படும் பாவினம் ஏறக்குறைய தற்கால புதுக்கவிதை வடிவத்தை ஒத்தது; தன்னகத்தே பல நெகிழ்ச்சித் தன்மைகளை உடையது.

ஆனால் முற்றத்து மல்லிகைக்கு மதிப்புக் கொடுக்காத இளையசமுதாயம் யப்பானின் 'ஹைக்கூ'வையும், இங்கிலாந்தின் 'லெமினரிக்' வடிவங்களையும் கொண்டு வந்து புதுக்கவிதைக்கு ஒரு வரையறை கொடுக்க முனைகின்றது. பார்த்தீர்களா வரையறையே இல்லாதது கவிதை என்று பறை முரசு கொட்டியவர்கள் இன்று சுற்றுமதில் கட்டி குடியிருக்க முயல்வதை! இதைத் தவறென்று நான் கூறமாட்டேன். ஒரு வேண்டுகோள் விடுகிறேன். ஹைக்கூவின் வரையறைக்குள் நின்று எழுத முயற்சிக்கும் கவிஞர்களே, அந்தப் பிரயத்தனத்தை எங்கள் கலிவெண்பா வடிவத்திலும் கொஞ்சம் செலுத்திப்பாருங்களேன். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை அறிதல் தவறென்று கூறவில்லை, அவன் உங்களிடம் உங்கள் பாரம்பரிய வடிவங்களைக் கேட்டால் அவனுக்கு விளக்கம் தருதல் உங்கள் கடமையல்லவா? அதற்காகவாவது உங்கள் அத்திவாரத்தை முதலில் அறிந்து கொள்ளுங்கள்.

மரபுக்கவிதைகள் ஆகாது என்று முகஞ்சுழிப்பவர்களின் நொண்டிச்சாட்டுக்கள்:-

- ★ பாமரருக்கு விளங்கவில்லை
- ★ வெற்றுச் சந்த ஓட்டம்
- ★ வரையறைகள் உணர்வுகளைத் தடை செய்யும்

இந்தத் தவறுகளை புதுக்கவிதை என்று சொல்லப்படுபவை தவிர்த்துக் கொண்டுள்ளனவா என முதலில் பார்க்கலாம். பாமரர்களுக்கும் புரிய வேண்டும் என்ற உண்மைச் சுமைக்கு உத்தரவாதம் கொடுத்தெழுந்த புதுக்கவிதைகள் கால ஓட்டத்தில் மேதாவிலாசத்தை குறியீட்டு படிமங்களால் காட்ட முற்பட்டன. தற்போது புரியாமல் அல்லது புரிவதுபோலப் புரியவிடாமல் எழுதப்படுவதே புதுக்கவிதை எனப்படுகிறது. இதை பிரபலமான தமிழக விமர்சகரான வல்லிக் கண்ணனே பின்வருமாறு கடிந்திருக்கிறார். ''கறுப்பு வெள்ளையில் தங்கள் பெயர்வரவேண்டும் என்ற ஆசையால் பல புதுக்கவிஞர்கள் தங்கள் பேனாமையினை வீணாக்குகிறார்கள்''

## ச. முகுந்தன்

நானும் உதாரணத்துக்கு ஒரு பிசாசை ஆலையிலிடுகிறேன். புதுக்கவிதைகள் மட்டுமே வருகின்ற இந்தியக் கவிதைச் சஞ்சிகை ''ழ'' மாத இதழ். இதழ் ஆசிரியர் ஆத்ம நாம். பிரபல ஞானக் கூத்தனும் ஆசிரிய குழுவில் ஒருவர்.

இதழாசிரியரான் 'நிஜம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதை இதோ:-

நிஜம்
நிஜத்தை நிஜமாக
நிஜமாக நிஜம் நிஜத்தை
நிஜத்தை
நிஜமாக நிஜம்
நிஜமே நிஜமோ
நிஜம்
நிஜமும்
நிஜமும்
நிஜமாக
நிஜம் நிஜம் நிஜம்

— இது வெறும் புருடாக்கதை என்று நினையாதீர். சான்று அந்த—இதழ் என்கையில் தற்போதும் உண்டு. இந்தக்கவிதை எங்கள் செல்லப்பா சுவாமிகளுக்கு சில வேளைகளில் புரிந்திருக்கக் கூடும். ஆனால் இதை எழுதியவர் புதுக்கவிதைப் பயிர் வளர்க்கும் சொல்லேருழவர் ஒருவர். மிளகு கொடுத்து மிளகாய் வாங்கியநிலை வாசகர்களுக்கு. ஏனைய இரண்டு பிரச்சினைகளுக்கும் முதலிலேயே பதில்கள் சொல்லப்பட்டு விட்டன. யாப்புக்குள் நின்று கொண்டு பாமரத்திற்கும் புரியுமாறு கவிதை படைக்க முடியாதவன் கவிஞனேயல்ல. புலவர்க்குப் புலியான வெண்பா வடிவத்தை

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஞ்சினும் மிக மெல்லிய பாவலர் உள்ளங்கள்!

''பசுமையான நிலத்தில் தான் பயிர் வளரும். மென்மையான உள்ளத்தில்தான் கவிதை பிறக்கும்''. இக்கூற்று முற்றிலும் சரியே. உண்மையான கவிஞர்கள் மெல்லுள்ளம் வாய்ந்த மேன்மக்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். மெல்லுள்ளம்தான் மனிதாபிமானத்தின் பிறப்பிடமாக விளங்குகிறது.

## கவிஞர் ஷெல்லி

ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி தமது கவி வளத்தால் ஆங்கில மொழிக்குப் பெருமை சேர்த்தவர்: அவரது கவிதை நயத்தில் ஈடுபட்ட மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர் மேல் கொண்டிருந்த பெருமதிப்பால் 'ஷெல்லிதாசன்' என்ற புனை பெயரில் பல விடயங்கள் எழுதி உள்ளார். ஜீவகாருண்யம் மிக்க ஷெல்லி குளிர் தேசத்தில் பிறந்து வாழ்ந்த போதும் சைவ உணவையே உண்டுவந்தார்.

இயற்கை அழகை ரசிக்கும் ஷெல்லி காலையில் எழுந்ததும் நதிக்கரைக்குச் செல்வார். அங்கே மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருப்பார்கள், கூடையில் மீன் துடி துடித்துக் கொண்டிப்பதை ஷெல்லியால் சகிக்கமுடிவதில்லை. மீனின் பெறுமதியை மீனவரிடம் கொடுத்துத் துடி துடிக்கும் மீனை நதியில் விட்டு விடச் சொல்லுவார். அத்தனை மென்மை உள்ளது அவரது உள்ளம்.

## கவிஞர் பாரதி

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எல்லா மக்களும் வயிறார உண்ண வேண்டும் என்ற ஆர்வத்தால் —

''தனியொருவனுக் குணவில்லை யெனிற் சகத்தினை அழித்திடுவோம்'' என்று பாடினார். எல்லா பணிதருக்கும் இரங்கிய அவரது மெல்லுள்ளம் பறவைகளுக்கும் இரங்கியது.

பாரதியாரின் துணைவியார் செல்லம்மாள் சமையலுக்காக அரிசி எடுத்துவைத்து விட்டு அப்பால் சென்றிருந்தார். அவ்வேளை பாரதியார் வீட்டுக்கு வந்த சின்னஞ்சிறு குருவிகள் சப்தமிட்டன. குருவிகள் பசியால் வாடுவதாகப் பாரதியார் எண்ணினார். அவரது மெல்லுள்ளம் குருவிகளின் பசியைப் போக்கவிழைந்தது. சமையலுக்கு வைத்த அரிசி முழுவதையும் பறவைகளுக்குப் போட்டுவிட்டார்.

## அகநானூற்றுப்புலவர்

ஷெல்லி மீனுக்கு இரங்கினார்; பாரதியார் பறவைக்கு இரங்கினார். அகநானூற்றுப் புலவர் வண்டுக்கு இரங்குகிறார். குறுங்குடி மருதன் என்னும் புலவர் காதலன் ஒருவனில் வைத்துத் தன்கருணை உள்ளத்தைக் காட்டுகிறார்.

தொழில் காரணமாகத் தன் காதல் மனையாளைப் பிரிந்து செல்கிறான் தலைவன். எப்போது தொழில் முடியும், எப்போது காதல் மனையாளிடம் திரும்பிச் செல்லலாம் என்ற ஏக்கம் தலைவனின் அடிமனதில் இருந்து கொண்டே இருக்கிறது.

அவன் மேற் கொண்ட தொழில் வெற்றியாக முடிவுற்றது. வெற்றி மகிழ்ச்சி ஒரு புறம்: காதல் மனையாளைக் காணப்போகிறேன் என்ற உவகை மறுபுறம்.

விரைந்து செல்லக்கூடிய நெடுந்தேரில் புறப்படுகின்றான் தலைவன். திரும்பிச் செல்லும் பாதையின் இருமருங்கிலும் பெருமரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. மரங்கள் போதாதென்று மரங்களைப் பற்றிப்படர்ந்த கொடிகளும் பூத்துக் குலுங்குகின்றன.



கண்ணுக்கு அழகையும் காற்றுக்கு நறுமணத்தையும் கொடுக்கும் மலர்கள் அத்துடன் நின்றுவிடுகின்றனவா? வண்டுக்கு தேனையும் அல்லவா கொடுக்கின்றன? இதனால் மலர்களில் எல்லாம் ஆண்வண்டும் பெண்வண்டுமாகச் சோடி சேர்ந்து இருந்து தேனை உண்கின்றன. தேரின் மணி ஓசையால் வண்டுகள் தேன் உண்பதை விட்டுச் சோடி பிரிந்து கலக்க முறுமே என்று எண்ணுகிறான் தலைவன். உடனே தேரைநிறுத்துகிறான். மணியினுடைய நா. மணியுடன் அடிபட்டு ஓசை எழாதவாறு மணியின் நாவைக்கயிற்றினால் இழுத்துக் கட்டுகிறான். இப்போது மணியில் பேரொலியும் இல்லை. வண்டுகளுக்குத் தொல்லையும் இல்லை. இதனை அகநானூற்றுப் பாடல்,

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண்பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத்தேரன்''

என்கிறது.

## புறநானூற்றுப் புலவர்

மீனுக்கும், குருவிக்கும், வண்டுக்கும் இரங்கும் பஞ்சினும் மெல்லிய பாவலருள்ளத்தைக் கண்டோம். இனி, அரசன் என்றும் பாராது ஒரு மனித உயிரைக் காப்பாற்ற அரசனுடன் வாதாடும் கவி உள்ளத்தைக் காண்போம்.

இளந்தத்தன் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளி என்னும் அரசனிடம் செல்கிறார். சோழன் நலங்கிள்ளி இளந்தத்தனின் பாடலைக் கேட்டு உவகை அடைகிறான். பொன்னும் பொருளும் கொடுக்கிறான். தன்னுடன் சில காலம் தங்கச்செய்து உபசரிக்கிறான். சில நாள்களின்பின் இளந்தத்தன் என்னும் புலவர் சோழன் நெடுங்கிள்ளி என்னும் அரசனைப் பாடிப் பரிசில் பெறச் செல்கிறார். அப்போது சோழன் நலங்கிள்ளியும் சோழன் நெடுங்கிள்ளியும் ஒருவருடன் ஒருவர் பகைகொண்டிருந்தனர்

இக்காரணத்தால் இளந்தத்தன் என்னும் புலவரை சோழன் நலங்கிள்ளியின் ஒற்றன் என்று சோழன் நெடுங்கிள்ளி தீர்மானித்தான்; மரண தண்டனையும் விதித்தான். கோவூர்க்கிழார் இதனைக் கேள்விப்பட்டார். ஒரு பாவமும் அறியாத புலவர் ஒருவர் சோழன் நெடுங்கிள்ளியால் கொல்லப்படுவதா? என ஏங்கினார்; இரங்கினார்; விரைந்து சோழன் நெடுங்கிள்ளியிடம் சென்றார். நெடுங்கிள்ளியை நோக்கி ''அரசே, புலவர்களை ஒருபோதும் ஒற்றர்களாகக் கருதாதே; பாடிப் பரிசில் பெறும் புலவர்கள் ஒருபோதும் ஒருவருக்கும் தீங்கு நினைப்பதில்லை. புலவர்கள், கொடை வள்ளல்களை நினைத்து. பழமரத்தைத் தேடிச் செல்லும் பறவைகளைப் போல, அவர்கள்பாற் சென்று தமது ஆற்றலாற் கவி பாடிப் பரிசில் பெறுபவர்கள். பெற்ற பரிசிலைக் கூடத் தமக்கென ஒளித்து வைப்பவர்கள் அல்லர். பொருளைப் பாதுகாக்காது தாமும் உண்டு தமது உறவினர்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்து அவர்களது பசிப் பிணியை மாற்றுபவர்கள். இளந்தத்தனும் அத்தகைய கருணை உள்ளம் வாய்ந்த புலவரே. அதனால் அவருக்கு வழங்கிய மரணதண்டனையை நிறுத்தி அவரை விடுதலை செய் என்கின்றார்.

**- புலவர் ம. பார்வதிநாதசிவம் -**

கோவூர்க்கிழாரின் இந்த வேண்டுகோளைக் கேட்ட சோழன் நெடுங்கிள்ளி, கோவூர்க்கிழாரின் கல்விநலன், கவிநலன், நீதி, நேர்மை, வாய்மை அனைத்தும் அறிந்தவன். ஆதலின் இளந்தத்தனென்னும் புலவரை விடுதலை செய்கிறான். கோவூர்க்கிழாரின் கருணை உள்ளத்தைக் காட்டும் பாடல் இதோ.

''வள்ளியோர்ப்படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியாநாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றமருந்தி
ஓம்பாதுண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத்தீதறிந்தன்றோ வின்றே, திறம்பட
நண்ணார் நாண அண்ணாந்தேகி
ஆங்கினி தொழுகி னல்லதோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோரன்ன செம்மலுமுடைத்தே''

★

# அறிவியலின் ஆறுபடிகள்!

'அறிவியல்' என்பது ஆறு படிகளைக் கொண்ட — திட்டவட்டமான — செயல் முறைகளை உள்ளடக்கியது என்கின்றார்கள் ஆய்வாளர்கள்.

அந்த ஆறு படிகளும் எவை தெரியுமா?

## ஆர்வம்

ஒரு நிகழ்வு நமக்கு விநோதமகாத் தெரியலாம். அதைப்பற்றி தெரிந்து கொள்ள எமக்கு ஆர்வம் ஏற்பட வேண்டும். இந்த ஆர்வம் நம் மனதில் கேள்விகளையும் அதைப் பற்றி அறிவதற்கான தூண்டுதலையும் ஏற்படுத்தும்.

## நோக்குதல்

இந்த ஆர்வம் ஏற்பட்டதும் அந்த நிகழ்வு சம்பந்தப்பட்ட பல கூறுகளை நமது புலன்களின் துணை கொண்டு. அறிய முயற்சிப்போம். இதனை 'நோக்குதல்' அல்லது 'அவதானம்' என்று கூறலாம்.

பார்த்தல், கேட்டல், சுவைத்தல், தொடுகை, முகர்தல் என்பன அவதானத்தின் — புலன்களின் — வழிகளாகும்.

## அனுமானம்

புலன்களின் வாயிலாக நாம் சில கூறுகளை ஆராயும் போது, அவற்றில் ஏதாவது ஒன்று அல்லது பல நாம் காணும் நிகழ்வுக்கு காரணமாக இருக்கலாம் என்ற அனுமானத்துக்கு அல்லது முடிவுக்கு நாம் வருகின்றோம்.

## பரிசோதனை

தமது அனுமானம் சரியா என்பதைப் பரீட்சிக்க பரிசோதனைகளைச் செய்வது அவசியமாகின்றது. இதில் நாம் கூறுகளை வேறு சிலவற்றோடு மாற்றி இணைத்து ஏற்படும் விளைவுகளைக் கவனிக்கின்றோம். நமது அனுமானத்தை மீண்டும் மீண்டும் பரிசோதிக்கின்றோம்.

## முடிவுகள்

இந்தப் பரிசோதனையின் அடிப்படையில் நாம் சில முடிவுகளுக்கு — தீர்மானங்களுக்கு வருகின்றோம்.

## சரிபார்த்தல்

பரிசோதனையின் வாயிலாக நமக்குக் கிடைத்த முடிவுகள் சரிதானா என்பதை உறுதி செய்ய பலமுறை அந்தப் பரிசோதனையை நாம் மீண்டும் மீண்டும் நடத்திப் பார்க்கவேண்டும். மேலும் அந்த நிகழ்வை எமது அறிவியல் முயற்சியினால் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா என்பதை நாம்பார்க்க வேண்டும்.

இவற்றைச் செய்வதைத் தான் அறிவியல் வழி என்கின்றார்கள்.



விநாயகர் சிலைக்கு முன்பாக கிறிஸ்தவ ஆயர் ஒருவர் குத்துவிளக்கேற்றும் - சமய சமரசத்தை விளக்கும் அற்புதமான படம் இது. இந்து - கிறிஸ்தவ மானுடவியல் மற்றும் பிரபஞ்சவியல் குறித்த சர்வதேச கருத்தரங்கை அண்மையில் மும்பை (பம்பாய்) ஆர்ச் பிஷப் மொயின் இவான் டயஸ் ஆரம்பித்து வைத்தபோது இப்படம் எடுக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# இருப்பெறும் உணர்வுகள்...

## சந்திரா தனபாலசிங்கம்

பிறந்த. சிலநாள்களேயாகியிருந்த சின்னஞ் சிறிய அணில் குஞ்சு அது. அது பிறந்த விதம் யாருக்கும் தெரியாது. இப்போதுதான் அதன் சிறு உடலில் சிற்சில உரோமங்கள் அரும்பத் தொடங்கியிருந்தன.

வீட்டின் முகட்டுக் கூரைக்குள் இருந்ததொரு கூட்டிலிருந்து வீட்டுத் தரையில் வந்து விழுந்திருந்தது. தனது குஞ்சுகளின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதற்காகவே அந்த அணில்த் தாய் வீட்டு முகட்டுக்குள் தன் கூட்டினை அமைத்துக் கொண்டிருக்கும் போல... ஆயினும் குஞ்சு விழுந்து விட்டது.

விழுந்த சில விநாடிகளின் போதில் கண்களை மூடி மயக்கமுற்றாற்போல் கிடந்தது. பின் தன் உயிரே பறிபோய்க்கொண்டிருப்பது போல கத்தத் தொடங்கி விட்டது, கீச்சுக் கீச்சென்று அது கத்திய சத்தலில் தாய் அணில் தானும் கீழே இறங்கி ஓடிவந்தது. பதிலுக்குத் தானும் அப்படிக் கத்திக் கொண்டே தவிப்புடன் அங்குமிங்கும் தாவிக்கொண்டிருந்தது.

கூடவே இன்னுமொரு அணிலும் ஓடித்திரிந்தது. அது தந்தை அணிலாகத்தான் இருக்க வேண்டும். அதன் நேச நடவடிக்கைகளில் இருந்து அப்படித்தான் நினைக்கத் தோன்றியது.

சிறு பொழுதிலேயே பக்கத்தில் எதிரிகள் யாரும் இல்லையென்பதை அவை உறுதி செய்து கொண்டு விட்டன. மெல்லக் குஞ்சின் அருகில் வந்த தாய் அதைத் தன் வாயால் கௌவிக் கொண்டு தனக்கேயுரிய பாதைகள் வழியாக விரைந்து கூடு போய்ச் சேர்ந்தது. தந்தையும் கூடவே......

சுதர்சன் - ஆண்டு ஆறில் படித்துக்கொண்டிருப்பவன்... தன் வீட்டின் கூரைக்குள் இப்படி ஓர் அதிசயம் இருப்பதை இதுவரையில் அவன் அறிந்திருக்கவில்லை. நடந்து கொண்டிருந்த அணில் நாடகத்தை அவதானித்த பின்னால்தான் அவனுக்கு அந்த இரகசியம் தெரிய வந்தது. அவன் அடிக்கடி ஆர்வத்துடன் கூரை முகட்டைக் கவனிக்கத் தொடங்கினான்.

''முகட்டுக்குள் ஏதாவது தெரிகிறதோ...'' என்று அவன் அப்பா அவனைக் கேட்டார். அதற்கவன் அவரைப் பார்த்து பொருள் பொதிந்த மர்மச் சிரிப்பொன்றை உதிர்த்தான். சரியாக அணில் கூடிருந்த இடத்துக்கு நேர் கீழாக தன் படிப்பு மேசையை நகர்த்திக் கொண்டான். இப்போதெல்லாம் அந்தப் படிக்கும் மேசையிலேயே அவன் அதிகம் பொழுதைக் கழித்தான். அதனால் முன்பு போல் ''படி, படி'' என்று யாரும் அவனிடம் இப்போது நச்சரிப்பதில்லை.

கூட்டுக்குள் அடிக்கடி போய் வரும் தாய் அணிலைப் பார்த்திருப்பான். அதற்குள் சுமார் எத்தனை குஞ்சுகள் இருக்கக் கூடும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. இதுவே ஒரு மரமாக இருந்திருந்தால் மிகச்சுலபமாக அதனைத் தன்னால் அறிந்து கொண்டிருக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றியது.

மீண்டும் ஒரு நாளில் அந்த அணில் குஞ்சு கூட்டிலிருந்து தவறிக் கீழே விழுந்து விட்டது. சுதர்சனின் படிக்கும் மேசையில்தான் அது விழுந்திருந்தது. கீச்சிட்ட குரலில் அது கத்திய சத்தத்தில் அவனின் ''பூசா'' வந்து எட்டிப்பார்த்தது. முன்பெல்லாம் அவனுக்கு அது ''புஸ்ஸ்'' தான். ஒருநாள் 'செக்கிங்' என்று சொல்லி வீட்டிற்குள் வந்தவர்கள், படுக்கை அறையின் கட்டிலுக்குக் கீழேயும் புகுந்து பார்த்தனர். பயந்து போய் அங்கே பதுங்கியிருந்த பூனை பாய்ந்து கொண்டு வெளியே ஓடியது. அன்றவர்கள் அதைப் பூனைதான் என்று கண்டு நிம்மதி கொண்டவர். ''பூசா...பூசா'' என்று அதைப்பற்றிப் பேசிக் கொண்டு அவர்கள் திரும்பிப் போயினர்.

அன்றிலிருந்து தானும் அதைப் பூசாவென்றே அழைத்து வருகிறான். பூனையைப் பூசா என்பதாலோ— பூசாவைப் பூனை என்பதாலோ மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்து விடப்போவதில்லையே... பூனை பூனை தானே... என்னதான் அது அவனின் செல்லப்பிராணியாக இருந்தாலும் அந்த அணில் குஞ்சு அதற்கு இரையாவதில் அவனுக்கு எந்தவையோர் உடன்பாடில்லை.

குஞ்சைக்காக்கும் எண்ணத்தோடு அதைத் தனது கையில் எடுக்க முனைந்தான். அது நடுங்கிப் பயந்து மேசையிலிருந்தும் பாய்ந்து கீழே போய் விழுந்தது. நிச்சயம் அது தனக்குரிய இரையேதான் என்று முடிவு செய்துகொண்ட பூனையும் அதைக் குறிவைத்து ஓட்டமாய் ஓடிவந்தது.

உள்ளபடியாகவே தனக்கு அணில்குஞ்சின்மேல் அக்கறை இருந்திருக்குமேயானால் பூனையைத்தான் முதலில் அவ்விடம்விட்டு அகற்றியிருக்க வேண்டும் என்பதும் —குஞ்சின் மேல் தான் கை வைக்கப்போனதற்கு அதன் மேலுள்ள ஆசையே காரணம் என்னும் உண்மையும் ஒரு சேர அவனைத் தாக்கிய அந்த ஒரு கணத்தில்—அவன் மின்னல் வேகத்தில் செயல்பட்டான்.

பூனையைப்பாய்ந்து பிடித்து சாமான் அறைக்குள் போட்டு அடைத்துவிட்டான். மீண்டும் அணில் குஞ்சைத் தொடும் தைரியம் அவனுக்கில்லை. தாய் வந்து அதனை அழைத்துப் போகும்வரை அதற்குக் காவல் இருந்தான். விழுந்த குஞ்சு முன்னையது தானா அல்லது இன்னொன்றா என்பதனை அதன் தோற்றம் கொண்டு அனுமானிக்க முடியாதிருந்தது. அதன் கூட்டுக்குள் எத்தனை குஞ்சுகள் இருக்கக் கூடும் என்பதை அவனுக்கு அறியமுடியாமல் இருந்தது.

சுதர்சன் தன் வகுப்புத் தோழன் ரூபனுக்கு இந்த அணில் கதை எல்லாம் சொல்லியிருந்தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாய் இவன் சொல்லும் கதைகளால் ரூபன் மிகவும் கவரப்பட்டிருந்தான். தான் அணில்குஞ்சை பூனையிடமிருந்து காப்பாற்றியவித்தைதனை ரூபனுக்குச் சொல்ல வேண்டிய விதத்தினைத் தயார் செய்துகொண்டுதான் அடுத்த நாள் இவன் பாடசாலை போனான்.

அன்றவன் பாடசாலைக்கே வரவில்லை. ரூபனின் அண்ணன் செத்துப் போய் விட்டதாலேயே ரூபன் பாடசாலைக்கு வரவில்லை என்று வகுப்பறையில் சொன்னார்கள். அவனது அண்ணனும் அதே பள்ளியில்தான் ஆண்டு பதினொன்றில் படிக்கின்றான். முதல்நாள் மாலையில் ரியூட்டறிக்குப் போகும் வழியில் நடந்த துவக்குச் சூட்டுச் சம்பவத்தில்தான் செத்தானாம்.

முதல் நாள் மாலையில் தான் அணில் குஞ்சைக் காப்பாற்றியது போல் ரூபனின் அண்ணனை ஏன் யாரும் காப்பாற்றவில்லை என்று சுதர்சன் கவலைப்பட்டான். ஆண்டு ஆறு மாணவர்களோடு இவனும் செத்த வீட்டுக்குப் போனான். பெட்டிக்குள் கிடந்த ரூபனின் தமையனைப்பார்க்க அழுகை வந்தது. சுற்றியிருந்த எல்லோரும் அழுது கொண்டுதானிருந்தனர். ரூபனின் அண்ணன் தலையில் வெள்ளைத்துணியால் கட்டுப் போடப் பட்டிருந்தது. அதில் இரத்தமும் கசிந்திருந்தது. சாகும்போது அவன் தோளில் பை ஒன்று இருந்ததாம்......

தான் இனிமேல் எக் காரணம் கொண்டும் தோளில் பையொன்றைப் போட்டுக் கொண்டு தெருவில் போகக் கூடாதென்று சுதர்சன் தன் மனதிற்குள் முடிவெடுத்தான். ஏற்கனவே வீட்டில் பலவிதமான கட்டுப்பாடுகள் அவனுக்கு விதிக்கப்பட்டிருந்தன. அதோடு தோளில் பையும் போடக் கூடாதென்பதையும் இவன் தானே சேர்த்துக்கொண்டான்.

ஆயினும் சுதர்சனுக்குப் பயமாக இருந்தது. தனது பாதுகாப்பற்ற எதிர்காலம் குறித்து நிறையச் சிந்தித்தான்.

வீடு திரும்பிய சுதர்சனின் கண்களில் முதலில் தென்பட்டது அந்தத்தாய் அணில்தான். கத்திக்கொண்டே அங்குமிங்கும் தாவித்தவித்துக்கொண்டிருந்தது. தான் படிக்கும் மேசையில் அணில்குஞ்சு விழுந்திருக்கின்றதா எனப் பார்த்தான். மேசைக்குக் கீழேயும் பார்த்தான். ஏறக்குறைய வீடு முழுவதுமே தேடிப்பார்த்து விட்டான்.

எங்கேயும் குஞ்சு இல்லை. அணில்குஞ்சைத் தேடும் அவனைக் கவலையுடன் பார்த்தாள் அம்மா. ஓர் இண்டு இடுக்கு என்று பாக்கியில்லாமல் தொடர்ந்தும் தேடிக்கொண்டிருந்தான். அதன் தாயணிலிடம் ஏதையோ முறையிடுவதுபோல் ''கீச்சுக்கீச்'' என்று கத்திக்கொண்டுதானிருந்தது.

அம்மாவும் தவித்தாள். தான் எப்படியும் அதை அவனுக்குத் தெரியப்படுத்தியே தீர வேண்டும் என்று நினைத்தாள்.

தான் சமையலில் கவனமாயிருக்கும்போது அந்தக் குஞ்சு கீழே விழுந்திருக்க வேண்டுமென்றும் ......பூனை அதனைப் பிடித்திருக்கக் கூடுமென்றும்......அதனால் தான் தாய் அணில் இப்படிக் கத்துவதாக தான் நினைப்பதாகவும் அம்மா சொன்னாள்.

அவளுக்கு சமைப்பதற்கு மட்டுமே தெரியுமென்றும், வேறு விடயங்களில் கவனமில்லாதவள் என்றும் அப்பா அடிக்கடி அவளை நிந்தனை செய்வது அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆயினும் ஒரு நாள் அம்மா சமைக்காது விட்டாலும் எத்தனை கஷ்டம் என்பதைச் சில சமயங்களில் அனுபவ பூர்வமாக அவன் அறிந்ததனால் அம்மாவைத் தானும் அப்படி ஏசுவதற்கு அவனுக்கு மனது வரவில்லை.

தான் இல்லாத நேரங்களில் இப்படியும் நடக்கக் கூடும் என்பதை தன்னால் ஏன் இதுவரையிலும் நினைத்துப்பார்க்க முடியாமல் போனது என்பது அவனுக்கொரு புதிராகவே இருந்தது. அம்மா அந்தச் சம்பவத்தைக் கண்ணால் காணவில்லை என்பதையும், வெறும் ஊகத்தினால் மட்டுமே அப்படிச் சொல்கிறாள் என்பதையும் நினைத்துப் பார்த்தான்.

அணில் குஞ்சு இன்னும் உயிர்வாழ்ந்திருக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் மேலும் தன் தேடுதல்களைத் தொடர்ந்தான். எங்காவது ஒரு முடுக்கில் கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டு அந்தக் குஞ்சணில் இருக்குமென்றும், அது எப்படியும் தன் கண்களுக்குத் தென்படும் என்றும் அவன் எதிர்பார்த்தான். பயத்தின் காரணமாகவே அது சத்தமில்லாமல் ஒளிந்து கொண்டிருப்பதாகவும் கற்பனை செய்து கொண்டான்.

அப்போதுதான் அது நடந்தது. அவனது ''பூசா'' மியாவென்று வந்து இவன் காலருகில் நின்றதும்... இதுவரையும் தவித்துக்கொண்டிருந்த தாயணில் பழி வாங்குமாப்போல் பூனைக்கு மேல் வந்து ''பொத்'' தென்று விழுந்ததும்......அப்போதுதான் அது நடந்தது.

திகைத்துப் போய் பயந்தோடிய பூனையை வியப்புடன் பார்த்தான் அவன். பூனைதான் அணில்குஞ்சைப் பிடித்துவிட்டது என்பதில் ஐயம் ஏதும் அவனுக்கிருக்கவில்லை. பூனைகளிடமிருந்து அணில் குஞ்சுகளைப் பாதுகாப்பது பற்றியும் அவன் இப்போது சிந்திக்கத் தொடங்கினான். ★

## நிலை

சுயமான சிந்தனை!
சோதிக்கும் பொறுமை!
தாளுக்கேற்றும்
தற்றுணிவு!
இவைதான்...
உண்மையான படைப்பாளியின்
உன்னதமான குணங்கள்;
எனினும்,
உலகியல் நிகழ்வுகளில்
உலாவரும் உடைவுகளை,
உளுத்துப் போய்விட்ட
உதவாத கொள்கைகளை
உண்மையின் தரிசனமாய்
உருகவைக்கும் கற்பனையாய்
உருவாக்கித் தரும்போது
அறிவற்றவர்களின்
அர்த்தமற்ற கற்பிதங்களில்
அகப்படுகின்ற பரிதாபமும்
அவனுடையதே!

உடுவில் அரவிந்தன்.

## ஹைக்கூ கவிதைகள்

வானத்தை பிரியமாட்டாமல்
முகில்கள் விடும் கண்ணீர்,
மழை!

★ ★ ★

சூரியன் கண்ணடித்ததால்
மழைத்துளிகளின் வெட்கம்;
வானவில்!

★ ★ ★

குளத்திற் கூடச்
சொரிந்திருக்கிறது
சிவப்புச் சங்குகள்;
ஓ...தாமரை மொட்டுக்கள்!

★ ★ ★

ஆற்றில் கேட்கிறது
சலங்கைச் சத்தம்...;
தவளைகளின் பாய்ச்சல்!

★ ★ ★

சுழன்று விழுகிறதே
வண்ணத்துப்பூச்சி...
அட...பறவையின் சிறகு...?

★ ★ ★

பூச்சூட ஆசைதான்!
இருந்தாலும்
என்ன செய்வது...?
கூந்தல் இல்லையே!

★ ★ ★

கறுப்பு வயலில்
விதைத்ததால் தானோ
ஒன்றுமே இன்னும்
முளைவிடவில்லை...!
வானத்து விண்மீன்கள்!

★ ★ ★

கிணற்றுக்குள் பறக்கிறது.
ஹெலிக்கொப்டர்,
தும்பி!

★ ★ ★

நீ கேட்ட போது
தரமறுத்த பூக்களை
இப்போது தருகின்றேன்...;
உன் கல்லறைக்காக...!

★ ★ ★

அந்தி மாலையில்
கடலில் விழுந்து
தற்கொலை
செய்கிறான் ஒருவன்;
அட ...சூரியன்!

★ ★ ★

இயற்கையின் கழுத்தில்
வருணன் பூட்டிய
தங்கச்சங்கிலி;
மின்னல்...,

★ ★ ★

இரவு நேரத்தில்
மட்டுமேயென்றாலும்
என் கவிதைகளுக்குக்
குடை பிடிக்கிறான்
ஒரு கறுப்புச் சேவகன்;
எழுதிக்கொண்டிருக்கும்
கையின் நிழல்!

- தாட்சாயணி

## நிலம்...

எல்லையில்லா
உறவுக்கு
எல்லை வைக்கும்
அளவு கோல்.

## களம்...

இன்பமாய்
பொழுதைப்
போக்குவோர்க்கு
ஆடுகளம்.
துன்பமாய்
பொழுதைக்
கழிப்போர்க்கு
சமர்க்களம்.

ச. தியானேஸ்வரசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள் சிரிக்கும் நிலை வேண்டும்!

சொந்த மண்ணிலே தீயில் துடித்திடும்
எங்கள் துயரம் தீருமோ? — இனி
இந்த நிலை மாறுமோ? — விழி
சிந்தும் கண்ணீரில் கவிதை சொல்கின்ற
சோக நிலை போகுமோ? — புது
வாழ்வு உருவாகுமா?

ஆழக் கடலோடி, அகதி எனவாகி
அலையும் கதைமாறுமோ? — இல்லை
தொடரும் கதையாகுமோ? — அட
நாளை எம்வாசல் நாடி வந்திங்கு
தென்றல் தாலாட்டுமோ — எங்கள்
தேசம் இசை மீட்குமோ?

இரத்தம் சிந்தி, உயிர் நித்தம் போகின்ற
யுத்தம் முடிவாகவே — எம்
முற்றம் ஆர்த்தெழ — இனி
புத்தம் புதிதாக பூமி பிறந்தொரு
பந்தி விரிக்க வேண்டும் — வண்ணப்
பூக்கள் சிரிக்க வேண்டும்.

எம் தமிழ் அன்னை மண்ணிலோர்
அமைதி தோன்றி மகிழ்வுடன் — எம்
உறவுகள் கூடிசேர்ந்திட — தாயே
உனை வேண்டுகிறோம்? இங்கு வந்து
எங்கள் துயர்தீர்த்து — நமை
கடைத்தேற்று தமிழே!

- சுளிபுரம் வானவராயன் -

## ஈழத்தமிழன் பாடுகிறேன்

பொங்கும் கண்ணீர் வெள்ளத்தில்
புழுவாய்த் துடித்தே அழுகின்றோம்
மங்கி வருகிறது எம் வாழ்வு
வாழ வழியே தெரியவில்லை.

குருதிப் புனலில் மிதக்கின்றோம்
குண்டு மழையில் நனைகின்றோம்
நிரந்தரத் தீர்வு இல்லையோ?
நிர்க்கதி வாழ்வின் எல்லையோ?

காட்டில் ஒளிந்து திரிந்தாலும்,
கடலில் மூழ்கிச் சென்றாலும்
வீட்டில் வெளியில் இருந்தாலும்
வேட்டை ஆடிக் கொல்கின்றார்

அனலின் மேலே மெழுகாக
ஆலையில் சிக்கிய கரும்பாக
தினமும் வாடிச் சாகின்றோம்!
தீர்வது துயரம் எந்நாளோ?

தமிழனாய்ப் பிறந்த தவறன்றி
தவறு வேறு செய்யவில்லை!
சுமைகள் இறங்க வழியில்லை
சுகமும் பெறவும் மருந்தில்லை.

- யாழ்வேந்தன் -

# வருகிறது விடியல்!

வருகிறது வருகிறது விடியல் வருகிறது
அந்தோ வருகுதென் பார் — நாமோ
விடிவொன்றும் கண்டோ மில்லை.
பெருகிறது பெருகிறது துன்பமே பெருகிறது
ஏமாற்றம் தான் மிஞ்சுமோ — இன்னும்
அழிவுதான் எங்கள் நிலையோ!
ஒருதரமும் இருதரமும் பலதரமும் என்றவர்கள்
மாநாடு நடத்துகின் றார் — என்றும்
முடிவொன்று காண மாட்டார்.
கருத்திலே நேர்மையும் தேசத்தில் பக்தியும்
உண்டென்றால் இக்கோலம் ஏன்? ஐம்பது
வருடங்கள் வீணான தேன்?

வேளைக்கோர் பேச்சாம் விடிந்ததும் போச்சுதாம்
யுத்தமே தீர்வு என்கிறார் — சொந்த
மண்ணிலே அகதியாக் கிறார்.
ஆளையாள் மாறிவந்து அரியணையில் குந்துறார்
வாக்குறுதி அள்ளி வீசுறார் — மறு
தேர்தல்வரை நாள் கடத்துறார்.
நாளைக்கு வருகிறது தீர்வுப்பொதி வருகிறது
என்ன இனிக்குறை என்கிறார் — பின்பு
வாக்கெடுப்பு வேண்டுமென்கிறார்.
மூளையும் செத்தாச்சு, காலமும் போயாச்சு
விடியல்தான் காண்ப தெப்போ? — ஒளி
மயமான கால ம் எப்போ?

ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டு
ஆட்சி செய்தோர் காலம் தொட்டு — அன்று
ஆரம்ப மான களரி
பேயினம் கொண்டாடும் பெருஞ்சுடலை ஆயிற்றே
பிணக்குவியல் சேர்கின்ற தே — இன்று
பீரங்கி ஆள்கின்ற தே!
ஈயினம் போலவே நாளுக்கு நாளாக
ஈழமும் அழிகின்ற தே இது
தீர்கின்ற பாடில்லை யே!
வாயினால் பேசியே விடிவொன்று காண்பரோ
வன்முறையே முடிவென் பரோ — படைத்த
தெய்வமும் துயில் கொண்டதோ?

— அரியாலை
சின்னையா துரைச்சாமி.

# கனடா குடிமகனின் நினைவலைகள்!

கோழிக்கறியும்
கொட்டில் கள்ளும்
கொடுத்த சுகம்
கொட்டும் பனியிலும்
''கொண்டேல்'' பாரிலும்
கிடைக்காது!
திக்கம் சாராயத்தின்
தித்திப்பு
திக்கெங்கு தேடியும்
கிட்டாது,
என்ன செய்வது?
எல்லாம் அவன் செயல்!
பனை வெளியிலே
படுத்துறங்கி
''மூனா'' பாதத்தில்
பணிந்தெழாக் குறையாப்
படியிறங்கி,
விழிகிறங்கிய சுகம்
வழி தேடிவந்த விடத்தில்
அழிந்தோடிப் போனதே!
கல்லெறிந்து — கந்தையாவின்
முட்டியுடைத்து
கள்ளடித்த கதை
கனடா கம்பியூட்டராலும்
சொல்லிட முடியாது!

''துரையண்ணை'' சீவிய புளிக்கள்ளும்,
''சாண்டோ'' இறக்கிய பழங்கள்ளும்
கலந்த போது
எழுந்த சுவை
அமரிக்கன் 'ஸ்க்காட்ச்'சிலும்
கிடையாது!

களவாகக் கோழிபிடித்து
கழுத்து நெரித்தால் — அது
கத்தியே காட்டிக் கொடுக்குமென்று
கழுத்தையே அறுத்துரித்ததும்,
ஆட்லறி அடித்த வேளை
அல்லோலப்பட்ட போதும் — களவாக
ஆட்டுக்கடா கொண்டு வந்து
ஆசையுடன் வறுத்தெடுத்ததும்
கனடாவில் காணமுடியாத
கனவுகள் தான்!

அம்மாக்குத் தெரியாமல்
வடலிக்குச் சென்று
சுற்று முற்றும் பார்த்து
சுத்தமாகக்குடித்து விட்டு
சத்தமின்றி வந்து பின்
சங்கதி தெரிந்து
சந்தடி புரிந்து ...
ஒருவாறு
சாந்தி செய்ததும் — பின்
வாந்தி எடுத்து
வாக்குக் கொடுத்ததும் ...
எல்லாமே இப்போ
கனவாக ...
நினைவில் நிழலாடும்.
இறந்த கால சோகம் கூட
நிகழ்கால சுகங்கள் தான்!

அதனால் தானோ என்னவோ
கோழிக்கறி 'பார்ட்டி'' நினைவு கூட
கோடிக் கணக்காய்
நெஞ்சில் கனக்கிறது!
காலத்தின் கோலத்தால்
கோழிகளையும் கோப்பைகளையுமா
இழந்தோம்?
வாழ்வின் வேர்களின்
வலிமையையு மிழந்தோம்!
இழந்த வேர்
ஒரு நாள் ...
வலிமை பெறும்
அந்த நாளில்
எம் வாழ்வில்
இன்ப (ங்) ''கள்'' ஊறும்.

- ஜேனா -

## வேரின்றி வீழ்வாய்...

கார் மேகம் சூல் கொண்டு
மழைப் பிள்ளைதான் பெற்றான்.
அதைத் தாலாட்ட மண்மாதா
மேலேந்தி மேனி சிலிர்த்தாள்.

தன்மீது நீர் ஓட
தழைத் தோங்கும் பயிரெல்லாம்
அழகான உடையாகி
அவள்மேனி செழிப்பானது.

தழை ஓடி நிலம் நனையும்
நாட்டில் மன்னன் குடியோங்கும்.
உயிரெல்லாம் நலம் வாழ
நாளும் உனை வாழ்த்திப் பாடும்.

கோமாதா கோரைப் புல்மேய
பாலோடும் தேனோடும்
பஞ்சமோ ஓடோடும் பட்டினியும்
பயந்தோடி பாய்ந்தோடுமே!

காடோடு தருக்கள் கண் மறைய
கூண்டோடு மரமழித்தால்
கார்மேகம் தனையோடி — ஐயகோ
கருச்சிதைவு தானாகுமே.

உன்தேவை பெரிதாகி — மனிதா
கோடரிக் காம்பாகி உலகை
தான்தோன்றித் தனமாக அழித்தால்
வேரின்றி வீழ்வாய் கவனம்.

- எரிக்கா நிமால் -

# என்னாசை இது!

கண் மீது கண் வைத்தென்
மண் மீது தடம் பதித்தோர்
பண் பாடி மகிழ்ந் திடவும் — ஆசை! அது
இன் றேனும் நிகழ்ந் திடவும் ஆசை !

செம் பாட்டுத் தரை பிளந் தேர்
நெம் போட்டிப் பயிர் விளைத் தூர்
அம் மானைப் பணிந் திடவும் ஆசை ! — பாடி
எம் பாவம் களைந் திடவும் ஆசை!

காற் றாடக் கால் மிதித் தூர்
பார்த் தோடி சைக்கிளில் நான்
வேர்த் தாழிக் கரையிறங்க ஆசை ! — நண்பர்
சேர்த் தாடிக்கு ளித்திடவும் ஆசை!

கொல் கின்ற அணி மாந்தர் யாரும்
இல் லாத தேசத்தில் நானும்
சில் வண்டாய்ப் பிறந்திடவும் ஆசை! — பூவில்
செல்வங்கள் பருகிடவும் ஆசை!! .

- மாவை - வரோதயன்.

## துன்பங்கள் எத்தனை?

துன்பங்கள்தான் எத்தனை?
துடைத்தழிக்க முடியவில்லை — சொந்த
பந்தங்கள்தான் எத்தனை?
சேர்ந்திருக்க வழியுமில்லை.
தான் பிறந்த மண்மீது
தரித்திருக்க விதியுமில்லை — மதியில்லா
நோய் திரள்வரல்
உயிர்வாழ வகையில்லை.
செப்பனிடா வர்த்தகத்தில் சுரண்டும்
பேர்வழிகள் ஒழியவில்லை — காக்கி
சாதனையர் சோதனையின்
வேதனைக்கோ அளவுமில்லை.
இரவென்ன பகலென்ன
பொருள் பறிக்கும்
சோரருக்கு தொகையில்லை — கதையில்
ஊதியம் எமக்கென்றும்
ஊழியம் தனக்கென்னும்
அரச ஊழியர்க்கு குறைவில்லை.
வடிவடித்து குடிகெடுக்கும்
கும்பலுக்கோ வரையுமில்லை. ஆளில்லா
அயல் வீட்டில்
உள தெல்லாம் தனதாக்கும்
கயவர்க்கும் கணக்கில்லல.
சேதமுற்ற திருநாட்டை
திருத்திடவே திருவருளும் துணையில்லை.

— ந. யாதவகுலசிங்கம்

# இறைவா! இறைவா!! நீ வருவாயா?

இறைவா இறைவா வருவாயா — நீ
படைத்த உலகைப் பார்ப்பாயா?
உலகில் எத்தனை அதர்மங்கள்
அதனை நீயும் அழிப்பாயா?

மனிதர்கள் எல்லாம் ஒருருவில்
மனம் கொண்டு நீயும் படைத்தாயே
ஆண் பெண் என்ற இரு உருவை
இதமாய் நீயும் வைத்தாயே!

இனத்தை இங்கு ஏன் வைத்தாய்
இதனால் எத்தனை துன்பம் ஐயா
நாளும் மனிதர் அழிகின்றார்
தடுக்க நீ மனமும் கொள்ளாயோ?

உருவமே இல்லா உனக்கிங்கு
எத்தனை உருவில் கோயில் வைத்தார்
பேதமே இல்லா மனிதவுயிர்க்கு
எத்தனை சாதி ஏன் இங்கு?

மனிதன் பணத்தை படைத்திட்டான்
பணத்தில் எல்லாம் அடக்கி விட்டான்
பணத்தால் கோயில் கட்டிவிட்டு
கல்லாக உன்னை ஆக்கிவிட்டான்!

கோவிலும் கல்லால் ஆனதையா
உன் உருவமும் கல்லால் ஆனதையா.
கல்லாய் என்றும் இருப்பாயோ
கடவுளே இரக்கம் கொள்ளாயோ?

ஐந்தறிவு உயிராய் மாக்களையும்
ஆறறிவு உயிராய் மக்களையும்
அவனியில் நீயும் ஏன் படைத்தாய்
மனிதர் பண்பை அறியாயோ!

அதர்மத்தில் ஆழ்ந்த பல மக்கள்
ஆலயத் தொண்டராய் விளங்குகின்றார்
தர்மமே தெரியா சில மக்கள்
தலைவராய் கோவிலில் மிளிர்கின்றார்

எண்ணற்ற மக்கள் ஏழைகளாய்
வெம்பிக் கொதித்தே மடிகின்றார்.
பணம் படைத்த தனவந்தர்
பேசா மடந்தையாய் உள்ளாரே!

எழுத்தில் வடிக்க முடியாத
எத்தனை எத்தனை துயரங்கள்
அத்தனை அத்தனை துயர்களையும்
சொல்லியழ இறைவா நீ வருவாயா?

இ. சி. தெட்சணாமூர்த்தி

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையே நீ வா!

மழையே நிலத்தை நாடி வா
மரங்கள் செழிக்க ஓடி வா
உன்னை நம்பி வாழ்பவர்கள்
உழவர் என்று தெரியலையோ?

வயலில் நெல்லும் செழித்திடவே
வருவாய் உணவும் கிடைத்திடவே
தத்தி தத்தி திரிந்திடும்
தவளையின் மகிழ்ச்சி கண்டிடுவாய்!

மயக்கும் அழகு மிகுந்திடும்
மயிலின் ஆட்டம் ரசித்திடுவாய்!
நாட்டின் வளமும் செழித்திடவே
வந்து நன்மை செய்திடுவாய்!

அ. பவித்திரன்
(நாவற்குழி ம. வி.)




## செல்வத் தமிழ்

தமிழன் என்று சொல்லுவேன்
தலை நிமிர்ந்து செல்லுவேன்
அமிழ்தம் ஊறும் தமிழிலே
அறிவைச் சேர்த்து வெல்லுவேன்!

வளரும் கணித இயலையும்
வாழ்க்கை வசதி வளர்ந்தந்து
பழகும் அறிவியல் தன்னையும்
பைந்தமிழ் நூலில் படித்தறிவேன்!

நாட்டின் நல்ல வரலாற்றை
நயந்து கற்பேன் தமிழிலே
கூட்டுறவாகும் வாழ்வியலைக்
கூடிக் கற்பேன் தமிழிலே!

பூவியல் யாவும் நானறிவேன்
பூவைப் போன்ற தமிழிலே
பாவியல் மிக்க தமிழ்ப் பாட்டைப்
பாடிப் பாடி மகிழுவேன்!

கல்வி எல்லாம் தமிழிலே
கண்டு கற்றுத் தேறுவேன்!
செல்வம் போன்ற தமிழப்பா
சிறந்த வாழ்க்கை தருமப்பா!

கி. துளசிகரன்
(மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.)

## எல்லாம் எலி மயம்!

எலியைக் கொல்ல வேண்டியே
எங்கள் அன்புத் தந்தையும்
குண்டு வெள்ளைப் பூனையைக்
கொண்டு வந்தார் காலையில்!

கொழு கொழுவெனப் பூனையும்
கொஞ்ச நாளில் வளர்ந்தது
அடுக்களையில் புகுந்தும்
அட்டகாசம் செய்தது!

எலிக்கு எமன் பூனையாம்
எல்லோருமே சொல்வது
எங்கள் வீட்டுப் பூனைக்கோ
எலியைக் கண்டால் எமபயம்!

பூனை வரும் முன்னரோ
எலிகள் அதிகம் இல்லையே
பூனை வந்த பிறகுதான்
இல்லம் முழுதும் எலிமயம்!

கி. கல்கிராஜ்
(மானிப்பாய் இந்துக் கல்லூரி.)

## உங்களால் முடியுமா?

1. கீழேயுள்ள 16 புள்ளிகளையும் ஆறு நேர்கோடுகள் வரைவதன் மூலம் இணைக்க வேண்டும். வரையத் தொடங்கி முடிக்கும் வரை பென்சிலை தாளில் இருந்து எடுக்கக்கூடாது முயன்று பாருங்கள்.



2. கீழேயுள்ள — நட்சத்திர வடிவத்தில் அமைந்துள்ள — பன்னிரண்டு வட்டங்களையும் ஒன்று முதல் பன்னிரண்டு வரையுள்ள எண்களினால் நிரப்ப வேண்டும். ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக் கூடாது. ஒரே வரிசையில் உள்ள எந்த நான்கு வட்டங்களின் இலக்கங்களைக் கூட்டினாலும் 26 என்ற விடை வரவேண்டும். முயன்று பாருங்கள்.



தொகுப்பு:-
நா. முருகானந்தன்
(விடை:- XI ஆம் பக்கத்தில்)

## தெரிந்து கொள்ளுங்கள்

★ இலங்கையில் வெளியான முதல் தமிழ்ப் பத்திரிகை — உதய தாரகை.

★ நடிகர்களுள் முதன் முதல் 'சேர்' பட்டம் பெற்றவர் — சார்லி சாப்ளின்.

★ இருதயத் துடிப்பை அறியும் கருவியின் பெயர் — 'கார்டியோ கிராப்'.

ஆக்கம்:-
ச. கர்ணன்.

## நொடிப் பொழுது

1. கழுத்துண்டு; தலையில்லை. உடலுண்டு; குடல் இல்லை. கையுண்டு; கால் இல்லை. அது என்ன?

2. வால்உள்ள குருவி. இரை எடுக்கும். சாப்பிடாது அது என்ன?

3. வெட்டலாம்; கட்டலாம்; ஆனால் எடுத்து வர முடியாது அது என்ன?

4. என்னை எவ்வளவு வேண்டுமானாலும் வளைக்கலாம்; ஆனால் ஒடிக்க முடியாது. நான் யார்?

5. என்னை நீங்கள்பார்க்கலாம்; தொடலாம்; ஆனால் பிடிக்கவே முடியாது. நான் யயர்?

6. வெள்ளைப் பிள்ளை யார் கோயிலில் விழுந்து கும்பிட இடமில்லை. அது என்ன?

### விடை

1) சட்டை
2) அகப்பை
3) வரம்பு
4) தலைமுடி
5) நிழல்
6) முட்டை

தொகுப்பு:-
[illegible]
([illegible]
ரோ.க.த.க. பாடசாலை)

## முயன்று பாருங்கள்!

கீழ் வரும் சொற்களை உங்களால் கண்டுபிடிக்க முடியமா பாருங்கள்.

(i) சொந்த இடத்தைக் குறிக்கும் நால் எழுத்துச் சொல். இரண்டாவது எழுத்தை நீக்கினால் விடாய்க்கும். மூன்றாவது எழுத்தை நீக்கினால் வீட்டில் விளையாடும் ஒரு விளையாட்டாகிவிடும். நடு இரண்டு எழுத்தும் இழந்தால் தங்களைக் குறிப்பதாகும். அச் சொல் என்ன?

(ii) மூன்றெழுத்து ஊர். உயரத்தில் இருப்பது. முதல் இரண்டு எழுத்து பார்க்கும். நடு எழுத்து இழந்தால் கவ்வும். அந்த ஊரின் பெயர் என்ன?

(iii) நான்கு எழுத்துள்ள இக்கருவி போக்குவரத்து சாதனத்தைக் குறிப்பது. சாமி வீதி வலம் வருவது கூட இதில் தான். முதல் எழுத்து இல்லாவிடில் பாரமாக இருக்கும். இரண்டாவது எழுத்து இழந்தால் எமது தலைக்குமேல் இருப்பது.

(iv) மண்ணுக்குள் கிடக்கும் இந்த நான்கு எழுத்துப் பொருள் அதிர்ஷ்டம் செய்தோருக்குக் கிட்டும். முதல் எழுத்தை நீக்க பெண்ணாகும். இரண்டாவது எழுத்தை நீக்க கடுமையாக வீசும். நடு இரண்டு எழுத்தை நீக்க நிலத்துடன் வளரும் ஒரு தாவரமாகிவிடும். உங்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த அதிர்ஷ்டம் என்ன?

(v) இராமாயண காலத்து நகரம். பஞ்ச கௌவியங்களிலும் ஒன்று. நான்கு எழுத்துக்களைக் கொண்டது. முதல் எழுத்தைநீக்க விலங்குகளின் கழிவுப்பொருள் ஆகும். இரண்டாவது எழுத்தை நீக்க வீட்டு முற்றத்தில் போடுவது வரும். மூன்றாவது எழுத்தை நீக்க சத்தமிடுவது என்று பொருளாகும். அந்த நகரின் பெயர் என்ன?

(vi) வழிபாட்டுடன் தொடர்புடைய ஐந்து எழுத்துச் சொல் இது. முதல் மூன்று எழுத்தும் குரங்கைக் குறிக்கும். கடைசி இரண்டு எழுத்தில் மதுப் பொருள் உண்டு. முதல் எழுத்தும் கடைசி இரண்டு எழுத்தும் சேர்ந்து தருவைத் தரும். முதல் எழுத்தும் மூன்றாவது எழுத்தும் சேர்ந்தால் சந்திரன் ஆகும். அந்த ஐந்து எழுத்தின் பொருள் என்ன?

(vii) நான்கு எழுத்தில் வீசுவது. கவரிமானின் மயிர் இதற்கு உதவும். முதல் எழுத்தை நீக்கினால் வளர்வது. இரண்டாவது எழுத்தை நீக்கினால் சுருக்கக் கருத்தைக் குறிப்பது; அதைக் கட்டுவோரும் உண்டு. மூன்றாவது எழுத்தை நீக்கினால் இரவில் வருவது. நடு இரண்டு எழுத்தையும் நீக்கினால் மண்ணிலிருந்து விண்ணிற்கு ஏவும் ஏவுகணை வகைகளில் ஒன்றைக் குறிக்கும். அந்த நான்கு எழுத்தில் வீசும் சொல் எது?

(viii) தெய்வ சித்தம் வேண்டி இந்த நான்கு எழுத்துச் சொல்லைப் பிடிப்பர். முதல் எழுத்து இழந்தால் அசைந்து செல்லும். இரண்டாவது எழுத்து இழந்தால் பல விதங்களைக் குறிக்கும். அச்சொல் எது?

தொகுப்பு:
வரணம்பாடி யோகராஜ் தினேஸ்குமார்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## கண்டு பிடியுங்கள்

இன்று எல்லோரும் வேண்டும் ஐந்து எழுத்துச் சொல்லை கீழே காண்கின்றீர்கள். அதற்குக் கீழேயுள்ள எட்டுக் கேள்விகளுக்குமான விடைகள் இந்தச் சொல்லில் மறைந்துள்ளன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

சொல்:- சமாதானம்

(அ) கொடையாகக் கொடுப்பது?
(ஆ) இழந்தால் பெறமுடியாத கௌரவம்?
(இ) எப்பொழுதும் என்பதைக் குறிக்கும்?
(ஈ) தாய் இவள்...
(உ) உவமானமாக — சமதையாக — வரக்கூடியதை இப்படிக் குறிப்பிடுவர்
(ஊ) மக்கள் கூட்டம்
(எ) கூட்டத்தைக் குறிப்பது
(ஏ) அவர்கள் தம்மைக் குறிப்பிடுவது இப்படி!

## சீடர்கள் வாங்கிய மாடு

ஓர் ஊரில் உள்ள மடத்தில் குருவும் சீடர்களும் தங்கி இருந்தனர். அவர்கள் அனைவருமே முட்டாள்களாக இருந்தனர்.

ஒருநாள், சீடர்களில் ஒருவன், "நம்குருவிற்குத் தேவையான பாலை நாம் அலைந்து திரிந்து வாங்க வேண்டி உள்ளது. சில நாள்களில் பாலே கிடைப்பது இல்லை. கிடைக்கின்ற பாலும் தண்ணீர்ப் பாலாகவே உள்ளது" என்றான்.

இன்னொருவன், "நீசொல்வதுஉண்மை. இதற்கு நாம் என்ன செய்யமுடியும்?" என்று கேட்டான்.

உடனே மற்றொருவன், "நாமே ஒரு நல்ல பசு மாடு வாங்கி விட்டால் என்ன? அலையும் வேலையும் குறையும். வேளா வேளைக்கு நல்ல பாலும் கிடைக்கும்" என்றான்,

'அப்படியே செய்யலாம்' என்றார்கள் மற்ற சீடர்கள்.

குருவும் இதற்கு ஒப்புக் கொண்டார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட சீடர்கள் மாடு வாங்குவதற்காகப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டனர். அப்போது வழியில் வந்த ஒருவனிடம், "எங்கள் குருவிற்கு நல்ல பசு மாடு ஒன்று தேவை. எங்கு கிடைக்கும்?" என்று கேட்டார்கள்,

இவர்களை முட்டாள்கள் என்று புரிந்து கொண்ட அவன் தன்னிடம் இருந்த முரட்டுப் பசு மாட்டை அவர்களிடம் தள்ளி விட நினைத்தான்.

"என்னிடமே அருமையான பசு மாடு ஒன்று உள்ளது. அது ஏராளமாகப் பால் கறக்கும். வீட்டிற்கு வாருங்கள். மாட்டைப் பார்க்கலாம்" என்று அவர்களை அழைத்துச் சென்றான் அவன்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூறல் வெள்ளம்

'துறந்தார் பெருமை' என்றார் வள்ளுவர். நீ வீட்டைத் துறந்து காட்டிலே போய் சடாமுடி வளர்த்து தவம் செய்தால் அது துறவும் ஆகிவிடாது; பெருமையும் ஆகிவிடாது.

மனதிலே பற்று விடுபவர்கள் — அதிகம் எதிலும் ஆசைப்படாதவர்கள் — தீயவற்றைக் கண்டு ஒதுக்கி விடுகிறவர்கள் — பிறருக்காக தமது அற்ப ஆசைகளை யாதல் துறப்பவர்கள் — தம்முயிரை, தம்முடலை, தம் சொத்து சுகத்தை, அடுத்தவர் நலனுக்காக கொஞ்சமேனும் விட்டுக் கொடுப்பவர்கள் — இப்படிப் பல ரகத்தினரை துறந்தார் எனலாம்.

இவர்களின் பெருமைகளை அளவிட ஓர் அளவுகோல் உலகினில் இல்லை என்று விட்டார் புலவர். அடுத்த உயிருக்காகத் தன்னை இழக்கின்ற மாண்பு அளவற்றது.

இந்த வையகத்தே இதுவரை பிறந்து — இறந்தவர்களை எண்ணுவதை ஒத்தது இப் பெருமையினை அளப்பது என்றார் வள்ளுவர். எத்தனை கணனிகள் செயற்பட்டாலும் ஒருநாளில் பிறக்கும் — இறக்கும் மாந்தர் தொகையினைக் கணித்திடல் இயலாத போது துறந்தார் பெருமையைக் கணித்திடல் (துணைக்கூறல்) இயலுமா?

**துறந்தார் பெருமைதுணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக் கொண் டற்று.**

—0022

இன்றே அறம் செய் (ஈண்டு புரி) அப்போது உனது பெருமை உலகினில் நிலைக்கும். பிற்காலத்தில் செய்யலாம் புண்ணியத்தை என விட்டுவிடாதே. அதற்கிடையில் மரணம் உன்னை அணைத்து விடலாம்.

தினம் தினம் உனது செயல்களில் அவதானமாக இருந்துவிடு. நன்மை தீமைகளைச் சீர் தூக்கிப் பார். பிறவிப்பயனை உணர்ந்து நட. மறைந்தபின் உலகினில் நீ நிலைக்க வழிதேடு. இவ் இருமைவகை தெரிந்தே அறம் செய்.

பிறப்பில் இருந்தே அறந் தவறும் நாளெல்லாம் நாள்ஆகா.

**இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்**
**பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு.**

—0023

(நீத்தார் பெருமை)

-அம்பிகைபாகன்-

## சொற்சிலம்பம்

### புதிர்ப் போட்டி இல. 21



சொற்சிலம்பம் இல. 21
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..............................................

விலாசம் : ..............................................

..............................................

——————— இங்கே வெட்டுக ———————

### முடிவு திகதி: 31 - 10 - 1997

**இடமிருந்து வலம்**

1. தீர்ப்பு வழங்குபவர். 5. ஒரு பாட்டு வகை: 7. வரலாறு. 9. அண்ணன். 11. கேடான சுவை. 13. படைப்பவன். 14. சூடு தருவது. 15. ஓர் அசைச்சொல். 16. விஷ்ணு 19. சைவர்கள் அடிக்கடி கூறுவது. 21. இறப்பால் பரபரப்பை ஏற்படுத்திய இளவரசி. 22. சிவனை வணங்குபவன்.

**மேலிருந்து கீழ்**

1. குறையுள்ளவன். 2. விளக்கு எரியத்தேவை. 3. படிவம். 4. சிரார்ந்த தினம். 5. கடுமை 6. யானையைக் கட்டுப்படுத்துபவன். 8. தேர். 10. சாளரம். 11. கை உறுப்பு. 12. இறுதியில் அடக்கம் இங்கே. 13. தந்தை வழி மூதாதையர். 14. பதினைந்தாம் திதி. 17. சுவை உணர்வு. 18. பௌர்ணமியை நம்நாட்டில் இப்படியும் அழைப்பர். 20. பூக்களில் சேகரிக்கப்படுவது.

### சொற்சிலம்பம் இல. 19 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. நரகம். 4. கவிதை. 6. கதிரை. 7. கடலை. 8. சகலன். 11. இல்லம். 12. எலி. 13. பாடு 14. வைபவம். 16. திக்கு. 17. கரு. 19. சம்மதம். 21. தண்ணளி. 22. திண்மை.

**மேலிருந்து கீழ்**

1. நகல். 2. ரதி. 3. கரைசல். 4. கடன். 5. விலை. 7. கலம்பகம். 9. கலவை. 10. வாலி. 11. இடுக்கண். 12. எம். 13. பாதி. 15. வருமதி. 18. வெம்மை. 19. சனி. 20. தண்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு:- தம்பையா யோகராசா,
பொது நூலகம்,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

★ இரண்டாம் பரிசு:- திருமதி கி. யேசுரத்தினம்,
21, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு:- மு. சண்முகராசா,
22, றெயில்வே றோட்,
கொக்குவில் கிழக்கு.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. | 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. | 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. | 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 20 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# இந்த வார இராசி பலன்

**(25 - 10 - 1997 முதல் 31 - 10 - 1997 வரை)**

## சோதிட சஞ்சீவி

| | | | |
|---|---|---|---|
| சனி | சந் | | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| வி | | | ரா |
| | செ வெ | *ஆ புத | |

மாற்றம்:

29-10-1997 தனுவில் செவ்வாய் மாறும். 30 - 10 - 1997 விருச்சிகத்தில் புதன் மாறும். 31-10-97 தனுவில் வெள்ளி மாறும்.

அரசியலில் அடிக்கடி மாற்றமும்- சத்தங்களும் கேட்கும். நாம் யுத்த நாட்டில் வாழ்கின்றோம் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது. இந்திய அரசியலில் போட்டிகள் சர்வசாதாரணம். சில தலைவர்களுக்கு நல்லதல்ல. கிழக்கு நாட்டில் அரசியல் மாற்றங்களும்- மேற்கு உலகில் திட்டமிட்ட செயல்களும் நடந்தபடி இருக்கும்.

**மேடம்:** எந்த நிலையிலும் வாழப்பழகி, எவரையும் நம்பி வாழும் உங்களைப் பொருளுக்காக குற்றவாளி ஆக்கச் சிலர் முயல்வர். கவனமாக, நிதானமாக இருந்து கொள்வது முக்கியம். பழையன கழிதலும் புதியன புகுதலும் நிறைவேறும். காணி பூமி, சொத்துச் சுகம் தேடி ஓடிவரும். தொழில் ஸ்தானத்தில் ஊக்கத்தைப் பொறுத்து உயர்வுகள் ஏற்படும். உதவிக்குப் போய் குறைகுற்றங்கள் கேட்க நேரிடும். காலமறிந்து செயற்படுவதில் கண்ணாக இருங்கள். அல்லது இழப்புக்கள், குறைகள் கேட்க நேரிடும். சொந்த பந்தம் குறைகூறினாலும் உங்கள் கடமையை மறவாது செய்து கொள்ளுங்கள். இந்த உலகத்தில் நேர் வழியில் செல்பவர்கள் சோதனைகளுக்கு மத்தியில் வாழுகின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? விஷபீடை, கைகால் தாக்கம் வரலாம். அவதானமாக இருக்கவும்.

**இடபம்:** உங்கள் குடும்பத்தினர் உங்கள் கருத்துக்களுக்கு ஒத்துப் போவதில்லை எனச் சிந்திக்காதீர்கள். ஜனநாயக நாட்டில் நீதியை அதிகளவு எதிர்பார்க்க முடியாதல்லவா? நூறு பேரில் ஐம்பத்தொருபேர் ஒரு குற்றவாளியை விடுவியுங்கள் என நின்றால் அக் குற்றவாளியை விட வேண்டும் என்கிறது ஜனநாயகம். குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட வேண்டும் என்கிறது நீதி. எது சரியானது எனக் கேட்பீர்கள் நீங்கள். நீதிக்காகப் போராட முற்படுவீர்கள். இந்நிலையில் உங்கள் பக்கம் பலவீனப்பட்டால் கொதித்து எழுவீர்கள். இக்காலத்தில் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும். உலகத்தில் சரிபிழைகளை நிதானப்படுத்தி வாழ முற்படுவதே அறிவு பூர்வமானது. உணர்ச்சிவசப்படுவது பலவீனமானது. விரோதிகள் உங்களைக்கண்டுகலங்குவர் காரிய அனுகூலங்கள் ஏற்படும். நல்ல புகழ்வரும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும்.

**மிதுனம்:** உங்களுக்கு எதிர்ப்பாலாரால் தொல்லைகள் ஏற்படும். கலகம் பிறந்து தானே நியாயம் பிறக்கும்? குடும்பத்தின் அபிப்பிராய பேதத்தை சமாளிக்கவும். எதிரிகள், விரோதிகள் பக்கத்தில் இருந்து பயமுறுத்திக் கொண்டிருப்பர்; பொருள்படுத்தாதீர். தேவையற்ற செயற்பாடுகளால் பலர் துன்பப்படுகின்றார்கள். என்ன செய்வது? நாம் தான் விலகி நடந்து கொள்ளல் வேண்டும. உடம்பைக் கொஞ்சம் கவனிக்கவும். நேரத்துக்குச் சாப்பிடாமல் வயிற்றில் வாயு நோ வரச்சந்தர்ப்பங்கள் உண்டு. தொழில்ஸ்தானத்தில் பணவரவு இருக்கும். இடமாற்றம், பொருள் நஷ்டத்தைக் கொடுக்கும். அட்டமத்து வியாழன் சஞ்சலத்தைக் கொடுக்கும். வியாழ பகவானுக்கு வியாழக்கிழமைகளில் பிரீதி செய்து வரவும்.

**கடகம்:** நீங்கள் நன்மை செய்வதாக எண்ணிச் செயற்படும் காரியங்களால் குறை கேட்பீர்கள். அலைச்சல் அடிக்கடி ஏற்பட்டு மனச்சோர்வுகளைக் கொடுக்கும். முயற்சியை விடாது தொடரவும். உங்களைச் சுற்றியுள்ளவர்களால் உங்களுக்கு தொல்லைகள் ஏற்படும் எனக் கருத முடியாது. மனிதம் எப்பொழுதும் ஏமாற்றத்தையும், வேதனையையும் தரும். தெய்வ நம்பிக்கையுள்ள நீங்கள் எப்பொழுதும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும். தொழில் ஸ்தானத்தில் அபிப்பிராய பேதங்கள்ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும். அல்லது குறைகேட்பீர்கள்.

**சிங்கம்:** உங்கள் பேச்சுக்களை கட்டுப்படுத்துங்கள். உங்கள் அசைவுகளை அயலவர்கள் அவதானித்தபடி இருப்பர். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். காலமறிந்து கலகம் செய்யாது நிதானமாக உங்கள் செயற்பாடுகளைச் செய்து வரவும். வீட்டில் விருந்தினர் அல்லது உறவினர் வரவு கலகலப்பைக் கொடுக்கும், மனக்கவலை, பயம்; யோசனைகள் இடைக்கிடை இருக்கும். தற்போதைய நாட்டின் நடப்பில் மேற் கூறியவை எவருக்கும் இராமல் இருக்க முடியாது தானே! கொஞ்சம் காலமறிந்து நிதானமாக, அமைதியாக செயற்பட்டுக் கொள்ளவும். வீட்டில் கொஞ்சம் கறகறப்பு. புறுபுறுப்பு இருக்கச் செய்யும். எல்லாம் தலைவிதி என்று கொஞ்சம் அமைதியாக இருங்கள் சரியாகிவிடும். பொருள் வரவிருந்தாலும் செலவுகள் புதிய ரூபத்தில் ஏற்படும். புத்திரருக்காகவோ அல்லது சகோதரங்களுக்காகவோ அதிக நேரகாலங்களைச் செலவு செய்வீர்கள். அட்டமத்துச் சனித் தாக்கம் உங்களை குற்றவாளியாக்கக்கூடும். தான் செய்யாத ஒன்றிற்காக வீண்பழி சுமக்கச் செய்யும். அல்லது தண்டனை அடையச் செய்யும். கஷ்ட நஷ்ட நிலையை சனீஸ்வரன் செய்யலாம். எனவேகுலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

**கன்னி:** உங்களுக்கு ஒரு மந்தநிலை ஏற்படும். சொல் வாக்கு செல்வாக்கை இழக்கச் செய்யும். சகோதரங்கள் அபிப்பிராய பேதப்படுவர். புத்திரருக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஓடி ஓடித்திரிவீர்கள். இருப்பினும் எல்லா அலுவல்களும் நன்மையாக முடியும் என எண்ணலாகாது. பொரு

## மகாதேவா ஜோதிடம்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த விந்துக்கு ரூ.10 கோடி நஷ்டஈடு!

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் விந்து வங்கியில் சேமித்து வைத்த விந்தணுக்கள் தொலைந்ததற்காக அவருக்கு பன்னிரண்டரை லட்சம் அமெரிக்க டொலர்கள் (சுமார் பத்துக் கோடி ரூபா) இழப்பீடாக வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

றொபேர்ட் யூபேங்ஸ் ஜூனியர் பிளாஸ்டிக் சர்ஜனாகப் பணிபுரிகின்றார். அவர் மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்தபொழுது நிணநீர் நாள முடிச்சுகளின் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் றொபேர்ட்டுக்கு அறிவுரை ஒன்றை வழங்கினர்.

புற்றுநோய்ச் சிகிச்சை காரணமாக விந்தணுக்களை உற்பத்தி செய்யும் திறனை றொபேர்ட் இழக்கக்கூடும். அதனால் அவர் தனது விந்தணுக்களை இப்பொழுதே வங்கியில் சேமித்து வைக்கலாம். நோய் குணமானதும் அவர் திருமணம் செய்து கொள்ளும்பொழுது சேமித்த விந்தணுக்கள் மூலம் அவர் மனைவி செயற்கை முறையில் கருத்தரிக்க ஏற்பாடு செய்யலாம். அதன் மூலம் அவர் தனது சொந்தக் குழந்தைகளைப் பெற முடியும் என்றனர். அவர்களது அறிவுரையை ஏற்ற றொபேர்ட் தனது விந்தணுக்களை லெனக்ஸி இமானுவேல் மருத்துவ மனையில் சேமிப்புக்காகத் தந்தார்.

றொபேர்ட் குணமடைந்தார். திருமணம் செய்த பின் மருத்துவ மனையை அணுகி தனது விந்தணுக்கள் பாதுகாப்பாக உள்ளனவா என்று விசாரித்தார். அவர்கள் றொபேர்ட்டின் விந்தணுக்கள் தொலைந்து போய்விட்டன என்று கூறினர்.

அதனையடுத்து றொபேர்ட் வழக்குத் தொடர்ந்தார். வழக்கு விசாரணையின் இறுதியில் மல்டிநோமாஷ் பிராந்திய நீதிமன்றம் பன்னிரண்டரை லட்சம் டாலர் நஷ்டஈடாக வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது

# 'ஏர் கண்டிஷனால்' வரும் பல சுவாசக் கோளாறுகள்

'ஏர் – கண்டிஷன்' (குளிர் சாதன வசதி செய்யப்பட்ட அறைகளில் தங்கி வேலை செய்பவர்களுக்கு சுவாசக் கோளாறுகளும் உடல் நலக் கேடும் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்று பிரெஞ்சு டாக்டர் டெகுலேஸ்கு ஆய்வில் கண்டு பிடித்திருக்கிறார்.

ஆஸ்மா, மார்பு வலி, மூக்கு ஒழுகுதல், சைனஸ் தும்மல், தொண்டை வறட்சி, தலைவலி, தொண்டையில் சதை வளர்தல் ஆகிய நோய்கள் குளிரூட்டப்பட்ட அறைகளில் தங்கி வேலை செய்கிறவர்களுக்கு அதிகம் வருகின்றன.

குளிரூட்டி சாதனங்கள் வழியாக வரும் காற்றின் அளவு அதிகமாக இருந்தால் இந் நோய்கள் வரும் அளவு குறைகிறது. காற்று குறைவாக இருந்தால் இந்த நோய்களின் அளவும் தன்மையும் தீவிரமாக இருக்கிறது.

குளிர்சாதனக் கருவிகள் பொருத்தப்படாமல் காற்றோட்டமான அறையில் தங்கி பணி புரிகிறவர்களுக்கும் வசிக்கிறவர்களுக்கும் இந் நோய்கள் வருவதில்லை; வந்தாலும் தீவிரமாக இருப்பதில்லை. மேலும் குளிர்சாதனக் கருவிகள் வழியாக பாக்டீரியாக்களும் வைரஸ்களும் எளிதில் உள்ளே நுழைந்து வியாதியைப் பரப்புகின்றன. நோயாளி ஒருவர் அத்தகைய அறைக்கு உள்ளே இருந்தாலும் அங்கு மற்றவர்களுக்கு அது தொற்றும் வாய்ப்பு அதிகம்.

பேர்லினில் நடைபெறும் மருத்துவ மாநாட்டில் டாக்டர் டெகுலெஸ்கு தமது ஆய்வுக் கட்டுரையை வாசித்தார். குளிரூட்டப்பட்ட அறையில் தங்கி வேலைசெய்யும் 425 பேரையும் சாதாரண அறையில் வேலை செய்யும் 351 பேரையும் அவர் ஆய்வுக்காக சோதனை செய்தார்.

'ஏர் — கண்டிஷன்' அறைகளில் தங்கி வேலை செய்யும் ஊழியர்கள் அடிக்கடி காய்ச்சல், ஜலதோஷம், இருமல், மூச்சுத் திணறல், ஆஸ்துமா ஆகியவற்றுக்காக விடுப்பு எடுப்பது அவருடைய ஆய்வில் தெரிகிறது.

# மிகக் குட்டி விமானம்!

'பாராசூட்' மற்றும்காற்று நிரப்பிய பந்துகளின் உதவியால் வானத்தில் பறப்பது நமக்குத் தெரியும். ஆனால் மெல்லிய அலுமினியக் கம்பிகள் பொருத்தப்பட்ட குட்டி விமானத்தில் பறக்கிறார் நியூஸிலாந்தைச் சேர்ந்த நீல் ஹாரப்.

ஜான்டன் ஹீவ் என்றவானியல் பொறியாளரின் ஒத்துழைப்புடன் இவர் வடிவமைத்துள்ள கம்பி விமானம் பார்வைக்கு 'றொக்கெட்' போலிருக்கும். அலுமினியத்தால் தயாரிக்கப்பட்ட இதன் முகப்புப் பகுதி நீண்ட கம்பு போலிருக்கும். பின்புறம் கம்பிகளுக்கிடையே பைலட் படுத்துக் கொள்ள இடம் உள்ளது.

விமானம் முதலில் பூமியில் இருந்து மேலெழுந்த பிறகு 180 பாகை கோணத்தில் தலை கீழாய் திரும்பிப் பறக்க ஆரம்பிக்கும். அப்போதுவிமானியின் கால்கள் மேற்புறமாகவும். தலைப்பகுதி கீழ்ப்புறமாகவும்இருக்கும்,கொஞ்ச நேரம் தான். பிறகு விமான மோட்டியின் முழுக் கட்டுப்பாட்டில் விமானம் வந்து விடும்.

இந்தக் குட்டி விமானம் 24 குதிரைத் திறன் கொண்ட என்ஜின் பொருத்தப்பட்டது; மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் 200 அடி உயரத்தில் பறக்கக் கூடியது. நியூஸிலாந்து தலைநகர் வெலிங்டனில் இருந்து 40 கி. மீ தொலைவிலிருக்கும் பீகார்க்கி என்ற இடத்தில் நடந்த இந்தக் குட்டி விமானத்தின் வெள்ளோட்ட நிகழ்ச்சி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது.

ஆனால் ஆறே ஆறு நிமிடங்கள் இந்த விமானம் ஆகாயத்தில் பறக்க ஆன செலவு மட்டும் 129 நியூஸிலாந்து டாலர்கள். அதாவது ஏழாயிரம் ரூபாய்க்கும் அதிகம்.

# அமெரிக்காவிலும் சர்வதேச கிரிக்கெட்

சர்வதேசகிரிக்கெட்போட்டிகள் அமெரிக்காவிற்கும் படை எடுக்கப் போகின்றன.

சில வாரங்களுக்கு முன்னர் கனடாவில் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடந்த 'சஹாரா' கிண்ண கிரிக்கெட் போட்டியால் ஏற்பாட்டாளர்களுக்கு கொழுத்த லாபமாம்! இதனால் அடுத்த வருடத்திலிருந்து அமெரிக்காவிலும் இத்தகையகிரிக்கெட் போட்டிகளை நடத்தி லாபம் சம்பாதிக்கலாமா என்ற எண்ணம் பிறந்திருக்கின்றதாம்.

அமெரிக்காவில் இதுவரை காலமும் 'பேஸ் போல்' விளையாட்டே அதிகம் பிரபலம் பெற்றிருந்தது.

# நசுங்கிய காருக்கு நல்ல விலை!

'யானைஇருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்'—என்பார்கள். அது போலத்தான் இந்தக் காரின் கதையும்.

விபத்தில் சுக்கல் சுக்கலாய் நசுங்கிப்போன மெர்சிடாஸ் பென்ஸ் கார் ஒன்றுக்குப் புதுக்காருக்கு இல்லாத மவுசு கிடைத்திருக்கின்றது. அந்த நசுங்கிய காரை இலங்கைப் பணத்தில் கணக்கிட்டால் ஐந்து கோடி ரூபா வரை பணம் கொடுத்து வாங்குவதற்கும் சிலர் தயாராக இருக்கின்றார்களாம். அவ்வளவு போட்டி.

சரி, அந்தக்காரில் அப்படி என்ன விசேஷம்? இந்தக் காரில் பயணம் செய்த போதுதான் இளவரசி டயானாவும் அவரது ஆண் நண்பர் பெய்ட்டும் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்கள். அந்தக் காரை ஞாபகச் சின்னமாக வைத்திருக்கவே இப்போது அடிதடி,போட்டி நடக்கிறது.

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## பிரிட்டிஷ் அரசியின் சொத்துக்கள்!

பிரிட்டனின் அரசி ஆட்சி அதிகாரமற்றவர் என்றாலும் அவர் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவர்.

அவரின்மொத்தச் சொத்து இலங்கைப் பணத்தில் ஐம்பதினாயிரம் கோடி ரூபாவுக்கு அதிகம். நிலமாக சுமார் மூன்று லட்சம் ஏக்கர் நிலம் அவருக்குச் சொந்தமாக உள்ளது. இவற்றில் மத்திய லண்டன் பகுதியில் உள்ள 350 ஏக்கர் நிலத்தின் பெருமதி மதிப்பிடமுடியாதது. இதுதவிர, அவரது நிலங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் தாதுப்பொருள்கள் மூலம் வருடாந்தம் இருபது கோடி ரூபா வருமானம் கிட்டுகின்றது.

அத்துடன் அவர் சேர்த்து வைத்துள்ள கலைப் பொருள்களின் பெறுமதி மிக அதிகம். லியானார்டோ டாவின்சியின் எழுநூறுக்கு மேற்பட்ட ஓவியங்கள், டச்சு, இத்தாலி ஓவியர்களின் படங்கள், பெறுமதி மிக்க பழைய முத்திரைகளைக் கொண்ட 300 ஆல்பங்கள், வைரங்கள் பதிக்கப்பட்ட— அரச குலத்தவரின்—இருபது தலைப் பாகைகள் என்று அவரிடம் உள்ள கலைப் பொக்கிஷங்களின் பெறுமதி மேலும் பல நூறு கோடி ரூபாக்களுக்கும் அதிகம்.

# மிகச் சிறிய செல்லுலார் போன்

பெரிய பெரிய தயாரிப்புகள் எல்லாம் மாறி, அளவில் சிறியதாகி வரும் காலம் இது. சுவற்றிலேயே மாட்டி வைத்துக்கொள்ளும் அளவுக்கு மிகவும் மெல்லிய தொலைக்காட்சிப் பெட்டிகள், கைகளில் கட்டியிருப்பதே தெரியாத அளவுக்கு இருக்கும் மெல்லிய கடிகாரம் போன்றவற்றின் வரிசையில் மிகச் சிறிய 'கிரெடிற் கார்டு' அளவே இருக்கும் செலுலார் போனை 'மோட்டாரோலா' என்ற நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. மொடலின் பெயர் ஸ்டார் டி. ஏ. சி. 70 எடை ஆக 125 கிராம்தான்.

நமக்குத் தேவையான எண்ணுடன் உடனடியாகத் தொடர்பு கிடைத்திடும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த செலுலார் போனில் லித்தியம் பட்டரி பொருத்தப்பட்டிருக்கும். இதன் உதவியுடன் கூடுதலாக 280 நிமிடங்கள் பேசலாம். வாடிக்கையாளர்கள் தேவைப்பட்டால் மேலும் ஒரு பட்டரியையும் இதில் இணைத்துக்கொள்ளலாம். முதலில் பொருத்தப்பட்ட பட்டரி தனது சக்தியை இழக்கும்போது இரண்டாவது பட்டரி தானாகவே இயங்கத் தொடங்கும். இதனால் உரையாடல் பாதியில் முடியக்கூடிய பிரச்சினை இடையாது. இந்தக் குட்டி செலுலார்போனில் இரண்டு வரிகளில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் விதத்தில் "ஆல்பாநியுமெரிக் டிஸ்பிளே" அமைப்பும் இடம்பெற்றுள்ளது.

# கார்களிலும் இனி கறுப்புப் பெட்டி

விமானங்கள் விபத்துக்குள்ளாகும் போது, விபத்துக்கான காரணங்களை அறிந்து கொள்ள அதில் உள்ள கறுப்புப் பெட்டிதான் பெரிதும் பயன்படுகிறது. விபத்து நடப்பதற்கு முன்பு விமானிகளுக்கிடையே நிகழும் உரையாடல், விமானிக்கும் விமான நிலையத்தில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் கடைசியாக நடந்த பேச்சுவார்த்தைகளும் இதில் இருக்கும். விமானங்களில் உள்ளது போன்று விபத்து நடப்பதற்கு முன்பும் பின்பும் நடக்கும் தகவல்களைச் சேகரித்துப் பதிவு செய்யும் கறுப்புப் பெட்டியை இனி கார்களிலும் பொருத்திக் கொள்ளலாம்.

இதற்கான கருப்புப் பெட்டி தயாரிக்கும் முயற்சியில் ஜப்பானைச் சேர்ந்த 'டேட்டா டெக்' என்ற நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

விபத்துக்குள்ளான இளவரசி டயானாவின் காரில் இக் கருவி பொருத்தப்பட்டிருந்தால் கடைசியாக என்ன நடந்தது என்பதை அறிவதற்கு அது மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று கூறுகிறார் இந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர்.

இக் கறுப்புப்பெட்டி மூலம் காரின் கடைசி 20 மணி நேர இயக்கத்தைப் பதிவு செய்ய முடியும். 'நேவிகேடிங் சிஸ்டமாகவும்' இக்கருவி பயன்படும்.

மாதிரி பாதுகாப்புப் பதிவுக் கருவி இந்த ஆண்டு இறுதியில் சோதனைக்காக வெளியிடப்படும். இதன் தற்போதைய விலை 71,000 ரூபாவாக இருக்கும். எனினும் வர்த்தக ரீதியில் இக் கருவி அடுத்த ஆண்டு, ஏப்ரலில் வெளிச் சந்தையில் 30 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படும். முதலில் ஒரு லட்சம் கருவிகளைத் தயாரிக்க இந் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

## இருதயமும் மனைவியும்

மேலை நாடுகளில் இருதய மாற்றுச் சத்திரசிகிச்சைகள் இப்போது சர்வ சாதாரணம். ஆனால் இருதய மாற்று சிகிச்சைக்கு அத்திவாரம் போட்டவர் அமெரிக்க டாக்டரான கிறிஸ்டியன் பெர்னாட்தான். முதன் முதலில் இருதய மாற்றுச் சத்திரசிகிச்சையைச் செய்தவரும் அவர்தான்.

மருத்துவத் துறையில் ஆள்களின் இருதயத்தை மாற்றித் தைக்கும் டாக்டர் பெர்னாட், தனது நிஜ வாழ்க்கையில் ஆள்களையே அடிக்கடி மாற்றுகின்றார். தனது மனைவி ஸ்தானத்தில் இருப்பவரைத் தான் அடிக்கடி மாற்றுகின்றாராம் டாக்டர் பெர்னாட்.

# கிணற்றுள் 22நாள்கள் கிடந்து தப்பிய பெண்

உறவினரால் பாழுங்கிணற்றில் வீசப்பட்ட ஈரானியப் பெண்ணொருத்தி 22 நாள்கள் உணவு இன்றிக் கிடந்த பின்னர் மீட்கப்பட்டாள்.

ஈரானில் கெர்மான் மாகாணத்தில் சர்ஜான் நகரம் உள்ளது. அங்கு வாழும் குடும்பம் ஒன்றில் ஏற்பட்ட தகராறு காரணமாக அதே குடும்பத்தைச் சேர்ந்த கதீஜா ஈரான் நெஜத் என்ற 55 வயதுப் பெண்ணை இருவர் பாழுங்கிணறு ஒன்றில் தள்ளிவிட்டனர். அவள் உயிர் பிழைக்கக்கூடாது என்பதற்காக மேலிருந்து பாறைகளைப் புரட்டியும் விட்டனர்.

ஆனால் கதீஜா ஒருவாறு தப்பிப் பிழைத்துக் கொண்டார். கிணற்றில் தண்ணீர் இல்லை என்ற போதிலும் சிறு ஊற்றுக் கசிவு இருந்தது. அதில் தனது துணியை நனைத்து ஈரத்துணியைச் சப்பி தனது தாகத்தை கதீஜா போக்கிக் கொண்டார்.

உள்ளிருந்தபடி உதவி கோரி அவர் முடிந்த நேரமெல்லாம் கத்தினார். அவர் கத்தியது அவ்வழியாகச் சென்ற விவசாயிகள் காதில் விழ அவர்கள் கதீஜாவை மீட்டனர்.

கதீஜா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவர் நல்லஆரோக்கியத்துடன் இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். இச் செய்தியை ஈரானில் இருந்து வெளியாகும் செய்தித்தாள் ஒன்று பிரசுரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்திய சஞ்சீவி

# சளி சொல்லும் சரிதம்

## நோயற்ற வாழ்வு - I

புதை சேற்றுக் குழிகள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மாட்டிக்கொண்ட மனிதனையோ விலங்கையோ அவை விடுவதில்லை; தன்னகத்தே இழுத்துக் கொள்ளும்.

இத்தகைய பொறிகளைக் கொண்ட ஒரு சூனியக்கார கிழவியின் மாயக்கோட்டை போன்றது எங்கள் உடல். இப்படி ஒட்டவைக்கிற — இழுத்துக்கொள்கிற — சமாச்சாரங்கள் பல உடலின் பாதுகாப்பு அம்சங்களாக இருக்கின்றன.

சுவாசப்பாதை, கிருமிகள் பயணஞ் செய்கிற இராஜ பாதையாக இருக்கிறது. தூசு, துணிக்கைகள், மிதக்கின்ற எச்சில் துளிகள் எனப் பல அழுக்குகளைக் கொண்டது. காற்று அவ்வளவையும் நாங்கள் உள்ளே இழுத்துக்கொண்டால் எங்கள் சுவாசப்பைகள் குப்பைக் கூடையாக மாறிவிடும்.

ஆனால் மூக்கில் இறங்குகின்ற காற்றில் உள்ள அனேகமான தூசு துணிக்கைகள் மூக்கின் ஈரமான உள்மேற்பரப்புக்கள் ஈர்த்துக்கொள்ளும். 90 வீதமானவை இவ்வாறு அகற்றப்பட்டு, ஒட்டப்பட்டு, பொழுது போகாத நேரங்களில் கைக்கு வேலை தருகின்றன.

அதில் தப்பி சுவாசக் குழாய்க்குள் நுழைகின்ற மிகச்சிறிய துணிக்கைகளுக்கு இன்னுமொரு பொறி காத்துக்கொண்டிருக்கும். மூச்சுக் குழாயின் சுவர்களில் தூரிகை போன்ற பிசிர்கள் நீட்டிக் கொண்டிருக்கும். இந்தப் பிசிர்களின் முனையோடு பாகு போன்ற திரவப் படலம் குழாய் முழுக்க காணப்படுகிறது. இது ஒரு புதைசேறு; இதில் தொட்டுக் கொண்டவை 'கப்' பென்று ஒட்டிக்கொள்ளும். அத்தோடு பிசிர்கள் மேல் நோக்கித் தொடர்ச்சியாக அசைந்து கொண்டிருக்கும்.

இந்தப் பாகுப்படலம் சேர்ந்த ''நகரும் படிக்கட்டு'' போல மேல்நோக்கி நிமிடத்துக்கு ஒரு சென்றிமீற்றர் என்ற வேகத்தில் அசையும். இதனால் அதில் ஒட்டிக் கொண்டவர் மேலே வந்த உணவுக்கால்வாய்க்குள் விழுங்கப்படுவார்.

இந்தப் பாகுப்படலம் சில நேரங்களில் வெளியே வருகிறது. அப்போது அதனை நாம் சளி என்கிறோம். சாதாரண மனிதனுக்கு 100 மில்லிலீற்றர் சளி (½ பேணி) தினமும் சுரக்கப்படும்.

இது சில சந்தர்ப்பங்களில் அதிகளவு சுரக்கப்படும். அதனோடு வேறு சில தூசுக்கள் இறந்த கிருமிகள் எல்லாம் சேர்ந்த சுவாசப் பாதையில் தேங்கும். இருமலோடு சளியாக வெளியேறும்.

சாதாரணமாய் இருமல், சளி என்பன சுவாசத் தொற்று நோய்களான, நாட்பட்ட நோய்களான ஆஸ்துமா, கசம் போன்றவற்றின் அறிகுறிகளாக இருக்கின்றன.

சளியின் இயல்பு அடிப்படையாக இருக்கின்ற நோயைக் கண்டு பிடிக்க மருத்துவர்களுக்கு உதவுகிறது. சளியின் நிறம் வெள்ளையாக, மஞ்சளாக, பச்சையாக, இரத்தங்கலந்த சிவப்பாக சில சந்தர்ப்பங்களில் (நிலக்கரி சுரங்கங்களில் வேலை செய்வோரில்) கறுப்பாக எனப் பல நிறங்களில் நோய்களுக்கேற்ப மாறுபடும். சளியின் தன்மை நீர்த்தன்மையாகவோ கட்டிபட்டதாகவோ, மணத்துடன் கூடியதாகவோ இருக்கலாம். ஒரு நாளில் வெளியேறும் சளியின் அளவு ஒரு தேக்கரண்டியிலிருந்து ஒரு டம்ளர் அளவுக்கு மேலும் செல்லலாம்.

இவையெல்லாம் ஒரு மருத்துவருக்கு சளி சொல்லும் நோயின் சரிதமாகும். நெஞ்சில் சளி ஏற்பட்டவர்கள் தங்கள் நோயின் தன்மையை அவதானித்து மருத்துவரிடம் சரியான முறையில் தெரிவிப்பது மிக விரைவில் நோயை அறிந்து சிகிச்சை பெற உதவும்.

சளி, சுவாசப் பாதையை அடைத்துக் கொள்ளும். மூச்சு விடுவதில் சிரமத்தை ஏற்படுத்தும். ஆனால் இருமல், சளியை வெளியேற்றுவதில் துணை புரிகிறது.

சாதாரண நிறத்திலிருந்த சளி மஞ்சளாக மாறினால் சுவாசத் தொற்று ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ளலாம். சளியுடன் இருமல், காய்ச்சல், நிறை குறைதல், களைப்பு போன்ற அறிகுறிகள் நீண்டு நிலைத்து வருமாயின் வைத்தியரை நாட வேண்டும். வெளியேற்றப்படும் சளியை நுணுக்குக்காட்டியின் மூலம் சோதிப்பதனால் மூலம் காச நோய் போன்ற வியாதி

(XI ஆம் பக்கம் பார்க்க)

அ. கிருஷ்ணேந்திரன்
(4 ஆம் வருடம்,
யாழ். மருத்துவபீடம்.)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத்தொடர்ச்சி)

னால் பயம் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களைப். போட்டாலும் அதனால் பெரிதாக நன்மைகள் ஏற்படாது. நண்பர்கள் உதவி செய்வார்கள். இடமாற்றங்களை நிதானமாகச் செய்யவும். எதிர்பாரத கஷ்டங்கள் சிலருக்கு ஏற்படலாம். அவ்வக்காலங்களில் இடங்களை மாற்றி மாறி மாறிச் செயற்பாடுகளைச் செய்வதனால் நன்மைகள் ஏற்படும்.

**துலாம்:** உங்கள் சொந்த அபிப்பிராயங்களை கண்டபடி சொல்லாதீர்கள். அதனால் மற்றவர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாவீர்கள். மாமன் வழியினர்களுடனும் சித்தப்பா முறையினர்களுடனும் அபிப்பிராயபேதங்கள் ஏற்படச்செய்யும். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள், நண்பர்களின் உதவிகளால் நற்பலன்கள் அதிகரிக்கும், வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் வரும். கண்டபடி பிரயாணங்களை செய்யாமல் இருப்பது நல்லது. இனஜனங்கள் குறை சொல்வார்கள். பொறுமையாக இருக்கவும்.

**விருச்சிகம்:** நீங்கள் இக்காலத்தில் தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும். சாணேற முழம் சறுக்கும் என்பார்களே அது போல நடவடிக்கைகள் இருக்கும். பொருள் விஷயத்தில் கொஞ்சம் அவதானமாக இருங்கள். எதிர்பாலாருடன் அவதானமாக இருக்கவும். அதிகளவு செலவு மனக்கலக்கத்தைக் கொடுத்தபடியிருக்கும். தந்தை வழியினருக்கு நல்லதல்ல. மாமன்—மாமி வழியினர்க்கு மாற்றங்கள் காட்டுகின்றது. வீடு, மனை விஷயங்களில் சிலமாற்றங்களும் செலவுகளும் கொடுக்கும். உஷ்ண பீடைகள், கால் உழைவுகள் மாறி மாறிக் காட்டுவதனால் தகுந்த வைத்தியம் செய்து கொள்ளவும்.

**தனுசு:** உங்களுக்கு காலில் நோ, உரசல் காயம், பிடிப்புக்கள் வரலாம். நோ எண்ணெய் பூசவும். ஓடியாடித்திரிவதனால் காரியனுகூலங்கள் ஏற்படும். புகழும் வரும்; சிலருக்குப்புகழும்வரும்; தொழில் ஸ்தானத்தில் மாற்றங்களும் கொடுக்கும். இடமாற்றங்கலளக் கண்டபடி செய்யவேண்டாம். அதனால் நஷ்டங்கள் ஏற்படும். களவுகள் போகலாம். உங்கள் இடங்களில் பாதுகாப்பாக இருக்கவும். கண்ட கண்டவர்களை வீட்டுக்குள் புழங்க விட வேண்டாம். உறவும, பகையும் தரும். இவ்வுலகில் சமாளித்து வாழ்வது கெட்டித்தனமாகும். இடைக்கிடை வீட்டில் கலகலப்பும் இருக்கும். கலக்கமும் வரும். உங்கள் சாதுரியத்தால். சமாளித்துக் கொள்ளவும்.

**மகரம்:** உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். எடுத்ததிற்கெல்லாம் சண்டைபிடிக்காமல் இருக்கவும். சிலர் தாங்கள் செய்யும் களவுகளை மறைப்பதற்கு நல்லவர்களை மாட்டி விடுவார்கள். இந்தமாதிரிச் சம்பவங்கள் உங்களுக்கு நடக்கலாம். செய்யாத குற்றத்திற்காக குற்றவாளியாகி வேதனைப்பட இடம் உண்டு. கவனமாக இருக்கவும். உறவினர்களைக் கௌரவப்படுத்திக் கொள்ளுங்கள். [illegible]களை அலட்சியம் செய்யாதீர்கள். காலத்திற்குத் தக்க கோலமாக எம்மை நாம் மாற்றிக் கொள்ளாவிடில் இவ்வுலகில் வாழமுடியாது. தெய்வ வழிபாடு மிகவும் முக்கியமாகும்.

**கும்பம்:** நீங்கள் அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும். உங்கள் சொல்வாக்கால் செல்வாக்கு பாதிக்கப்படலாம். வெளிநாட்டிலோ, அயல் இடங்களிலோ இருந்து செய்திகள் வரும். உடல் உளைவு, கண் நோ வரலாம். தோல், சொறி, ஆயுதங்களால் பிரச்சினைகள் வர இடம் உண்டு. இடமாற்றங்கள் செய்து நஷ்டப்பட வேண்டாம். பொருள் செலவுகள் திடீரென அதிகரிக்கும். எனவே திட்டமிட்டுச் செலவுகள் செய்யவும். எந்த விஷயத்திலும் நிறைவுகாண முற்படும் நீங்கள் மெல்ல மெல்ல உயர்வுநிலை அடைய முயலவும். தூரத்துச் செய்திகளால் மனநிறைவு ஏற்படும்.

**மீனம்:** உங்கள் குடும்பத்தில் எதிர்பாலாருடன் வாக்குவாதப்பட இடமுண்டு. உடல் நிலைப்பாதிப்புக்கள் வரலாம். கண், கால் போன்ற இடங்களில் அவதானமாக இருக்கவும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும். இடமாற்றங்களையோ, பிரயாணங்களையோ, தவிர்த்துக் கொள்ளவும். அடிக்கடி மறதி கொடுக்கும். பொருள்களில் அவதானமாக இருக்கவும். நண்பர்களை நம்பி பொருள்களை கொடுத்து பகைமையைத்தேடிக்கொள்ளாதீர்கள். எந்தவிஷயங்களிலும் பொறுப்பு நிற்கவேண்டாம். [illegible] சனீஸ்வரனுக்கு பிரீதிசெய்து கொள்ளவும்.

# கவலையில் கலங்காத உளம் நல்கு!

உலகினை நம்பிடேன்.. ஊரினை நம்பிடேன்.
உறவையும் நம்பமாட்டேன்.
உயிர்தந்த 'தேவர்கள்', உடன்வந்த சோதரர்
உரிமையை நம்ப மாட்டேன்,
கலக்கின்ற காதலைச் சீதனக் காணியை
'கலையாடிப்' பெற்ற மகவை
கனவினைக் கல்வியை கவிதையையும் அல்ல
எனையும் நான் நம்பமாட்டேன்.
நிலையான நிசமாக நினைமட்டும் தானடா
நிதம்நம்பிச் சுவாசிக்கிறேன்.
நின்பாதம் சரணென்று நீ ரங்கு அரணென்றுன்
நிழலுக்குள் இடம் தேடுறேன்.

எனைமீறித் துயரங்கள் எரிமூட்ட வரும்போது
அதை நூர்க்கும் வழிதெரிகிலேன்.
இருள்கின்ற முகத்தோடு இதயத்தில் இடியோடு
உறங்காதக் கணம் அழுகிறேன்.
பனிமூடும் மலையாக எனைச்சூழும் சுமையாவும்
விலகாதா எனவுமலைவேன்.
பதற்றத்தில் உன்மீதும் பழிபோட்டு, மனமொன்றிக்
கடன் செய்திடாதும் தளர்வேன்.
வினையாவும் நொடிப்போதில் விழ ,.. வந்து
என் கண்முன்
வியப்பான விடை நல்குவாய்.
விசரன்போல் உன்வாழ்த்தி விதி நீ யென்றுருவாடி
விதிர்ப்பேன்; நீ ஜெயம் நாட்டுவாய்.

'துயரங்கள்' உன்மேலும் உறுதியாய் நம்பிடத்
துணை செய்யும் வழிகாட்டிகள்.
சோகங்கள் நீ எங்கும் சுடர்கின்றாய் என்பதைப்
பறைசாற்றும் தொலைக்காட்சிகள்.
அயலென்ன, புயலென்ன, அகிலமும், அறிவும்உன்
அடையாள அணிவகுப்புகள்.
அனைத்து முன்செயலென்று அறிந்துமேன் சிலநேரம்
அலைபாயும் எனதெளிய ''உள்'' ?
உயிர்க்கூட்டுள் உறவாடி உணர்வுக்குள் கொடியேற்றி
உறைகின்ற எந்தன் தலைவா —
'உடைக்கின்ற நேரத்தில்' உதிராமல் உன் எண்ண
உதவிசெய் நல்லை முருகா!

- தேரடிச் சித்தர் -

# விஞ்ஞான விந்தை

★ உலகிலேயே மிக அதிகமான அணுக்குண்டுகளை வைத்திருப்பதில் மூன்றாவது இடத்தை வகிப்பது உக்ரைன் நாடு. இது சிதறிப்போன பழைய சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த ஒரு குடியரசு

★ கோப்பி குடித்ததும் உற்சாகம் போல் தெரிகின்றதல்லவா? கோப்பியில் உள்ள கஃபின் என்னும் சேர்வைதான் இந்த புத்துணர்ச்சிக்கு காரணம். உண்மையில் கோப்பி கூட ஒரு போதைப் பொருள் தான்.

★ ஒரு 'வானியல் அலகு' என்றால் என்ன தெரியுமா? பூமி, சூரியனிலிருந்து அமைந்துள்ள சராசரித் தூரத்தைத்தான் ஒரு வானியல் அலகு என்கிறார்கள். இதன் அளவு சுமார் 149,407,000 கிலோமீற்றர்கள் ஆகும்.

★ செப்பின் இலத்தீன் மொழிப்பெயர் குப்ரம். இதிலிருந்துதான் ஆங்கிலப் பெயரான கொப்பர் வந்தது. சைப்ரஸ் என்னும் மத்தியதரைக் கடல் தீவில் செப்பு பெருமளவு கிடைத்ததாலே இத்தீவின் பெயரால் அழைக்கப்பட்டு நாளடைவில் 'குப்ரம்' ஆக நிலைத்து விட்டது. சிலர் 'குப்ரம்' வந்தபின்னர் தான் தீவு, சைப்பிரஸ் எனப் பெயர் பெற்றதாக கூறுவர். எப்படியாயினும் சைப்பிரசுக்கும் — குப்ரத்திற்கும் தொடர்புண்டு.

★ தொலைவிலுள்ள பொருள்களைத் தெளிவாகப் பார்ப்பதற்கு சாதாரணமாகப் பயன்படுத்தும் பைனாகுலரை நவீனப்படுத்தி, இப்போது புதியரக இருவிழி தயாரிக்கப்பட்டுள்ளது. 'வீக்காஜியோவிட் 7×42 பி. டி.ஏ' என்னும் மின்னணுவியல் கருவி தொலை தூரப் பொருள்களைக் கிட்ட வைத்துக் காட்டுவதுடன் அவற்றின் திசையையும் பார்ப்பவரிலிருந்து பொருளமைந்துள்ள தூரத்தையும் கணித்து கூறுகிறது.

★ ஓர் இரும்புத் துண்டைச் சூடாக்கச் சூடாக்கச் அதன் நிறமும் இளஞ்சிவப்பு, சிவப்பு, மஞ்சள், வெள்ளை என மாறிக்கொண்டே போகும். இதைப் போலவேதான் நட்சத்திரங்களும் அவற்றின் மேற்பரப்பு வெப்பநிலைக்கேற்ப நிறம் காட்டுகின்றன.

★ அணுவை மேலும் சிறு துணிக்கைகளாகப் பிரிக்க முடியாது என்று நம்பியிருந்தார்கள். 1896 நவம்பர் 23 இல் 'யுரேனிய' அணுக்கள் தாமாக உடைகின்றன என்ற உண்மையை பெக்கரல் வெளியிட்டபோது மேற்கூறிய அணுக்கொள்கையும் உடைந்து போயிற்று.

★ யுரேனியம் — 235 இன் அணுச்சக்தியைக் கொண்டு தான் என்றிகேஃபெர்மி, நீல்ஸ்போர், இயூஜின்லிங்னர் ஆகிய விஞ்ஞானிகள் இணைந்து 1945இல் அணுகுண்டைத் தயாரித்தனர்.

தொகுப்பு:- பு. யசோதரா
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சளி சொல்லும்....

(X ஆம் பக்கத் தொடர்)
களைக்கண்டறிந்து கொள்ளுகின்றனர்.

இருமலோடு சளி வெளியேறுவது சுகத்தை அளிக்கிறது. இறுகிப்போன சளி வெளிவருவதற்கு சிரமந் தருகிற போது இருமல் மருந்துக்கள் (Expectorant) அவற்றை இளக்கி வெளியேறுவதற்கு உதவுகின்றன.

இருமுவதும் சளியை வெளியே துப்புவதும், உடலுக்கு நல்லதுதான். ஆனால் கண்ட கண்ட இடங்களில் துப்புவது, மற்றவர்களுக்கு நல்லதல்ல. சூழலை "சளி"யாக்குவது சுகாதாரத்துக்கு நோய்கள் பரவ ஏதுவாகலாம்.

வெளியிடங்களில் ஒதுக்குப்புறமாக துப்பலாம். வீடுகளில் குழந்தைகள் விளையாடும் முற்றங்களில் துப்பாது, "துப்பல் சட்டி" ஒன்றை உபயோகிக்கலாம்.

சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும் சுவாசப் பயிற்சிகளும் சுவாசத் தொகுதிக்கு நன்மை பயக்கும். எமக்கு நெஞ்சில் உரம்வேண்டும்; நிறையச் சளியல்ல.

# சீடர்கள் வாங்கிய....

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீடர்களுக்கு அந்த மாடு பிடித்திருந்தது.

'என்ன விலை?' என்று கேட்டான் ஒரு சீடன்.

'மற்றவர்களுக்காக இருந்தால் இருபத்தைந்து பணம். ஒரு பணம் குறைந்தாலும் விற்க மாட்டேன். நீங்கள் குருவிற்கு என்று சொன்னதால் இருபது பணத்திற்குத் தருகிறேன். இதைப் போன்ற நல்ல மாடு உங்களுக்கு எங்குமே கிடைக்காது' என்று இனிமையாகப் பேசினான் அவன்.

சீடர்களும் இருபது பணம் கொடுத்து அந்த மாட்டை வாங்கினார்கள்.

மாட்டை அவர்களிடம் தந்த அவன், 'உங்கள் நல்ல வாய்ப்புத்தான் இந்தமாடு உங்களுக்குக் கிடைத்தது. நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். பால் கறப்பதற்கு முன் இதன் கால்களைக் கயிற்றால் கட்டி விடுங்கள். யாராவது ஒருவர் கொம்பைப் பிடித்துக் கொள்ளுங்கள். பிறகு பால் கறந்தீர்களானால் மாடு ஏராளமாகப் பால் தரும்' என்றான்.

சீடர்கள் மாட்டை ஓட்டிக் கொண்டு குருவிடம் வந்தார்கள், நடந்ததை அறிந்த அவர், குறைந்த விலைக்கு மாட்டை வாங்கியதற்காகச் சீடர்களைப் பாராட்டினார்,

பால் கறக்கும் நேரம் வந்தது. ஒரு சீடன் ஓடிச்சென்று பால் கறக்கக் குவளை கொண்டு வந்தான்.

பசுவின் காலைக் கட்டக்கயிறு கொண்டு வரச் சென்றான் இன்னொரு சீடன். கயிறு எங்கும் கிடைக்காததால் அவன் வர நேரமாயிற்று.

வேறு வழியில்லாத சீடர்கள் குருவை மாட்டின் பக்கத்தில் அமரச் சொன்னார்கள். அவரும் அப்படியே செய்தார். சீடர்கள் அவர் தலையிலிருந்த நீண்ட சடையால் மாட்டின் கால்களைக் கட்டினார்கள்.

ஒரு சீடன் பால் கறக்கத் தொடங்கினான், ஆனால், அந்தப் பசுவோ உதைக்கத் தொடங்கியது.

இதைப் பார்த்த இன்னொரு சீடன் மடத்திற்குள் ஓடினான். பெரிய ஊதுகொம்பை அங்கே கொண்டு வந்தான்.

அவர்களைப் பார்த்து, 'மாட்டை விற்றவன் நம்மிடம் என்ன சொன்னான்? பால் கறக்கும்போது கொம்பைப் பிடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை? நாம் அதை மறந்து விட்டோம். அதனால் தான் மாடு தகராறு செய்கிறது' என்று அவன் கொம்பைப் பிடித்து ஊதினான்.

சத்தத்தைக் கேட்டு மிரண்டது மாடு. பிடித்திருந்த சீடர்களை முட்டித் தள்ளியது. அதன் கால்களில் குருவின் சடை கட்டப்பட்டிருந்ததால் அவரை இழுத்துக் கொண்டு ஓடியது.படுகாயம் அடைந்த குரு சடை அறுந்ததால் உயிர் பிழைத்தார். இதனால் அவர் நீண்ட காலம் படுத்த படுக்கையாகக்கிடந்தார்.

ஆக்கம் :- செல்வி. கிருஷ்ணசாமி துர்க்காம்பிகை
(வேலணை சைவப் பிரகாச வித்தியசாலை)

# ஐ. தே. கவின் நழுவல்...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)
வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்யப்படும என்ற குண்டை அரசுத் தரப்பு தூக்கிப் போட்டிருக்கின்றது.

ஏற்கனவே கிழக்கை பல துண்டுகளாக்கும் யோசனைகளால் சிற்றமடைந்திருக்கின்றார்கள் தமிழ் பேசும் மக்கள்.

இந்த நிலையில் —

துண்டாடப்பட்ட கிழக்கின் ஒரு பகுதியை வடக்குடன் இணைப்பதற்கு சர்வ ஜன வாக்கெடுப்பு என்றால் தமிழ் மக்கள் சீறுவார்கள்; கிழக்குப் பிரிந்து போகவே அது வழிசெய்யும்; தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாடு அடிபட்டுப் போய்விடும்; அது தமிழ் மக்களின் அடிப்படை நலன்களையும் தமிழ்க் கட்சிகளின் குறிக்கோளையும் சிதைத்து விடும்.

எனவே, எக்காரணம் கொண்டும், எந்தச் சாக்குப் போக்கைச் சொல்லியும் அதிகாரப் பரவலாக்கல் அலகைத் தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்புநடத்தும் திட்டத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது; ஏற்றுக் கொண்டு மக்கள் முன்போக முடியாது; அப்படி ஏற்றுக் கொள்வதும் நியாயமானதுமல்ல என்பது தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குத் தெரியும்.

எனவே தெரிவுக்குழுவில் அதிகாரப் பகிர்வுகுறித்து திட்டவட்டமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் — அரசைப் பகைத்துக் கொண்டு — இணைப்பைத் தீர்மானிக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை கடுமையாக எதிர்க்க வேண்டிய — கட்டாய நிலைக்கு தமிழ்க் கட்சிகள் தள்ளப்பட்டிருக்கும்.

ஆனால் தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை இப்போதைய நிலையில் அவற்றால் அரசை எதிர்க்க இயலாது; எதிர்க்கவும் முடியாது.

ஆகவே தெரிவுக்குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கும் நிலை ஏற்பட்டிருந்தால் தமிழ்க் கட்சிகள் 'இருதலைக் கொள்ளி எறும்பாய்' தவித்துப் போயிருக்கும்.

தெரிவுக்குழு இறுதித் தீர்மானம் எடுக்காமல், அரசின் யோசனையாக தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடிவு செய்ததால், தமிழ்க் கட்சிகள் பெரும் பிரச்சினையில் இருந்து இப்போது தப்பிக் கொண்டன.

என்றாலும் இப்படித் தப்பியது நிரந்தரமான தப்புதல் அல்ல. என்றோ ஒருநாள் இந்த விவகாரத்திற்கு — நெருக்கடிக்கு — தமிழ்க் கட்சிகள் முகம் கொடுத்துதான் ஆக வேண்டும்.

அது தெரிவுக் குழுவில் இல்லாமல் நாடாளுமன்றத்திலாக இருக்கும்; இன்றைய தினமாக இல்லாமல் இன்னும் ஆறுமாதம் கழித்து வருவதாக இருக்கும்.

வடக்கு—கிழக்கு இணைப்புக் குறித்தும், அதுபற்றித் தீர்மானிக்க கிழக்கில் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்தும் —

தமிழ்—சிங்களத் தரப்புகளிடையே கடும் கருத்து வேறுபாடு காணப்படுவதன் காரணமாக —

"வடக்கு — கிழக்கு இணைந்த அதிகாரப் பரவலாக்கல் அலகு தனது இரண்டு ஆட்சிக் காலத்தை (சுமார் பத்தாண்டுகள்) முடித்த பின்னர் — அப்போது சுமுக நிலை இருந்தால்— அது வரை இணைப்பின் மூலம் தாங்கள் பெற்ற அனுபவத்துடன் இணைப்பைத் தொடரலாமா என்பது குறித்து கிழக்கு மக்கள் தீர்மானிப்பதற்கான சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தலாம்" — என்ற நடுவுநிலை யோசனை ஒன்று சில தமிழ்க் கட்சிகளின் சார்பில் அரசுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது

இந்த சமரசத் திட்டத்தை ஏற்பதன் மூலம் நிபந்தனையுடனேயே வடக்கு—கிழக்கு இணைக்கப்படுகின்றது என்று சிங்களவருக்கும் —

வடக்கு—கிழக்கு இப்போதைக்குப் பிரிக்கப்படமாட்டாது என்று தமிழருக்கும் — தெரிவித்து இரு தரப்பையும் ஓர் இணக்கத்துக்குக் கொண்டு வர வைக்கலாம் என்று அத்தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

இதுதான் அரசு மனதில் வைத்திருக்கும் திட்டம் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. அது உண்மையா என்பது அடுத்து வரும் வாரங்களிலோ, மாதங்களிலோ தெரிந்து விடும்.

★ ★ ★

## அரசமைப்பை மாற்ற வழி?

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு ஆதரவில்லாமல் தீர்வுத் திட்டம் எதனையும் நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாது. அதற்கு ஐ. தே. கவின் ஆதரவு தேவை. ஐ. தே. க. ஆதரவு தராவிட்டால் அரசு என்ன செய்யும்? அதற்கு ஜனாதிபதிகூறும்பதில்என்ன?

"எம்மிடம் சரியான திட்டம்உள்ளது. அதற்கானசட்ட உபாயங்களை ஆராய வேண்டியுள்ளது. அதனை இப்போது கூறமுடியாது.

மக்கள் விருப்பப்படி அரசமைப்பை மாற்றும் எந்த அரசாங்கத்தையும் அரசமைப்பால் தடுக்க முடியாது.

பெரும்பான்மை மக்கள் விருப்பப்படி அரசமைப்பை மறுசீரமைக்கும் போது அதனை தற்போதுள்ள அரசமைப்பு, சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு ஆதரவு என்றெல்லாம் கூறி தடுக்க முடியாது. அப்படிப் பார்த்தால் நாட்டில் அடுத்த ஐந்நூறு வருடங்களுக்கு அரசமைப்பை மாற்ற முடியாது.

பத்து வருடத்தில் 16 முறை திருத்தப்பட்ட இந்த அரசமைப்பை இன்று நாட்டின் நலன் கருதி மாற்ற முடியாது என்றால் அது நீதியா?

உலகில் எந்த இடத்திலும் இத்தகைய அரசமைப்பு இருந்ததில்லை.

1994 பொதுத் தேர்தல் எண்பதுவீத தொகுதிகளில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வென்றது. ஆனால் நாடாளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மை ஆசனமே எமக்குக் கிடைத்தது.

இந்தத் தேர்தல் முறையின் கீழ் ஒரு கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு ஆசனம் கிடைக்கப் போவதில்லை. அப்படியாயின் தற்போதைய அரசமைப்பில் ஒரு புள்ளியை அல்லது 'கமாவை' இடுவதற்கு மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை தேவை என்று கூறுவதை ஏற்க முடியுமா?" — என்று கேட்கிறார் ஜனாதிபதி. ★

[VII ஆம பககத் தொடா]

# புதிர்களுக்கான விடைகள்

## உங்களால் முடியுமா?

புதிருக்கான விடைகள்;

1.



2.



## முயன்று பாருங்கள்!

புதிருக்கான விடைகள்;-

i) தாயகம்
ii) கண்டி
iii) வாகனம்
iv) புதையல்
v) கோசலம்
vi) மந்திரம்
vii) சாமரம்
viii) விரதம்

## கண்டு பிடியுங்கள்

புதிருக்கான விடைகள் :

அ) தானம்
ஆ) மானம்
இ) சதா
ஈ) மாதா
உ) சமானம்
ஊ) சனம்
எ) சமா
ஏ) தாம்

# கவிதை வடிவம்...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)
எவ்வளவு எளிமையாக இந்த மண்ணின் மூத்து அண்ணன் த. ஜெயசீலன் கையாண்டிருக்கிறார்.

"அன்புள்ள மண்ணே அகதி முகமூடி
கொண்டு பிரான்சில்குடியேறி—உன்னிதத்தை
காணத் துடித்தெழுதும் கண்ணீர் கடிதமிது
நீநலமா! நானுள்ளன் நீர்த்து."

— இது ஒரு நிகழ்கால உதாரணம்.

"அவன் போருக்குப் போனான் — நான்
போர்க்களமானேன்"

— அற்புதமான எளியபடிமம்.

ஏன் புதுக்கவிதைகள் ஒன்றும் குறைச்சலில்லை. ஒரே வரியில் ஓர் அற்புத காவியத்தையே சித்திரிக்கிறான் இக்கவிஞன்.

புத்தகம்: கற்பை இழக்காத பரத்தை.
தாஜ்மகால்: வெண்டளையால் முடிந்த வெண்பா. (மரபியலை எவ்வளவு அழகாகப் புதுமைக்குள் புகுத்தியுள்ளார்?)
புன்னகை: பற்களென்ற முட்களே பூக்கும் மலர்.
காமத்துப்பால்: கடைப்பால் என்றாலே கலப்புப் பால்தான்!

இதே புதுக்கவிதைக் காரன் அப்துல் ரகுமான் சிலப்பதிகாரத்தின் சாராம்சத்தை எளிய மரபு வடிவில் கொடுக்கிறார்.

"பால் நகையாள் வெண்முத்துப்
பல் நகையாள் கண்ணகித்தன்
கால் நகையால் வாய்நகைபோய்
கழுத்து நகை இழந்தகதை"

— என்ற ஒரு சந்தலயத்தில் சிலப்பதிகாரச் சாராம்சத்தையே தந்து விடுகிறார். கவிஞரின் இத்தகைய போக்கு வரவேற்கத்தக்கது. கவிஞர்கள் தங்களுக்குத் தனித்தனி வடிவமுத்திரைகளைக் கொண்டிராமல் தேவைக்கேற்ப பொருத்தமான வடிவங்களைப் பயன் படுத்த வேண்டும். பெண்ணுக்கு மலையேறும் போது, மைதானத்திலும் பஞ்சாபி, சுடிதார் அழகும் செளகரியமும் கொடுக்கும். அது போலத் திருமணத்திற்கும் தீப நடனத்திற்கும் புடைவை எழிலைத் தருமல்லவா? அது போலத் தமிழ்ப் பெண்ணுக்கு உங்கள் பாவடிவங்களை ஆபரணங்களாகப் பூட்டுங்கள்; விலங்காகப் பூட்டி உங்கள் உங்கள் பக்கத்திற்கு இழுத்துச் செல்ல முயலாதீர்கள்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகாண முடியாத பிரச்சினைகளில் ஒன்றாக மாறி வருகின்ற காஷ்மீர்!

## இந்திய - பாக் வெளியுறவு செயலர் நடத்திவந்த சுற்றுப்பேச்சுகள் முறிவு

இந்திய — பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்களிடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைமை —

இந்திய — பாகிஸ்தான் எல்லையில் இரு தரப்பினருக்கும் இடையில் சமீபத்தில் இடம் பெற்ற மோதல்கள் —

ஆகியவை காரணமாக சர்வதேச கவனம் உபகண்டம் பக்கம் மீண்டும் திரும்பி இருக்கிறது.

1947 இல் சுதந்திரம் அடைந்த பின்னர் மூன்று யுத்தங்களை நடத்திய இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்த 50 வருடகாலமாக தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையில் இருந்து வருகின்றன.

கடந்த வாரம் இந்திய — பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் இந்தியாவின், கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு — காஷ்மீரில் சந்தித்து எல்லையில் அடிக்கடி இடம்பெறும் மோதல்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது குறித்து ஆராய்ந்தனர்.

எனினும் எதிர்காலத்தில் மீண்டும் மோதல்கள் ஏற்படமாட்டாது என்பதற்கு அச்சந்திப்பில் உத்தரவாதம் எதுவும் கிடைக்கவில்லை.

### காஷ்மீர் பிரச்சினை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முக்கிய பிரச்சினைகளில் காஷ்மீர் பிரச்சினை முதலாவது இடத்தை வகிக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீரடையாமல் இருப்பதற்கு முக்கிய காரணமும் இந்தப் பிரச்சினை தான்.

இந்திய மாநிலங்களில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாநிலம் ஜம்மு — காஷ்மீர்.

காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்கவேண்டும் அல்லது காஷ்மீர் தனிநாடாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை. ஜம்மு — காஷ்மீரில் வலுப்பெற்று வருகிறது.

டசின் கணக்கான முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் இதற்காக ஜம்மு — காஷ்மீருக்குள் இருந்து போராடி வருகின்றன.

இந்தக் குழுக்களுக்கு பாகிஸ்தான் ஆயுத விநியோகம் உட்பட சகல உதவிகளையும் வழங்கி வருகிறது.

பாகிஸ்தானில் இருந்து ஜம்மு — காஷ்மீருக்குள் ஊடுருவும் முஸ்லிம் ஆதரவுத் தீவிரவாதக் குழுக்களை ஒழித்துக் கட்டும் முயற்சியில் இந்தியா இதுவரை வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. தாக்குதல் வேகத்தைக் குறைக்கவே முடிந்தது.

பாகிஸ்தானின் கூலிப் படைகள் மட்டும் அல்ல! ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் கூலிப்படைகளும் ஜம்மு — காஷ்மீருக்குள் ஊடுருவி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஹர்கட் உல் —அன்ஸார்

இத்தகைய தீவிரவாதக் குழுக்களில் ஒன்று தான்.

**உலக உலா**
என்.பி.சீலன்

HUA என்று அழைக்கப்படும் ஹர்கட் உல் — அன்ஸார் (Harkat Ul — Ansar) என்ற இயக்கம்.

சமீபத்தில் அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்ட 30 பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இந்த இயக்கமும் இடம் பெற்றுள்ளது.

இந்த இயக்கம், காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர வேண்டும் என்று கோரி வருகிறது. இதன் அலுவலகம், ஆயுதப் பயிற்சி முகாம் எல்லாம் பாகிஸ்தானுக்குள்ளேயே இயங்கி வருகின்றன.

பாகிஸ்தானில் உள்ள ஹர்கட் உல்—அன்ஸார் இயக்கத்தின் முகாம்களை பாகிஸ்தான் அரசு மூட வேண்டும் என்றும்—

இதற்கு அமெரிக்கா பாகிஸ்தான் மீது நிர்ப்பந்தம் செலுத்த வேண்டும் என்றும் இந்தியா கோரி வருகிறது.

ஜம்மு—காஷ்மீரில் உள்ள ஏனைய தீவிரவாத இயக்கங்களுக்கும் அமெரிக்கா தடைவிதிக்க வேண்டும் என்றும் இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த இயக்கம் மீதான, தடை உத்தரவு. காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா இதுவரைகடைப்பிடித்து வந்த கொள்கையில் சிறிய மாற்றம் ஏற்படும் அறிகுறியாக, கருதப்படுகிறது.

1990இல் ஜம்மு—காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில்மோதல்கள் அதிகரித்ததை அடுத்து ஜம்மு—காஷ்மீர் மாநிலம் இந்தியாவின்நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

அதன் பின்னர் கடந்த ஆண்டே அங்கு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டு பாரூக் அப்துல்லா முதலமைச்சராகி உள்ளார்.

### இந்தியாவின்பிடியில் காஷ்மீர் சிக்கியது எப்படி?

1846 சிக் யுத்தத்தை (SIKH WAR) அடுத்து அம்ரிட்சர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உயர் சாதி இந்துவான குலாப் சிங் (GULAB SINGH) என்பவரிடம் காஷ்மீர் கையளிக்கப்பட்டது.

1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்த சமயம் காஷ்மீரில் மகாராசாவாக இருந்தவர் சேர் ஹரிசிங் (SIR-HARI SINGH) என்ற இந்து. இவர் காஷ்மீரை இந்தியாவிடம் தற்காலிகமாக ஒப்படைத்தார்.

இந்த இணைப்பை காஷ்மீரில் உள்ள முஸ்லிம்கள் எதிர்த்தனர்.

இதன் விளைவே முதலாவது இந்திய — பாகிஸ்தான் யுத்தம் ஆகும்.

இந்த யுத்தத்தில் முஸ்லிங்களுக்கு ஆதரவாக பாகிஸ்தான் படைகள் நேரடியாக சண்டையில் ஈடுபட்டன.

யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட, 1949 ஜனவரிமுதலாம் திகதி யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.



பாரூக் அப்துல்லாவும் இந்தர்குமார் குஜ்ராலும் கடந்த வாரம் ஜம்மு — காஷ்மீரில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தப் பிரகாரம் யுத்த நிறுத்தம் ஏற்பட்ட சமயம் காஷ்மீரில் இந்தியப்படைகள் வசம் இருந்த பகுதி (ஜம்மு—காஷ்மீர்) இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழும்—

பாகிஸ்தான் படைகள் வசம் இருந்த பகுதி (அஸாத் காஷ்மீர்) பாகிஸ்தானின் கட்டுப்பாட்டின் கீழும்— விடப்பட்டன.

எதிர்காலத்தில் முழு காஷ்மீரிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்பதிலும்—

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் அல்லது பாகிஸ்தானுடன் இணைவது குறித்து தீர்மானிக்கலாம் என்பதிலும்—இந்தியாவும் பாகிஸ்தானும் அப்பொழுது இணக்கம் கண்டன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி தற்பொழுது 48 ஆண்டுகள் கடந்து விட்டன. சர்வஜன வாக்கெடுப்பு இன்னும் நடைபெறவில்லை.

### காற்றில் பறக்கவிடப்பட்ட வாக்குறுதி

1947 யுத்தத்தில் காஷ்மீரில் பாகிஸ்தான் கைப்பற்றிய பகுதியை (அஸாத் காஷ்மீர்) பாகிஸ்தானிடம் விட்டுவிட்டு ஜம்மு-காஷ்மீரை தன்னுடன் வைத்துக் கொள்வது என்று இந்தியா தீர்மானித்து விட்டது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கோரும் ஐ.நா. தீர்மானத்தையும் அது தூக்கி எறிந்துவிட்டது.

காஷ்மீர் பிரச்சினைக்கு 1972 சிம்லா ஒப்பந்தத்தின் பிரகாரம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு.

1971 [illegible] பின்னர் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் சுல்பிஹார் அலி பூட்டோவும் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் சிம்லாவில் சந்தித்து செய்து கொண்ட ஒப்பந்தமே சிம்லா ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையிலான பிரச்சினைகளை பரஸ்பரம் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரமே இந்திய—பாக் பேச்சுக்கள் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் நடைபெற்று வந்தன. இந்தப் பேச்சுக்களின் போது காஷ்மீர் விவகாரம் வந்தபோது பேச்சுக்கள் 1994 ஆம் ஆண்டு முறிந்து போயின.

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய வழிமுறைகளை பாகிஸ்தான் ஆராய முற்பட்டபோதே பேச்சுக்கள் முறிந்தன.

சுமார் மூன்று ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பமான பேச்சுக்கள் தற்போது மீண்டும் குழம்பிப் போனதற்கும் இந்த காஷ்மீர் விவகாரம் தான் காரணம் ஆகும்,

இந்தியாவுடனான பேச்சுக்களில் காஷ்மீர் தொடர்பான (சர்வஜன வாக்கெடுப்பு உட்பட) முழுப் பிரச்சினையையும் விவாதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது.

ஆனால் காஷ்மீர் தொடர்பான தனது அடிப்படைக் கொள்கையில் இருந்து விடுபட்டுப் பேச்சை நடத்த இந்தியா தயாரில்லை.

### மாலைதீவு சந்திப்பே பேச்சுக்கு மீண்டும் வழிவகுத்தது

இந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வழி வகுத்தவர்கள் இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ராலும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புமே.

இந்த ஆண்டு முற்பகுதியில் மாலைதீவில் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசினர். இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் விவகாரங்களை அணுகுவதற்கு இரு நாடுகளையும் கொண்ட கூட்டுக்குழுக்களை நியமிப்பதற்கு அப்பொழுது இணக்கம் காணப்பட்டது.

இந்தக் கூட்டுக்குழுக்களை நியமிப்பது தொடர்பான நடைமுறைகளை ஆராய இரு நாடுகளின் வெளியுறவுச் செயலர்களும் சந்தித்துப் பேசுவது என்றும் முடிவு காணப்பட்டது.

இதன் பிரகாரமே இந்திய வெளியுறவுச் செயலர் கே. ரகுநாத்தும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ஷாம்ஷட் அஹமட்டும் புதுடில்லியிலும் இஸ்லாமாபாத்திலும் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்தி முடித்திருந்தனர்.

முதலாவது சந்திப்பு மார்ச் மாதமும் இரண்டாவது சந்திப்பு ஜூன் மாதமும் மூன்றாவது சந்திப்பு செப்ரெம்பர் மாதமும் இடம்பெற்றன.

முதலாவது சந்திப்பு சுமுகமாக நடைபெற்றது.

இரண்டாவது சந்திப்பின் போது 8 அம்சங்களைக் கொண்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. இந்த 8 அம்சங்களில் 2 அம்சங்கள் காஷ்மீர் தொடர்பாக எத்தகைய அணுகுமுறைகளைக் கையாள்வது, காஷ்மீரின் சமாதானம் பாதுகாப்பு என்பன அடங்கி இருந்தன.

மூன்றாவது சந்திப்பு செப்ரெம்பர் மாதம் நடைபெற்றபோது மேற் குறிப்பிட்ட இரு அம்சங்கள் குறித்தும் இந்தியா தனது எதிர்ப்பைத் தெரிவித்தது.

அதாவது இரண்டாவது சந்திப்பின்போது வழங்கிய வாக்குறுதியில் இருந்து இந்தியா பின்வாங்கியது.

இந்தியாவின் இந்த மனமாற்றம் காரணமாக நான்காவது சுற்றுப்பேச்சுக்கான திகதி குறிப்பிடாது இந்தச் சந்திப்பு முடிவடைந்தது. இதுவரை நான்காவது சுற்றுப் பேச்சுக்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

ஸ்கொட்லாந்தின் எடின்பேர்க் நகரில் நேற்று காமன்வெல்த் உச்சிமாநாடு ஆரம்பமாகி உள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து உள்ள எடின்பேர்க் செல்லும் இந்திய—பாகிஸ்தான் பிரதமர்கள் மீண்டும் சந்தித்து வெளியுறவுச் செயலர்கள் நடத்திய பேச்சில் ஏற்பட்ட முட்டுக்கட்டை குறித்து ஆராய உள்ளனர்.

இந்த ஆண்டு மூன்றாவது தடவையாக குஜ்ரால்—நவாஸ் ஷெரீப் சந்திப்பு இடம் பெறுகிறது.




கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ. நா. கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்ற சமயம் இரு பிரதமர்களும் சந்தித்துப் பேசினர்.

பிரதமர் குஜ்ரால் அயல் நாடுகளுடன் இந்தியா நல்லுறவுகளைப் பேணவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு இருப்பதால் அவருடைய பதவிக் காலத்தில் இந்திய தரப்பில் ஏதாவது சில விட்டுக் கொடுப்புகளை பாகிஸ்தான் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org